# ஆர் எஸ் எஸ் எனும் மர்மதேசம்



அருணன்

# ஆர்எஸ்எஸ் எனும் மர்மதேசம்

## அருணன்

**South Vision Books**

South Vision Books
southvisionbooks@gmail.com

# நூலாசிரியரின் வேண்டுகோள்

தமிழ்நாட்டிலும் இன்று "ஆர்எஸ்எஸ்" என்பது தெரிந்த பெயராகிப் போனது. அதற்குக் காரணம் தங்களை வழிநடத்துவது அதுவே என்று பாஜக கட்சியே வெளிப்படையாகச் சொல்லுவதுதான். முன்புதான் அதை மறைப்பார்கள், நாம் சொன்னாலும் மறுப்பார்கள். மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு தைரியம் பெற்றவர்களாக அதை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகிறார்கள்.எனவே, நாமும் ஆர்எஸ்எஸ் பற்றிய உண்மைகளைத் தமிழக மக்களுக்குச் சொல்ல வேண்டியவர்களாகிப் போனோம்.

எத்தனையோ அமைப்புகள் நாட்டில் இயங்குகின்றன, அவற்றில் ஒன்று ஆர்எஸ்எஸ் என்று லேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஓர் அரசியல் கட்சி பல துணை அமைப்புகளை நடத்தும்.ஆனால், ஆர்எஸ்எஸ் எனும் அமைப்போ ஓர் அரசியல்கட்சியை நடத்துகிறது, அதை மத்தியில் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியிருக்கிறது. அப்படியாக நாட்டின் அரசியல் அதிகாரத்தை அடைந்திருக்கிறது. இது சாதாரண விஷயம் அல்ல, சரித்திர வினோதம்.

இத்தனைக்கும் அது இப்போதும் தன்னை "கலாச்சார அமைப்பு" என்றே அழைத்துக் கொள்கிறது! இது கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தையும், கலாச்சாரத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான நெருங்கிய உறவையும் ஒருபுறம் உணர்த்துகிறது என்றால், மறுபுறம் கலாச்சாரமானதுஅரசியல் நோக்கத்தை மறைக்கும் பிரமாதமான மூடுதிரையாக விளங்கக்கூடும் என்பதையும் காட்டுகிறது. இதனாலேயே ஆர்எஸ்எஸ்சின் முகம் ஒன்றாகவும் அகம் ஒன்றாகவும் ஆகிப்போனது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" எனும் பழமொழி எல்லாம் இங்கே பொருந்தவில்லை. ஆர்எஸ்எஸ் என்பது ஒரு மர்மதேசமாகிப் பானது. அதன் தோற்றத்தைக் கண்டு ஏமாந்தவர்கள் பலர்.

நல்லவேளையாக அதன் உண்மை சொரூபத்தை உணர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் வரலாற்றுபூர்வ ஆய்வு நோக்கு கொண்டு தக்க ஆதாரங்களுடன் அதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் ஏ. ஜி. நூரானி. "ஆர்எஸ்எஸ்: இந்தியாவுக்கான ஓர் அச்சுறுத்தல்" எனும் பெருநூலை அவர் 2019ல் எழுதினார். இந்தச் சிறுநூலை நான் எழுதுவதற்கு  அதுதான் அச்சாரம் போட்டுக் கொடுத்தது. அவருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி.

இந்திய சமூக வரலாறு பற்றிய எனது வேறு சில நூல்களுக்காக நான் ஏற்கெனவே ஆர்எஸ்எஸ் பற்றி ஆய்வு செய்திருந்தேன். குறிப்பாக அதன் தலைவர் கோல்வால்கரின் "சிந்தனைக் கொத்து"நூலைப் படித்திருந்தேன். அந்த அமைப்பு வெளியிட்டிருந்த "ஆர்எஸ்எஸ் தீர்மானிக்கிறது" எனும் அதன் தீர்மானங்களது தொகுப்பு நூலும் கைவசம் இருந்தது. "நாம் அல்லது நமது தேசியத்தின் வரையறை" எனும்

கோல்வால்கரின் நூலை அந்த நாளில் தேடிக் கொண்டிருந்தேன். இப்போது கூகுளில் கிடைத்தது. போதாக்குறைக்கு சாவர்க்கர் எழுதிய "இந்துத்துவா" புத்தகமும் இருந்தது.

தமிழகத்தில் ஆர்எஸ்எஸ்சின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள அதன் துணை அமைப்பாகிய இந்து முன்னணியின் அதிகாரபூர்வ இணையதளம் உதவியது. அதில் அது தனது சாதனைகள் என்று வெளியிட்டுள்ள ஆவணம் நல்ல தரவாக இருந்தது. இவற்றோடு அவ்வப்போது சந்தேகம் வரும்போதெல்லாம் அவற்றைத் தீர்த்து வைக்கும் வகையில் கூகுளில் நல்ல சாட்சியங்கள் கிடைத்தன. எதற்கு இதையெல்லாம் சொல்கிறேன் என்றால் இது சிறு நூல் என்றாலும் இதன் பின்னால் உள்ள உழைப்பு சிறியது அல்ல என்பதை உணர்த்தவே. சங் பரிவாரத்தினர் ஆதாரமின்றி எத்தனையோ விஷயங்களை அவிழ்த்து விடுவார்கள், ஆனால் பிறரை நோக்கி மட்டும் "எங்கே ஆதாரம்?" என்பார்கள். அவர்களுக்காக மட்டுமல்லாது, நியாய உள்ளம் படைத்த நல்ல வாசகர்களுக்காகவும் உரிய ஆதாரங்களுடன் இந்த நூல் தரப்பட்டுள்ளது.

"ஒரு காலத்தை ஆளும் கருத்து ஆளும் வர்க்கத்தின் கருத்தே" என்பார் மார்க்ஸ். அது எவ்வளவு உண்மை என்பதை இந்தியாவில் இன்று நாம் பார்த்து வருகிறோம். அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள் பலவும் இன்று ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களது பரிவாரத்தின் ஆளுகைக்கு ஆட்பட்டுள்ளன. எங்கும் அவர்களது சொந்த தர்மங்களே பொது நியாயங்களாக எதிரொலிக்கின்றன. ஆனாலும் அவை காட்டுக் கூச்சல்களே. காரணம் அவை அநீதியின் குரல்கள். அவற்றுக்கு மத்தியில் எதிர்ப்புக் குரல்களும் எழுகின்றன. அவை மெல்லியவை என்றாலும்

அவையே சுகமான சங்கீதங்கள். காரணம் அவை நீதியின் குரல்கள். அப்படித்தான் இந்தச் சிறுநூலும் எழுந்திருக்கிறது.

இதை முடிந்த அளவு மக்களிடம் கொண்டு செல்ல வேண்டியது மதநல்லிணக்கத்தையும் மதச் சார்பற்ற குடியரசையும் காக்கும் எண்ணம் உள்ள அனைவரது கடமையாகும். "தீக்கதிர்" ஏடு இதை தொடராக வெளியிட்டது. அதற்கு எனது நன்றி உரித்தாகிறது. அப்போதே இதை யாராவது நூலாக வெளியிட மாட்டார்களா என நினைத்தேன். இந்தக் கொரோனா காலத்தில் நூல் வெளியீடும், விற்பனையும் பெரிதும் முடங்கிக் கிடக்கின்றன. யார் வெளியிடுவது? இதோ ஒரு நண்பர் ஆர்வத்தோடு முன்வந்திருக்கிறார். அவருக்கு எனது அன்பு பாராட்டு. இதை முன்மாதிரியாகக் கொண்டு வேறு சிலரும் வெளியிட  முன்வந்தால் அது ஜனநாயகத்திற்கு செய்யும்  தொண்டாகும், காலத்தே செய்யும் சேவையாகும்.

பக்தி தொடர்பான ஒரு  படத்தை வெளியிட்டு இதை பத்து பேராவது மேற்கொண்டு வெளியிடும்படிச் செய்தால் அவர் வீட்டில் வளம் கொழிக்கும் என்று ஆசை காட்டுவதைப் பார்க்கிறேன். அப்படி அதில் நடக்கிறதோ இல்லையோ, இந்த நூலைப் பத்துப் பேர் படிக்கும்படிச் செய்தால் அவரது நெஞ்சில் மிகப் பெரிய திருப்தி கிடைக்கும் என்று நிச்சயம் சொல்வேன். காரணம் இதைப் படிக்கிறவர்களில் பலரும் ஆர்எஸ்எஸ்சின் ஏமாற்றுவித்தைகளை இனி நம்ப மாட்டார்கள்; இதைவிட வேறு திருப்தி ஒரு நல்ல மனிதருக்கு என்ன வேண்டும்?

**அருணன்**
13.08.2020

# 1. இந்துத்துவா பிதாமகன் ஆங்கிலேயரின் ஓய்வூதியர்!

பிரபல வழக்கறிஞரும் எழுத்தாளருமான ஏ. ஜி. நூரானி “தி ஆர்.எஸ்.எஸ்.” எனும் ஒரு நூலை எழுதியிருக்கிறார்.“லெப்ட் வேர்ட்” பதிப்பகம் வெளியிட்டுள்ள இதில் 25 அத்தியாயங்களும், 16 பின்னிணைப்புகளும் உள்ளன. புத்தகத்தைப் புரட்டியவுடன் வருவது அண்ணல் அம்பேத்கரின் இந்த அழியாத சாட்சியம்: “இந்து ராஜ்யம் என்பது வந்தால் அது இந்த நாட்டிற்கு பேரழிவாக இருக்கும். எனவே, அதை எப்பாடுபட்டேனும் தடுத்தாக வேண்டும்”. (“பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை”, 1946)
(இந்தப் புத்தகத்தை முன்வைத்து தீக்கதிர் முக நூல் வழியாக நான் ஆற்றிய தொடர் சொற்பொழிவுதான் இங்கே எழுத்து வடிவம் பெறுகிறது.)

இந்த நூலில் உள்ள முகவுரையில் ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கருக்கு 1948 நவம்பர் 10ல் பிரதமர் நேரு எழுதிய கீழ்க்கண்ட வாக்கியங்கள் உள்ளன:
“*ஆர்எஸ்எஸ் அறிவித்துள்ள நோக்கங்களுக்கும் அதன் உண்மையான நோக்கங்கள் மற்றும் அதனு டன் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் பல வடிவங்களிலும் வழிகளிலும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அதன் உண்மையான நோக்கங்கள் இந்திய*

*நாடாளுமன்றத்தின் முடிவுகளுக்கும், முன்மொழியப்படும் இந்திய அரசியல்சாசனத்தின் சரத்துகளுக்கும் முற்றிலும் எதிரானவையாகத் தோன்றுகின்றன. எங்களுக்கு கிடைத்துள்ள தகவலின்படி அதன் நடவடிக்கைகள் தேச விரோதமானவை, பல நேரங்களில் சதிகாரத்தனமானவை, வன்முறையானவை''.*

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஆர்எஸ்எஸ் பற்றி தந்த மதிப்பீடு இது. இதன் அர்த்தம் அதன் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லை, அதன் அறிவிப்புகளுக்கும் அதனது ஆட்களின் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தமில்லை என்பது. உள்ளும் புறமும் ஒன்றாய் இருக்கும் அமைப்பு அல்ல ஆர்எஸ்எஸ். அதனால்தான் அதை மர்மதேசம் என்கிறேன். அதனது வரலாறே அதற்கு ஆதாரமாக இருக்கிறது. நூரானி பல விபரங்களைத் தந்திருக்கிறார். நானும் கூடுதலாகத் தந்து அதை நிரூபிக்க முனைகிறேன். நூரானி நூலின் முன்னுரை ஒரு கவிதையோடு துவங்குகிறது. அது: ''*தோட்டத்திற்கு ரத்தம் தேவைப்பட்டபோது எங்களது கழுத்துக்களே முதலில் அறுக்கப்பட்டன. ஆனாலும், தோட்டத்தில் இருப்பவர்கள் சொல்கிறார்கள் தோட்டம் அவர்களுடையது, எங்களது அல்ல*''. இந்திய முஸ்லிம்களின் இன்றைய மனநிலையை இது தெரிவிக்கி றது என்கிறார். அது நிஜமே. இந்திய சுதந்திரத்திற்காக ரத்தம் சிந்திய முதல் தியாகிகள் முஸ்லிம்களே. ஆனால், இன்று அவர்களை அந்நி யர்கள் போல பாவிக்கிற கொடுமை நடக்கிறது. முஸ்லிம்களின் தியாகத்திற்கு முதல் சாட்சியாக சாவர்க்கரை கொண்டுவந்து நிறுத்துகிறார் நூரானி. "இந்திய சுதந்திரப் போர்-1857" என்று இந்திய சிப்பாய்களின் கிளர்ச்சி பற்றி ஒரு நூலை 1909ல் எழுதினார் சாவர்க்கர். அதில் அவர் கூறினார்: ''அந்த

சிப்பாய்களுக்கு மௌல்விகள் போதித்தது, பிராமண பண்டிதர்கள் ஆசிர்வதித்தது, தில்லியின் மசூதிகளிலிருந்தும் காசியின் கோயில்களிலிருந்தும் சொர்க்கத்திற்குச் சென்ற பிரார்த்தனைகள் என்ன? அவை சுவதர்மம், சுயராஜ்யம் எனும் மகத்தான கோட்பாடுகள். இந்திய சுதந்திரத்திற்கு வந்துள்ள ஆபத்தை முதலில் உணர்ந்தவர்கள் புனேயின் நானா பர்னாவிசும் மைசூரின் ஹைதர் அலியும்".

ஹைதர் அலி என்றால் அவரது வீரஞ்செறிந்த புதல்வர் திப்பு சுல்தானும்தான். அவர்கள்தாம் 1760-1800ல் இங்கிலாந்தின் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு சிம்மசொப்பனமாக இருந்தவர்கள். இதை இப்படியாக அங்கீகரித்தார் சாவர்க்கர். அவர்களது பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகத்தான் ஆங்கிலேயரை எதிர்த்த சிப்பாய்களின் கிளர்ச்சி 1857ல் ஏற்பட்டது என்றார். அந்தப் போராட்டத்தின் மைய அச்சாக இருந்தது தில்லியின் கடைசி முகலாய மன்னராகிய பகதூர்ஷா ஜாபர். 82 வயதான அவருக்கு அதிகாரத்தை மீட்டுத் தருவது என்ற பெயரில்தான் இந்துக்களும் முஸ்லிம்களும் அன்று இணைந்து போராடினார்கள். அந்த முயற்சி தோல்வியுற்றதும், பகதூர் ஷாவைக் கைது செய்த ஆங்கிலேயர்கள் அந்தத் தள்ளாத வயதில் அவரை பர்மாவிற்கு நாடு கடத்தினார்கள். 1862ல் அங்கேயே வாடி வதங்கி மாண்டுபோனார். அங்கு விஜயம் செய்யும் இந்திய ஆட்சியாளர்கள் அவரது சமாதியில் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இப்படி ஆங்கிலேயரை எதிர்த்த சுதந்திரப் போரில் துவக்கத்திலிருந்தே முஸ்லிம்களின் பங்களிப்பு இருந்தது. இதை சாவர்க்கரும் அங்கீகரித்திருந்தார் என்பது மிக முக்கியமான ஆதாரம், இது சங் பரிவாரத்திற்கு சமர்ப்பணம். கொடுமை

என்னவென்றால் இப்படி சிப்பாய்கள் கிளர்ச்சியை வியந்து எழுதிய சாவர்க்கர் விரைவி லேயே ஆங்கிலேயரிடம் சரணாகதி அடைந்தது! நாசிக் மாவட்ட ஆட்சியர் ஜாக்சன் கொலை வழக்கில் 1910ல் கைது செய்யப்பட்ட சாவர்க்கருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. 1911ல் அந்தமான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அடுத்த ஒன்றரை மாதத்திலேயே மன்னிப்பு கோரி ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு கடிதம் எழுத ஆரம்பித்தார். ஒன்பது ஆண்டுகளில் ஆறு மன்னிப்புக் கடிதங்கள் அனுப்பினார். அந்தமான் சிறையிலிருந்து இந்திய சிறைக்கு மாற்றப்பட்டவர் 1924ல் விடுவிக்கப்பட்டார். எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது எனும் நிபந்தனையின் பேரில்.

இதனினும் ஓர் உச்சம் ஆய்வாளர் நிரஞ்சன் தக்லே சொல்வதாக பிபிசிநியூஸ் தமிழ் (28-5-2020) தெரிவித்திருக்கும் இந்தத் தகவல்: “காந்தி, காங்கிரஸ் மற்றும் முஸ்லிம்களை எதிர்ப்பதற்கு தங்கள் இருவருக்கும் ஒரே நோக்கம் இருப்பதாக வைஸ்ராய் லின்லித்கோவுடன் சாவர்க்கர் எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஆங்கிலேயர்கள் அவருக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.60 வழங்கினார்கள். மாத ஓய்வூதியம் கொடுக்கும் அளவிற்கு ஆங்கிலேயருக்கு அவர் என்னை சேவை செய்தார், ஓய்வூதியம் கொடுக்கப்பட்ட காரணம் என்ன என்று பல கேள்விகள் எழுகின்றன. இப்படிப்பட்ட ஓய்வூதியம் பெற்ற ஒரே நபர் சாவர்க்கர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது”.

ஆரம்பத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் தனது எதிரியாக பாவித்த சாவர்க்கர் சிறை வாழ்வின்போது காந்தி, காங்கிரஸ், முஸ்லிம்களைத் தனது எதிரியாக பாவிக்கத் தொடங்கினார். அதனால்தான்

வைஸ்ராயோடு அப்படியாகக் கையெழுத்துப் போட்டு ஓய்வூதியதாரர் ஆனார். இந்த மாற்றம் சித்தாந்தரீதியானதும்கூட. 1923ல் சிறையிலிருந்து அவர் எழுதிய “இந்துத்துவா-யார் இந்து?” எனும் நூலில் அந்த மாற்றம் துல்லியமாக வெளிப்பட்டது. 1857 சிப்பாய்கள் கிளர்ச்சியை இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் வெளிப்பாடாகப் பார்த்து நூல் எழுதியவர் இப்போது இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே சொந்தம் எனச் சொன்னார், பிற மதத்தவரை அந்நியராகச் சித்தரித்தார்.

இந்த வகுப்புவாத அரசியலுக்கு அவர் செய்த நாமகரணமே “இந்துத்துவா”. எனினும் ஒரு விஷயத்தை அந்த நூலில் ஒப்புக்கொண்டார். அது: “இந்து மதம் எனப் பொதுப் படையாகச் சொல்லப்படுவதும் இந்துத்துவாவும் ஒன்று அல்ல”. சங் பரிவாரத்தினர் தங்களது சித்தாந்த பிதாமகனின் இந்தப் பிரகடனத்தை மனதில் வாங்க வேண்டும். இது தெரியாமல் இந்து மதமும் இந்துத்துவாவும் ஒன்று என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்! ஒரு சுவையான செய்தியை நூரானி தனது நூலில் சொல்லியிருக்கிறார். “சாவர்க்கர் ஒரு நாத்திகவாதி” என்பது அது. ஆனால் மேல் விபரங்கள் இல்லை. ஆய்வாளர்கள் இதற்குள் மேலும் செல்வது பயனுள்ளதாக இருக்கும். நாத்திகர் என்றாலே கண்களை உருட்டி, மீசையை முறுக்கும் சங் பரிவாரத்திற்கு அவர்களது பிதாமகனே ஒரு நாத்திகர்தான் என்பது செரிக்க முடியாத சமாச்சாரமாக இருக்கும்.

நூரானி நூலின் முன்னுரை நேரு பற்றிய சில செய்திகளோடு முடிகிறது. “இந்து வகுப்புவாதம் என்பது ஃபாசிசத்தின் இந்திய வடிவம்” என்றாராம் அவர். நேரு பிரதமராக இருந்த காலத்தில் வெள்ளி தோறும் அதிகாரிகளைச் சந்திப்பாராம். அதற்கான

ஏற்பாட்டைச் செய்யும் வெளியுறவுச் செயலாளர் யெஷ்டி குண்டேவியா ஒரு சந்திப்பை விவரித்திருக்கிறார் தனது நூலில். அதிலிருந்து இது:
“**குண்டேவியா**: ஐயா, நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து காங்கிரஸ்தான் ஆட்சியில் உள்ளது. அதிகாரிகளாகிய நாங்களும் அதன் கொள்கைகளையே அமல்படுத்தி வருகிறோம். நாளை கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தால் என்னாகும்? கேரளாவில் கம்யூனிஸ்டு அரசு உள்ளது. நாளை மத்தியிலும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் அதிகாரிகளின் நிலை என்னாகும்?
**பிரதமர் நேரு**: மத்தியில் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவார்கள் என்று ஏன் நினைக்கிறீர்கள்? (சிறிது மௌனமாக இருந்து விட்டு நிறுத்தி நிதானமாகச் சொன்னார்) குறித்துக் கொள்ளுங்கள், இந்தியாவுக்கான அபாயம் கம்யூனிசம் அல்ல. மாறாக, இந்து வலதுசாரி வகுப்புவாதம்”.
தீர்க்கதரிசனம் என்பது இதுதான். இன்று என்ன நடக்கும் என்பதை அன்றே சொல்லியிருக்கிறார். இந்தியாவின் சமூகவியலை நன்கு உள்வாங்கியிருந்ததால்தான் அவரால் இப்படியொரு சரியான கணிப்பை செய்ய முடிந்திருக்கிறது. நேருவை ஏன் சங் பரிவாரம் நஞ்சாய் வெறுக்கிறது என்பதும் புரிகிறது.

# 2. இந்து மகாசபை இருக்க இன்னொன்று ஏன்?

ஆர்எஸ்எஸ் தோற்றுவிக்கப்பட்டதன் பின்புலம் பற்றி விவரித்திருக்கிறார் நூரானி. லாலா லஜபதிராய், பண்டிட் மதன்மோகன் மாளவியா என்றால் அந்தக் காலத்து காங்கிரஸ் தலைவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்றுதான் பலரும் அறிவர். ஆனால் அவர்களுக்கு இன்னொரு முகம் உண்டு. அவர்கள் இருவரும் இந்து மகாசபைத் தலைவர்களும்கூட.அந்தக் காலத்து காங்கிரஸ் ஒரு மகாசம்மேளனம். அதில் பல கருத்துள்ளவர்கள் மட்டுமல்ல, பல அமைப்புகளைச் சார்ந்தவர்களும் இருந்தார்கள். “தங்களுக்கான ஒரு நாகரிகத்தைக் கொண்டிருப்பதால் இந்துக்கள் தம் அளவில் ஒரு தேசம்” என்று 1899லேயே எழுதியவர் லஜபதிராய். மதத்தின் அடிப்படையில் தேசியத்தைத் தீர்மானிக்கும் அபத்தச் சிந்தனை அப்போதே பிறந்து விட்டது. இந்துக்கள் ஒரு தேசம் என்றால் முஸ்லிம்கள் வேறொரு தேசம் என்றானது. இப்படித்தான் இரு தேசச் சிந்தனை இங்கே வேர் விட்டது.

இந்தச் சிந்தனையோடு 1907ல் பஞ்சாபில் அமைந்தது இந்து மகாசபை. 1909ல் நடந்த அதன் மாநாட்டில் உற்சாகமாகப் பங்கேற்றார் லஜபதிராய். 1914ல் அகில பாரதிய இந்து மகாசபை ஆரம்பிக்கப்பட்டது. அதை 1928 வரை வழி நடத்தியவர்கள் லஜபதிராயும், மதன்மோகன் மாளவியாவும். சுத்தி என்ற பெயரில்

முஸ்லிம்களை மதமாற்றம் செய்யும் வேலையையும் 1923ல் துவக்கியது இந்த சபை. லஜபதிராயின் சிந்தனை, இந்து மகாசபையின் செயல்பாடு எல்லாம் சாவர்க்கரிடம் தாக்கத்தை ஏற்படுத்தித்தான் அவரை “இந்துத்துவா” நூலை எழுத வைத்தன.

தி டிரிபியூன் பத்திரிகையில் 1924 டிசம்பரில் லஜபதிராய் எழுதினார்: “பஞ்சாபை இரண்டு மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளதை மேற்கு பஞ்சாப் என்றும், இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ளதை கிழக்கு பஞ்சாப் என்றும் பிரிக்க வேண்டும்”. மத அடிப்படையில் இரு மாகாணங் களை உருவாக்க வேண்டும் என்று அடியெடுத்து கொடுத்தார், பின்னாளில் அது இரு நாடுகள் என முடிந்தது. இத்தகைய கருத்தியல் கொண்டவர்கள் முழு காங்கிரசையும் கைப்பற்ற முயற்சித்தார்கள் எனும் திடுக்கிடும் சங்கதியையும் நூரானி எடுத்துரைக்கிறார். அதற்கான ஆதாரமாக சாட்சாத் மோதிலால் நேருவைக் கொண்டுவந்து நிறுத்துகிறார். ஜவஹர்லால் நேருவின் தந்தையார் தனது மகனுக்கு எழுதினார் 1926ல்: “பிர்லாவின் பண உதவியோடு இயங்கும் மாளவி யா-லாலா கோஷ்டி காங்கிரசை கைப்பற்ற தீவிரமாக முயலுகிறது”. அந்தக் காலத்திலேயே பெருமுதலாளி ஒருவர் இந்த வகுப்புவாத கோஷ்டியையும் ஆதரித்திருக்கிறார். இந்தியாவின் மிகப் பெரிய சோகம் இதுதான்-இந்திய முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் சமூகக் கட்டமைப்போடு சமரசம் செய்துகொண்டே தன்னை வளர்த்துக் கொள்ளப் பார்த்தது. அதனால்தான் தொழிலாளி வர்க்கத்திற்கு தனது எதிரியாம் முதலாளித்துவத்தை மட்டுமல்லாது எதிரியின் எதிரியாம் நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிக்கும் வேலை வந்து சேர்ந்தது.

இத்தகைய சமூக, அரசியல் சூழலில்தான் கேசவ பலிராம் ஹெட்கேவார் என்பவர் கிளம்பினார். இந்த நாக்பூர்காரரின் சித்தாந்த வழிகாட்டி இந்து மகாசபையின் மற்றொரு தலைவராகிய பி.எஸ். மூஞ்சே. சாவர்க்கரின் “இந்துத்துவா” நூலைப் படித்த ஹெட்கேவாருக்கு அவர் மீது அளப்பரிய பிரியம் ஏற்பட்டது. 1925 மார்ச்சில் அவரோடு இரண்டு நாட்கள் தங்கியிருந்து விரிவாகக் கலந்துரையாடினார்.முடிவில் அதே ஆண்டு விஜயதசமி அன்று ஹெட்கேவாரின் வீட்டில் “ராஷ்டிரிய சுயம் சேவாக் சங்” எனப்பட்ட ஆர்எஸ்எஸ் உதயமானது. கூட இருந்த நான்கு பேர்: பி. எஸ். மூஞ்சே, சாவர்க்கரின் மூத்த சகோதரர் பாபாராவ் சாவர்க்கர், எல். வி. பரஞ்பி, பி. பி. தாக்கர்.

ஹெட்கேவார் எத்தகையவர்? அவர் நூல் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை. ஆனால் அவரைப் பற்றி அந்தக் காலத்திலேயே மராத்தியில் பிரசுரங்கள் வந்துள்ளன. அவற்றை மேற்கோள் காட்டுகிறார் நூரானி. நாக்பூரில் சிறுபான்மையாக இருந்த முஸ்லிம்களை அவர் வெறுத்தது, அவர்களை “யவன பாம்புகள்” என அழைத்தது, அவர்களை எதிர்க்கவே தொண்டர் படை ஒன்றை உருவாக்க முனைந்தது போன்ற விபரங்களைத் தந்துள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி 2018ல் ஹெட்கேவாரின் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தி “இந்தியத் தாயின் ஒரு மகத்தான புதல்வர்” என்று வருகை ஏட்டில் எழுதினார். அதையொட்டி ஹெட்கேவார் பற்றிய வரலாற்றாளர்களின் பதிவுகள் வெளியாயின. எச். வி. சேஷாத்திரி பதிப்பித்த “டாக்டர் ஹெட்கேவார், யுக புருஷர்” எனும் வாழ்க்கை வரலாறு நூலை மேற்கோள் காட்டியது தி கேரவான் ஏடு(10-6-2018). “அவர்கள் முதலில் முஸ்லிம்கள்,

இரண்டாவதாகத்தான் இந்தியர்கள்" எனும் முடிவுக்கு வந்தார் ஹெட்கேவார் என அதில் கூறப்பட்டுள்ளது. அதாவது முஸ்லிம்களின் தேசப்பற்றின் மீது வீணான சந்தேகத்தை எழுப்பி, அப்படியாக அவர்கள் மீதான வெறுப்பை வளர்க்கும் வேலையைச் செய்ய முடிவெடுத்தார்.மற்றொரு வரலாற்றாளர் பிரளாய் கனுங்காவின் கருத்துப்படி நாக்பூரில் 1923ல் வெடித்த இந்து -முஸ்லிம் கலவரமே ஹெட்கேவார் ஆர்எஸ்எஸ்சை துவக்குவதற்கான அடிப்படை. கலவரத்திற்கான காரணங்களில் முக்கியமானது மசூதிகள் முன்பாக மத ஊர்வலங்கள் நடத்த இந்துக்களுக்கான உரிமை பற்றியது. எச். வி. சேஷாத்திரி பதிப்பித்த நூல் கூறியது "முஸ்லிம்கள் மீதான பயத்தின் காரணமாக இந்துக்கள் மசூதிகளின் முன்பு மேளதாளங்களை தவிர்த்தனர். அப்போது டாக்டர்ஜியே (ஹெட்கேவார்) மேளதாளங்களை அடித்து தூங்கிக்கிடந்த இந்துக்களின் வீரத்தை எழுப்பினார்". ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்தியர்கள் அனைவரது உரிமைகளையும் பறித்திருந்தார்கள். அவர்களை எதிர்த்துப் போராடாமல் முஸ்லிம்களை எதிர்த்துக் கிளம்பியவர்தான் ஹெட்கேவார். மிகப் பெரிய வீரம் எதுவென்றால் மசூதிகள் முன்பு மேளதாளம் அடிப்பதாம்! அன்று முதல் இன்று வரை சங் பரிவாரத்தின் ஜோலி இதுதான்! மக்களின் மெய்யான எதிரிகளுக்கு எதிராக இந்துக்கள் திரண்டுவிடாதபடி பொய்யான எதிரிகளைக் கட்டமைப்பதுதான் அவர்களின் தந்திரம்.

இத்தகைய நோக்கத்திற்காக இத்தகையவர் உருவாக்கிய ஆர்எஸ்எஸ் 1926 லேயே ஷாகா எனப்பட்ட தினசரி உடற்பயிற்சியைத் துவக்கியது. இது பற்றி வரலாற்றாளர் சேட்டன் பட் கூறுவது: "ஆர்எஸ்எஸ்சின் ஷாகாக்களில் தண்டா (லத்தியுடனான ஆயுத பயிற்சி), கட்கா (வாள் பயிற்சி),வெட்ர சர்மா (கம்புச் சண்டை),

யோக்சேப் (லெஜிம் பயிற்சி) ஆகியவை உண்டு”. இதுவெல்லாம் எதற்கு? எதிரிகளை வீழ்த்தத்தான். எதிரிகள் யார்? நிச்சயம் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் இல்லை. எதிரிகள் யார் என்பதை ஹெட்கேவார் தனது பேச்சாலும் செயலாலும் தெளிவாக உணர்த்தியிருந்தார்.

இப்படிப்பட்டவருக்காக ஆர்எஸ்எஸ்சில் “சர்சங்சலக்” எனும் பதவி 1929ல் உருவாக்கப் பட்டது. அதாவது உயர் தலைவர். “பரம பூஜனிய”, பெரிதும் பூஜிக்கத் தக்கவர் என அழைக்கப்பட்ட இவரின் உத்தரவுப்படியே அனைவரும் நடக்க வேண்டும். அவரது சொல்லே அந்த அமைப்பின் வேதம். இது ஆயுட்காலப் பதவி. இவர்தான் அடுத்த சர்சங்சலக்கை நியமிப்பார் தனது இறுதி காலத்தில். தேர்தல் எல்லாம் கிடையாது.

ஒரு கேள்வி இருக்கிறது. இந்துக்களுக்காக என்று இந்து மகாசபை இருக்கும் போது அவர்களுக்காக எதற்கு இன்னொரு அமைப்பு? இதற்கு நூரானி தரும் பதில் ஆர்எஸ்எஸ்சின் சாரத்தை விண்டுரைக்கிறது. அது: “இந்த இரண்டுக்கும் இடையே இரண்டு வேறுபாடுகள் உண்டு. மகாசபையின் தலைவர்கள் அரசியல்வாதிகள், தேர்தலில் போட்டியிட்டார்கள். மாளவியாவும் லஜபதிராயும் மத்திய சட்டசபை உறுப்பினர்கள். இரண்டாவதாக அவர்கள் வன்முறையை ஏற்கவில்லை. ஆர்எஸ்எஸ் அப்படி அல்ல. அது தேர்தல் அரசியலை ஏற்கவில்லை, அதேநேரத்தில் வன்முறையை அமைப்புரீதியாகப் பயன்படுத்துவதை ஏற்றது.

நாக்பூரில் நடந்த வகுப்புவாதக் கலவரங்களுக்குப் பிறகு உருவான ஆர்எஸ்எஸ்சின் நோக்கம் ‘எதிரியை வீழ்த்துவதுதான்’. லத்தி என்பது ஆபரணம் அல்ல, ஆர்எஸ்எஸ் திட்டத்தின் ஒரு பகுதி. ஹெட்கேவாரின்

வழிகாட்டியாகிய மூஞ்சேயின் ஆலோசனைப்படி அது ஏந்தப்பட்டது. தசரா விழாவின் போது ஆயதங்கள் வணங்கப்பட்டன, ராணுவ இசை எழுப்பப்பட்டது. சுயம் சேவக்குகள் பலரும் கூடி லத்தி, வாள் மற்றும் இதர பல பயிற்சிகளில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டுவார்கள்".

இரண்டின் நோக்கமும் இந்துத்துவாதான். அதற்காக அரசியல் களத்தில் வேலை பார்க்க இந்து மகாசபையும், சிவில் தளத்தில் இயங்க ஆர்எஸ்எஸ்சும் எழுந்தன எனப்படுகிறது. ஆனால், சிவில் தள இயக்கம் என்பது ஏதோ சாந்தரூபமானது அல்ல, அது அதிதீவிரமானது. அதற்காக தினசரி பயிற்சிகள் தரப்பட்டன சிந்தனைரீதியாகவும், உடல்ரீதியாகவும். எந்தக் காலத்தில் இது ஆரம்பமானது? பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழத் துவங்கிய காலத்தில்! இதனது நோக்கம் அந்த தேசிய இயக்கத்திலிருந்து இந்துக்களை பிரித்தெடுத்து திசை திருப்புவது.

எனவே நூரானி முத்தாய்ப்பாய்க் கூறினார்: "நாட்டிலிருந்து இந்திய தேசியத்தை விரட்டும் இந்து தேசியத்தின் ஆயுதம் தாங்கிய, தீவிரவாத அமைப்பாகவே ஆர்எஸ்எஸ் உருவாக்கப்பட்டது". இந்திய தேசியமா? இந்து தேசியமா? என அன்று எழுந்த கேள்வி இன்று வரை தொடர்கிறது என்றால் அது ஆர்எஸ்எஸ்சின் கைங்கரியமே!

# 3. சுதந்திரப்போரில் பங்கேற்காத பெருந்துரோகம்

நூராணி தனது நூலின் மூன்றாவது அத்தியாயத்தை இப்படி முடிக்கிறார்: “இந்து மகாசபையும் ஆர்எஸ்எஸ்சும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. மாறாக, காங்கிரசை ஒழிக்க முடியாவிட்டாலும் அதை ஓரங்கட்டுவதற்காக பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கும் பாதையைத் தேர்ந்தெடுத்தன”. இதுவொரு முக்கியமான கணிப்பு. இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டுவந்த ஆங்கிலேயர்களை எதிர்க்காதது மட்டுமல்லாது அதை எதிர்த்துவந்த காங்கிரசை ஓரங்கட்டும் வேலையில் இறங்கியிருந்தார்கள் என்றால் அது எவ்வளவு பெரிய துரோகம்!

இந்த கணிப்பிற்கான ஆதாரங்களை அடுத்த அத்தியாயத்தில் தந்திருக்கிறார். அதற்குள் போவதற்கு முன்பாக இந்தக் காலம் பற்றி ஆர்எஸ்எஸ் என்ன சொல்கிறது என்பதைக் கேட்டுக் கொள்வோம். அதனது அதிகாரப்பூர்வ இணைய தளம் கூஷீss.ஷீகூஷீரீ கூறுகிறது: “ அனைத்து துறையிலான வளத்திற்கு மட்டுமல்லாது பாரதம் ஒரு சுதந்திரமான சுயாதிபத்திய தேசமாக இருப்பதற்கே ஒரு வலுவான, ஒன்றுபட்ட இந்து சமுதாயம் அவசியமாகும். சமூக ஒழுங்கமைவே தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும். அந்த

சவாலை எதிர்கொள்ளவே டாக்டர் ஹெட்கேவார் 1925ல் ஆர்எஸ்எஸ்சை அமைத்தார்". ஆக ஆட்சியிலிருந்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்க இந்த அமைப்பை உருவாக்கவில்லை. மாறாக இந்து சமுதாயத்தை வலுப்படுத்தவே இதை ஆரம்பித்தார். அப்படியெனில் அதன் எதிரி பிற மதத்தவரே. இந்த அமைப்பு எப்படி ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும்?

போராடவில்லை என்பதை அடுத்து வரும் வாக்கியங்களில் அது கோடிகாட்டியது: "சங்கத்தின் வளர்ச்சி மற்றும் வலுவிற்கான அஸ்திவாரத்தைப் போட டாக்டர் ஹெட்கேவார் இரவு பகலாக பாடுபட்டார். இந்த 15 ஆண்டுகால பெரும் பணி அதற்குரிய விலையை கேட்டது. நோய்வாய்ப்பட்ட டாக்டர் ஹெட்கேவார் 1940 ஜுன் 21 ல் தனது 51வது வயதில் காலமானார்". ஆக 1925 முதல் 1940வரை ஆர்எஸ்எஸ் சுதந்திரப் போராட்டம் எதிலும் பங்கேற்கவில்லை! பங்கேற்றிருந்தால் விடுவார்களா? டாம்டூம் படுத்தியிருப்பார்கள் அல்லவா. மாறாக, எப்படி அந்தக் காலத்தை லாவகமாகக் கடந்து போகிறார்கள் பாருங்கள்.

இவருக்குப் பிறகு தலைவராக வந்தவர் மாதவ் சதாசிவ கோல்வால்கர். அவரது காலத்தின் முதல் ஏழு ஆண்டுகளில் சுதந்திரப் போராட்டம் தொடர்ந்தது. அப்போதாவது அதில் பங்கேற்றதா ஆர்எஸ்எஸ்? அதுவே சொல்கிறது: "இந்து ராஷ்டிரம் எனும் கருத்தியலின் தர்க்க நியாயத்தையும் அதன் வரலாறு மற்றும் சமூகப் பின்புலத்தையும் ஸ்ரீ குருஜி கோர்வையாக எடுத்துரைத்தார். சாதாரண கிராமத்தார் மற்றும் நகர்ப்புற படித்தவர் என இரு சாரராரையும் இது பற்றி புரிந்து கொள்ள வைத்து சங்கத்தின் சித்தாந்த தளத்தை அகலப்படுத்தினார்".நம்மை அடிமைப்படுத்தியிருந்த

வெள்ளையர்கள் வெளியேற வேண்டியதன் தர்க்க நியாயத்தை எடுத்துரைக்கவில்லை, இந்து ராஷ்டிரத்தின் நியாயத்தை போதித்து வந்தாராம். அப்படியெனில் சுதந்திரப்போராட்டம்? பங்கேற்றிருந்தால்தானே பேசுவார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு நடந்த காந்தி படுகொலையைத் தொடர்ந்து ஆர்எஸ்எஸ் தடை செய்யப்பட்டது பற்றி அடுத்து பேசுகிறது அந்த இணையதளம். ஆக, இந்த ஏழு ஆண்டுகளிலும் சுதந்திரப் போரில் பங்கேற்கவில்லை. மாறாக இந்து ராஷ்டிரம் எனும் தந்திரப் போரில் இறங்கியிருந்தது.

ஆய்வாளர் ராம் புனியானி தனது “மதம், அதிகாரம் மற்றும் வன்முறை” எனும் நூலில் ஆர்எஸ்எஸ் வெளியிட்டுள்ள ஹெட்கேவாரின் வாழ்க்கை வரலாற்று நூலிலிருந்து இந்தப் பகுதியைத் தந்துள்ளார்: “அரசின் சட்டங்களை மீறுமாறு மகாத்மா காந்தி 1930ல் அறைகூவல் விடுத்தார். தண்டி யாத்திரை மேற்கொண்டு அவரே உப்பு சத்தியாகிரகம் நடத்தினார். இதில் ஆர்எஸ்எஸ் பங்கேற்காது என்று எல்லா இடங்களுக்கும் டாக்டர் சாகேப் (ஹெட்கேவார்) செய்தி அனுப்பினார். எனினும் தனிப்பட்ட முறையில் பங்கேற்க விரும்புவோருக்கு தடை விதிக்கப்படவில்லை. இதன் பொருள் அதன் பொறுப்புவாய்ந்த உறுப்பினர் எவரும் சத்தியாகிரகத்தில் பங்கேற்க முடியாது என்பதுதான்”. ஆக, அன்று எழுச்சியாக நடந்த ஒரு சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்பதில்லை என்று ஆர்எஸ்எஸ் ஒரு கொள்கை முடிவு எடுத்திருந்தது.

1939ல் இரண்டாம் உலகப் போர் வெடித்தது. தங்களைக் கலந்து கொள்ளாமல் அதில் இந்தியாவைச் சேர்த்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து மாகாணங்களிலிருந்த காங்கிரஸ் அரசுகள்

ராஜினாமா செய்தன. ஆனால் சாவர்க்கரோ வைஸ்ராய் லின்லித்கோவைச் சந்தித்து தனது உற்சாகமான ஒத்துழைப்பை நல்கினார். இந்த லின்லித்கோவோடு அவர் ஒப்பந்தம் போட்டிருந்த செய்தியை அறிவோம். அவரின் இந்த ஒத்துழைப்பு முன்மொழிவை வைஸ்ராய் லண்டனிலிருந்த இந்தியாவுக்கான மந்திரி ஜெட்லாண்டிடம் சொன்னதை எடுத்துக்காட்டியிருக்கிறார் நூரானி. “மேன்மை தாங்கியவரின் அரசு இந்துக்கள் பக்கம் திரும்ப வேண்டும், எங்களது ஆதரவோடு இயங்கவேண்டும் என்று சாவர்க்கர் கூறினார்” என்கிறது அந்தச் செய்தி.அதுமட்டுமல்ல “1940 ஆகஸ்டு 19ல்,அரசின் நிர்வாக சபையில் இந்து மகாசபையினரை  இணைத்துக் கொள்ள வேண்டும் என்று லின்லித்கோ பிரபுவிடம் சாவர்க்கர் ஒரு பட்டியலைக் கொடுத்தார். அதில் மூஞ்சே மற்றும் ஷியாம பிரசாத் முகர்ஜியின் பெயர்கள் இருந்தன. இந்த ஷியாம பிரசாத்தான் பின்னாளில் ஜன சங்கத்தை துவக்கியவர். ‘முஸ்லிம் லீக்கை விட அதிக ஆட்கள், பொருட்கள், ஞானம் ஆகியவற்றை வழங்க இந்துக்களால் முடியும்” என்று வைஸ்ராய்க்கு செப்டம்பர் 26ல் கடிதம் எழுதினார் மூஞ்சே” எனும் ஆதாரத்தையும் தந்துள்ளார் நூரானி. இப்படியாகப் பட்டவர்கள் காங்கிரஸ் நடத்திய 1942 ஆகஸ்டு போராட்டத்தை, அந்த “வெள்ளையனே வெளியேறு” போராட்டத்தை ஆதரித்திருப்பார்களா?

இல்லை, இந்து மகாசபையும் ஆர்எஸ்எஸ்சும் அதை எதிர்த்தது மட்டுமல்லாது அந்தப் போராட்டத்தை ஒடுக்குமாறு அரசுக்கு ஆலோசனை கூறியது. வங்காள கவர்னர் சர் ஜான் ஹெர்பர்ட்டிற்கு ஷியாம பிரசாத் முகர்ஜி எழுதிய கடிதத்தில் அந்த ஆலோசனை இருந்தது. அந்த கடிதத்தை கொடுத்திருக்கிறார் நூரானி. அப்போது அவர் வங்காள மாகாண அரசில் ஓர்

அமைச்சரும்கூட. யாருடைய அமைச்சரவையில் பாகிஸ்தான் வேண்டும் எனும் தீர்மானத்தை 1940ல் முன்மொழிந்த மவுல்வி ஏ.கே.பசுலுல் ஹேக் தலைமையிலான அமைச்சரவையில்! பதவி ஆசை வெட்கம் அறியாதது!

1925ல் ஆர்எஸ்எஸ் துவக்கப்பட்டதிலிருந்து 22 ஆண்டுகள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மகத்தான சுதந்திரப் போராட்டம் நடந்தது. அதில் எந்தக் கட்டத்திலும் பங்கேற்கவில்லை ஆர்எஸ்எஸ். பங்கேற்கக் கூடாது என்று ஒரு முடிவோடு இருந்தது. காரணம் அதனது குறி எல்லாம் பிற மதத்தவர்கள். தனது இந்து ராஷ்டிரம் எனும் மனுவாத அரசுக்கு அவர்கள் இடையூறாக இருப்பார்கள் என்று அவர்கள் மீதுதான் வன்மம். ஆகவேதான் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒரு துரும்பை எடுத்துப் போடவில்லை 1947வரை. அதனால்தான் தோழர்கள் என்.சங்கரய்யா, ஆர்.நல்லகண்ணு போன்ற தீரமிக்க சுதந்திரப் போராளிகள் அவர்கள் மத்தியில் இல்லை. இந்த லட்சணத்தில் பிறரை பார்த்து தேச விரோதிகள் என்கிறார்கள் என்றால் எவ்வளவு நெஞ்சழுத்தம்.இந்தப் பிரச்சனையில் இன்னொரு கோணமும் உள்ளது. வெள்ளைக்காரனை எதிர்த்த நேரடிப் போராட்டத்தில்தான் ஈடுபடவில்லை, காங்கிரஸ் நடத்திய “ஹரிஜன சேவா” இயக்கத்திலாவது ஆர்எஸ்எஸ் ஈடுபட்டதா? அதன் முத்தாய்ப்பாக நடந்தேறிய ஆலய நுழைவுப் போராட்டத்திலாவது ஈடுபட்டதா? அதுதான் இந்து சமுதாயத்தை ஒன்றிணைக்க, வலுப்படுத்த பிறந்த இயக்கமாயிற்றே - அதனுடைய அதிகாரபூர்வ இணைய தளம் இது பற்றி மூச்சு விடவில்லை. ஈடுபட்டிருந்தால்தானே சொல்ல முடியும்? ஏன் ஈடுபடவில்லை?

நாடார் குல மக்களுக்கும் பட்டியல் சாதி மக்களுக்கும் அன்று மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அனுமதி இல்லை. 1939ல் காங்கிரசின் வைத்தியநாதய்யர் தலைமையில் அந்த இயக்கம் நடந்தது. அதை தேவஸ்தான கமிட்டி உறுப்பினர் சிதம்பர முதலியாரும், நிர்வாக அதிகாரி ஆர். எஸ். நாயுடுவும் ஆதரித்தார்கள். அதன் வெற்றிக்குப் பிறகுதான் தமிழகத்தின் கோயில்கள் இவர்களுக்கு திறந்துவிடப்பட்டன. அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தை இந்து மகாசபையும் ஆர்எஸ்எஸ்சும் ஆதரித்தனவா? இல்லை. மாறாக அதை எதிர்த்த சநாதனிகளின் பின்னால் ஒளிந்து கொண்டன. இவர்கள்தாம் இந்துக்களுக்கான அமைப்புகளாம்! இவை மனுவாதிகளுக்கான அமைப்புகள், “இந்து” எனும் போர்வையில் இயங்குகின்றன என்பது அன்றே தெரியவந்தது.
சுதந்திரத்திற்குப் பிறகும்கூட தீண்டாமையை எதிர்த்து ஆர்எஸ்எஸ் போராடியதில்லை. அதற்கு மிக எளிய ஆதாரம் அது நம் காலத்திலும் அதற்காகப் போராடியதில்லை என்பது. இப்போதும் பட்டியல் சாதி மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவது தீண்டாமை ஒழிப்பு முன்னணி போன்ற அமைப்புகளே தவிர சங் பரிவாரம் அல்லவே? இதிலிருந்தும் அந்தக் காலத்தில் அவர்கள் எப்படி சநாதனிகளுக்கு ஆதரவாக நின்றிருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அப்படியெனில் சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்து சமுதாயத்திற்காக அவர்கள் செய்த சேவை என்ன? 1939ல் ஆர்எஸ்எஸ் தனக்கென உருவாக்கிக் கொண்ட கீதம் முழங்கியது: “இந்துக்களின் பூமியே! கடவுளே! இந்து ராஷ்டிரத்தின் அங்கங்களாகிய நாங்கள் உன்னை வணங்குகிறோம். எமது தர்மத்தைக் காத்து தேசத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவோம்”.

அது என்ன தர்மம்? சந்தேகம் என்ன மனு(அ)தர்மம்தான். இப்படியாக ஒரு பகுதி இந்துக்களை தம் வலைக்குள் வீழ்த்தி, அவர்களைப் பிற மதத்தவருக்கு எதிராக நிறுத்தி தாங்கள் நினைத்ததை சாதிக்க முனைந்தார்கள். மத அடிப்படையில் நாடு பிளவுபடுத்தப்பட்டு சுதந்திரம் கிடைத்தது அவர்களுக்கு வசதியாகப் போனது. அப்போதும் சரி, அதற்குப் பிறகும் சரி அவர்கள் வகுப்புவாத வெறி அரசியலில்தான் நின்றார்கள்.

# 4.முஸோலினியைச் சந்தித்தார் மூஞ்சே!

ஆர்எஸ்எஸ் அமைப்பு துவக்கப்பட்ட கூட்டத்தில் பங்கேற்ற ஐவரில் ஒருவர் பி.எஸ். மூஞ்சே என்பதைக் கண்டோம். இந்து மகாசபையின் தலைவர்களில் ஒருவராகிய அவர்தான் ஹெட்கேவாரின் வழிகாட்டி. இந்த மூஞ்சே ஃபாசிஸத்தின் பிதாமகன் முஸோலினியை நேரில் சந்தித்தார். இது பற்றிய உண்மைகளை ஆவண ஆதாரத்துடன் 2000 ஆம் ஆண்டில் வெளியிட்டார் இத்தாலிய ஆய்வாளர் மார்ஷியா கஸோலரி. அத்தகைய தரவுகளைக் கொண்டு '**ஐரோப்பிய ஃபாசிஸ்டுகளை நேசித்த ஆர்எஸ்எஸ்**' எனும் அத்தியாயத்தை கட்டமைத்திருக்கிறார் நூரானி.

1931ல் லண்டனில் வட்டமேசை மாநாடு முடிந்ததும் மூஞ்சே ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் போனார். போனவருக்கு ஃபாசிஸம் மிகவும் பிடித்துப் போனது. முஸோலினி உருவாக்கியிருந்த பலில்லா எனும் இளைஞர் அமைப்பைப் பார்த்துப் பரவசப்பட்டார். அது பற்றி தனது நாட்குறிப்பில் எழுதினார்: “பலில்லா என்பது இத்தாலியில் ராணுவப் புத்துணர்ச்சியை உருவாக்குவதற்காக முஸோலினியால் உருவாக்கப்பட்டது. இந்தியர்களைப் போல இத்தாலியர்களும் எளிதான, ராணுவத் தன்மையற்ற வாழ்வை இயல்பாகக் கொண்டவர்கள். அவர்கள் அமைதி வாழ்வை விரும்பி போர்க்கலையைப்

புறக்கணித்து விட்டார்கள். இதுவே தனது நாட்டின் பலவீனம் என்பதை உணர்ந்திட்ட முஸோலினி இந்த அமைப்பைத் தொடங்கினார்”.

சமாதான வாழ்வு கூடாது, மக்கள் யுத்த பீதியில் இருக்க வேண்டும் என்று முஸோலினி உருவாக்கிய இளைஞர் பட்டாளத்தை வியந்தோதினார் மூஞ்சே. அது ஆயுதம் ஏந்திய ஒரு ராணுவ பாணி அமைப்பு. முஸோலினியினுடைய ஃபாசிஸ கட்சியின் இளைஞர் பிரிவு. அந்தக் கட்சியை எதிர்த்தோர் எல்லாம் இந்த இளைஞர் பட்டாளத்தால் மிரட்டப்பட்டார்கள், விரட்டப்பட்டார்கள். இந்தியாவிலும் இத்தகைய படை தேவை என்று மூஞ்சே ஏங்கியதும் வெளிப்பட்டிருப்பதை நோக்குங்கள்.

1931 மார்ச் 19 அன்று முஸோலினியை சந்தித்தார் மூஞ்சே. அவரிடம் கூறினார்: “இதேபோன்ற நோக்கங்களுக்காக நானும் ஓர் அமைப்பை ஏற்கெனவே துவக்கியிருக்கிறேன். உங்களது பலில்லா மற்றும்  ஃபாசிஸ அமைப்புகளைப் புகழ்ந்து, வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பொதுமேடையில் பேசுவேன். அவை வெற்றிபெற எனது வாழ்த்துகள்”. 1925ல் துவக்கப்பட்ட ஆர்எஸ்எஸ்சைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அவரின் இந்த வார்த்தைகள் அதைப் போக்கிவிடுகின்றன: “இந்துக்களிடம் ராணுவப் புத்துணர்ச்சியை ஊட்ட இந்தியாவுக்கு, குறிப்பாக இந்து இந்தியாவிற்கு இது போன்ற அமைப்பு தேவை. சுயேச்சையான சிந்தனையில் பிறந்தது என்றாலும் டாக்டர் ஹெட்கேவார் தலைமையிலான நாக்பூரின் நமது ஆர்எஸ்எஸ் அமைப்பு இத்தகையது. மகாராஷ்டிராவிலும் இதர மாகாணங்களிலும் இந்த அமைப்பை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் எனது மீதி

வாழ்நாளை செலவழிப்பேன்”. ஆக, ஆர்எஸ்எஸ்சானது முஸோலினியின் ஃபாசிஸத்திடமிருந்தும், அதன் அமைப்பிடமிருந்தும் 1930களில் உத்வேகம் பெற்றது என்பது உறுதியாகிறது.

இந்தியா திரும்பிய மூஞ்சே ஆர்எஸ்எஸ்சுடன் இணைக்கப்பட்ட ஒரு ராணுவப்பள்ளியைத் துவக்கினார் என்கிறார் நூரானி. 1934 மார்ச் 31 அன்று ஹெட்கேவாருடனான சந்திப்பில் தனது தாளாத ஆசையை இப்படியாக வெளிப்படுத்தினாராம்: “இந்தியா முழுக்க இந்து மதத்தை ஒரேமாதிரியாகத் தரப்படுத்த இந்து தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையில் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளேன்.இந்த திட்டத்தை நிறைவேற்ற முற்காலத்திய சிவாஜி அல்லது இக்காலத்திய இத்தாலி மற்றும் ஜெர்மனியில் உள்ள முஸோலினி அல்லது ஹிட்லர் போன்ற சர்வாதிகாரியான ஓர் இந்துவைக் கொண்ட ஸ்வராஜ் வேண்டும். ஆனால், அப்படியொரு சர்வாதிகாரி இந்தியாவில் எழும் வரை நாம் கையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. அதற்கான விஞ்ஞானபூர்வ செயல்திட்டத்தை உருவாக்கி, அதைப் பரப்ப வேண்டும்”.

இந்த அநியாய ஆசையைப் பார்த்தீர்களா? இந்தியாவிலும் ஒரு முஸோலினி அல்லது ஹிட்லர் வர வேண்டும். ஒரே வித்தியாசம்தான், இவர் இந்து சர்வாதிகாரியாக இருக்க வேண்டும்! வந்து இந்து மதத்தை தரப்படுத்த வேண்டும். எப்படி? தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையில்! அது மனுதர்ம சாஸ்திரமே என்று சொல்ல வேண்டியதில்லை. ஐரோப்பாவின் ஃபாசிஸத்தையும் இந்தியாவின் மனுவாதத்தையும் இணைக்கிற விநோதத்தை நோக்குங்கள். அவர் முன்மொழிந்தது மனு வாத ஃபாசிஸம்.

மனு அதர்மவாதம் பிறப்பின் அடிப்படையில் பேதம் விதிப்பது, சாதியாலும் பாலினத்தாலும் பாகுபாடு காட்டுவது என்பதை அறிவோம். ஃபாசிஸம் என்றால் என்ன? 1932ல் “ ஃபாசிஸத்தின் கோட்பாடு” எனும் நூல் எழுதினான் முஸோலினி. அதில் ஒரு பகுதி தத்துவஞானி ஜியோவன்னி ஜென்டைல் என்பவரால் எழுதப்பட்டது. ஆம், ஃபாசிஸத்திற்கும் தத்துவமுலாம் பூச ஒருவர் கிடைத்திருந்தார்! அவர்கள் கூறினார்கள்: “19ஆம் நூற்றாண்டு மார்க்சியம், தாராளவாதம், ஜனநாயகத்தின் நூற்றாண்டு என்றால் 20ஆம் நூற்றாண்டு அதிகாரத்தின், வலதுசாரித்தனத்தின், ஃபாசிஸத்தின் நூற்றாண்டாக இருக்கும். 19ஆம் நூற்றாண்டு தனிமனிதனின் நூற்றாண்டு என்றால் 20ஆம் நூற்றாண்டு அரசின் நூற்றாண்டாக இருக்கும்”.

இதன் அர்த்தம் தெளிவானது. தனிமனித உரிமைகளைப் பறித்து அரசு இயந்திரத்தின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும் ஆட்சியமைப்பே ஃபாசிஸம் என்று கூச்சமின்றிச் சொன்னார்கள். ஆளும் வர்க்கங்களின் நிர்வாக சபையே அரசு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த நிர்வாகத்தை நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூலமாக நடத்துவதற்கும், அதுவும் இல்லாத பச்சை சர்வாதிகாரக் கட்டமைப்பாம் ஃபாசிஸத்தின் மூலம் நடத்துவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முன்னதில் பெயரளவுக்காகிலும் மக்களின் ஒப்புதல் பெற வேண்டியிருக்கும், அதற்கான உரிமைகள் தரப்பட வேண்டியிருக்கும். அவையும் இல்லாத காட்டு தர்பார் ஃபாசிச ஆட்சி. அங்கே உழைப்பாளர்கள் மட்டுமல்ல தாராளவாத முதலாளிகளும் ஒடுக்கப்படுவார்கள்.

உண்மையில் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல முதலாளித்துவ

ஜனநாயகவாதிகளும் கடும் தாக்குதலுக்கு ஆளானார்கள்.அதனால்தான் ஜெர்மன் புராட்டஸ்டென்ட் பாதிரியார் மார்டின் நிமோல்லரின் அந்தக் கவித்துவமிக்க பாவமன்னிப்பு பிறந்தது:
“அவர்கள் முதலில் கம்யூனிஸ்டுகளைத் தேடி வந்தார்கள். நான் எதிர்க்கவில்லை. காரணம் நான் கம்யூனிஸ்டு இல்லை/அடுத்து அவர்கள் யூதர்களைத் தேடி வந்தார்கள்.  நான் எதிர்க்கவில்லை. காரணம் நான் யூதன் இல்லை/ அடுத்து அவர்கள் தொழிற்சங்கவாதியைத் தேடி வந்தார்கள். நான் எதிர்க்கவில்லை. காரணம் நான் தொழிற்சங்கவாதி இல்லை/அடுத்து அவர்கள் கத்தோலிக்கர்களைத் தேடி வந்தார்கள். நான் எதிர்க்கவில்லை. காரணம் நான் கத்தோலிக்கன் அல்ல/அடுத்து அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள். அப்போது, எதிர்க்க ஆளே இல்லை”.

ஃபாசிஸ்டுகளின் கோர முகம் இரண்டாம் உலகப்போர் வெடித்த அந்த 1939க்குப் பிறகுதானே தெரிந்தது என்று சிலர் நினைக்கக்கூடும். அதன் உண்மை சொரூபத்தை அதற்கு முன்பே அம்பலப்படுத்தியது கம்யூனிஸ்டு அகிலம். 1935ல் அங்கே தோழர் ஜார்ஜ் டிமிட்ரோவ் ஆற்றிய உரைகள் ஃபாசிஸ பேராபத்தையும், அதற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் திரள வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தியது.

ஜவஹர்லால் நேருவும் அதை அன்றே உணர்ந்திருந்தார். 1936 பிப்ரவரியில் ஸ்விட்சர்லாந்தில் நேருவின் இணையர் கமலா காலமானார். அதற்கு ஆறுதல் சொல்ல வருவதாக ஆள் அனுப்பினான் முஸோலினி. அந்தச் சந்திப்பைத் தவிர்த்து விட்டார் நேரு. சந்திப்பை அவர்கள் ஃபாசிஸ ஆதரவு பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவார்கள் என்பதே காரணம் என்று தனது “இந்திய தரிசனம்” நூலில்

குறிப்பிட்டுள்ளார் நேரு. ஃபாசிஸ்டுகளின் குணமறிந்து ஒதுங்கினார் அவர்.
ஆனால் மூஞ்சேயோ அந்தக் கேடுகெட்ட ஃபாசிஸ குணத்தின் மீது ஆசை கொண்டு அதைத் தழுவினார். முஸோலினியைச் சந்தித்தார். ஐரோப்பிய ஃபாசிஸ்டுகளுக்கும் இந்திய மனுவாதி களுக்கும் இடையே இப்படியாக அன்று ஓர் உறவு மலர்ந்தது. அந்த சித்தாந்தத் தொடர்பு இன்றளவும் வேலைபார்த்தபடியே உள்ளது.

தமிழர்களாகிய நமக்கு சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் நினைவுக்கு வருகிறான். அன்றே அவன் “ஃபாசிஸ்ட் ஜடாமுனி” என்று முஸோலினியின் வாழ்வையும், “கப்சிப் தர்பார்” என்று ஹிட்லரின் வாழ்வையும் விமர்சித்து எழுதியவன். நூல்களின் தலைப்புகளே அவர்களைப் பற்றிய அவனின் மதிப்பீட்டை பறைசாற்றும்.
அவன் எங்கே? வெட்கமில்லாமல் முஸோலினியை சந்தித்து வாழ்த்துச் சொன்ன மூஞ்சே எங்கே? உலகைப் போரில் ஆழ்த்தி லட்சக்கணக்கான பேரின் சாவுக்கு காரணமான ஃபாசிஸத்தை முன்மொழிந்த முஸோலினிக்கு வரலாறு என்னவோ சரியான இடத்தைக் காட்டியது.

இத்தாலியின் மக்கள் அவனுக்கு மரண தண்டனை தந்து, மிலான் நகரின் பொது இடத்தில் அவனது பிணத்தை தலைகீழாகத் தொங்கவிட்டார்கள். எங்கே தனக்கும் அத்தகைய தண்டனை கிடைக்குமோ எனப் பயந்தே ஹிட்லர் அடுத்த இரண்டு நாளில் தற்கொலை செய்து கொண்டான்.

# 5.கிடைத்தது அவர்களுக்கான வேதப் புத்தகம்....

1940ல் ஹெட்கேவார் காலமானதும் ஆர்எஸ்எஸ்சின் சர்சங்சலக்காக ஆனவர் கோல்வால்கர். 1973 வரை அதன் உயர் தலைவராக இருந்தவர் அவரே. “குருஜி” என்றே அவரை அழைப்பார்கள் சங் பரிவாரத்தினர். காரணம் அவர்களின் சித்தாந்தத்தை ஒழுங்கமைத்துக் கொடுத்தவர் அவர். இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பே, 1939லேயே அவர் எழுதியது “நாம் அல்லது நமது தேசியத்தின் வரையறை” எனும் நூல். அதன் காரணமாகவும் தனது இடத்திற்கு அவரைத் தேர்வு செய்தார் ஹெட்கேவார் எனலாம். இதைத்தான் “ஆர்எஸ்எஸ்சுக்கு கிடைத்தது ஒரு வேதப்புத்தகம்” என்கிறார் நூரானி.கூகுளில் கிடைக்கும் இந்த நூலைப் படித்தேன். ஏழு அத்தியாயங்களும் ஒரு முடிவுரையும் உள்ளன. அதன் முகவுரையில் “ஜி. டி. சாவர்க்கரின் ‘ராஷ்டிர மீமன்சா’ எனக்கு உத்வேகமும் உதவியும் தந்த ஒரு நூல். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு விரைவில் வெளிவரவிருக்கிறது” என்று குறிப்பிட்டிருக்கிறார் கோல்வால்கர். இதிலிருந்து இந்த நூல், சிலர் கூறுவதுபோல அந்த நூலின் சுருக்கம் அல்ல, மாறாக இவரின் சொந்த தயாரிப்பு என்பது உறுதியாகிறது.

தேசம் என்பதை வரையறை செய்யும் வேலையில் இறங்கி இப்படியொரு இலக்கணத்தைத் தந்திருக்கிறார்: “தேசம் எனும் கருத்தியலில் நாடு, இனம், மதம், கலாச்சாரம், மொழி எனும் அவசியமான, தவிர்க்க முடியாத ஐந்து கூறுகள் உள்ளன. இந்த ஐந்தும் இணைந்து ஒன்றாக இருக்கும்போது தேசம் இருக்கிறது. இதில் எந்தவொன்று அழிந்தாலும் தேசமே அழிந்து போகும்”.தேசத்திற்கான அவசியமான கூறுகளில் மதத்தைச் சேர்த்துள்ள தந்திரத்தை நோக்குங்கள்.

இதன்படி ஒரு மதத்தவர் எல்லாம் ஒரு தேசத்தவர் ஆகிறார்கள். உலகம் அப்படியா இருக்கிறது? ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் எல்லாம் ஒரு நாடாகவா இருக்கிறார்கள்? மத்திய கிழக்கு முஸ்லிம்கள் எல்லாம் ஒரு நாடாகவா இருக்கிறார்கள்? ஆசியாவின் பௌத்தர்கள் எல்லாம் ஒரு நாடாகவா இருக்கிறார்கள்? ஒரே மதத்தைக் கொண்டுள்ள மேற்கு பாகிஸ்தானும் கிழக்கு பாகிஸ்தானும்கூட தனித்தனி நாடுகளாகிப் போயினவே. இந்துக்கள் மட்டும் எப்படி ஒரு தேசமாக முடியும்? இந்துக்கள் அதிகம் உள்ள இந்தியாவும், நேபாளமும்கூடத் தனித்தனி நாடுகளாகத்தானே உள்ளன. ஆக, உலக யதார்த்தத்திற்கு ஒவ்வாத ஓர் இலக்கணத்தை தந்திருக்கிறார் கோல்வால்கர்.

இந்தியாவில் உள்ள இந்துக்கள் எல்லாம் ஒரு தேசம் என்கிறார். “சரித்திரத்திற்கு முந்திய காலந்தொட்டு இந்த நாட்டில் வாழ்வது புராதன இந்து இனம். இதற்கு பொது கலாச்சாரம், பொது தாய்மொழி, பொது வழமைகள் உள்ளன. இந்த மகத்தான இந்து இனம் சிறப்பான இந்து மதத்தை போதிக்கிறது. இந்த மதத்தால் வழிநடத்தப்படும் இந்த இனமானது முசல்மான்கள் மற்றும் ஐரோப்பியர்களின் சீரழிந்த ‘நாகரிகங்களுடன்’ ஏற்பட்ட தொடர்பையும் மீறி கடந்த

ஆயிரம் ஆண்டுகளாக உலகின் உன்னதமானதாகத் திகழ்கிறது” என்று பிரகடனப்படுத்துகிறார்.

அதாவது ஒரு தேசம் என்பதற்கு இவர் தந்து கொண்ட இலக்கணப்படியான அந்த ஐந்து கூறுகளும் இந்துக்களுக்கு உள்ளதாகவும், ஆகவே அவர்கள் ஒரு தேசம் என்கிறார். இது எவ்வளவு அபத்தம் என்பதற்கு “இந்து” எனும் சொல் நடப்புக்கு வந்ததே ஓராயிரம் ஆண்டுகளாகத்தான் எனும் ஓர் உண்மை போதும். அந்தச் சொல் 4 வேதங்களிலோ, 2 இதிகாசங்களிலோ, 18 புராணங்களிலோ, மனு உள்ளிட்ட தர்ம சாஸ்திரங்களிலோ கிடையாது. பிறகு எப்படி “புராதன இந்து இனம்” என்கிறார்? ஒரு இடத்தில் “இந்து, அதாவது ஆரிய இனம்” என்று சொல்லியிருக்கிறார். தற்போது அந்தச் சொல் புழக்கத்தில் இல்லை என்பதால்தான் இந்து இனம் என்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்படியெனில் இவர் கூறுகிற இந்து தேசம் என்பது ஆரிய தேசமே!
இந்துக்களின் பொது தாய்மொழி எது என்று அவர் அடையாளம் காட்டும்போது அது மேலும் துலக்கமாக வெளிப்பட்டு விடுகிறது.

கோல்வால்கர் எழுதுகிறார்: “மொழி வித்தியாசங்களால் இங்கே பல ‘தேசங்கள்’ இருப்பதாக ஒரு தோற்றம் உள்ளது. உண்மையில் அப்படி இல்லை. சமஸ்கிருதம் எனும் ஒரு மொழி உருவாக்கியவைதான் அந்தப் பல ‘மொழிகள்’. அவை தாய் மொழியாம் சமஸ்கிருதத்தின் பிள்ளைகள். சமஸ்கிருதம் கடவுள்களின் மொழி. அது இமயத்திலிருந்து தெற்கு சமுத்திரம் வரை, கிழக்கிலிருந்து மேற்கு வரை அனைவருக்கும் பொதுவானது. அனைத்து நவீன சகோதர மொழிகளும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை, நடைமுறையில் ஒன்றுதான்.

எனவே தேசத்திற்குத் தேவையான ஒரு மொழி இருக்கிறது”.

இந்தியா பல மொழிவழி தேசியஇனங்களைக் கொண்ட ஒரு நாடு எனும் யதார்த்தத்தை மறுக்க தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளையும் சமஸ்கிருதத்தின் பிள்ளைகளாக்கிவிட்டார். சமஸ்கிருத மொழிக் குடும்பம் வேறு, திராவிட மொழிக் குடும்பம் வேறு என்று தெளிவாக நிரூபித்திருக்கிறார்கள் மொழியியல் வல்லுநர்கள். கோல்வால்கரோ சமஸ்கிருதத்திலிருந்துதான் இவையும் பிறந்தன என்று ஒரே போடாகப் போடுகிறார்! போட்டு, இந்துக்களின் பொது தாய்மொழி சமஸ்கிருதம் என்கிறார்! அப்படியெனில் ஏன் அதை இந்துக்கள் அனைவருக்கும் சொல்லித் தரவில்லை? உயர் வருணத்துப் பெண்களுக்குகூட சொல்லித் தரவில்லையே. தாய்மார்கள் அறியாத தாய்மொழி. அபத்தத்தின் உச்சம், தமிழ் உள்ளிட்ட பிற தேசிய மொழிகளைத் தரம் தாழ்த்தும் அக்கிரமம்.

தேசியத்தின் வரையறைக்கு மதத்தையே பிரதான கூறாக்கியதால் வந்த வினை இது. இதனால் பிற மதத்தவரை அந்த தேசியத்திற்கு அப்பால் இருத்தும் விபரீதமே மிச்சமானது. “இந்துஸ்தானம் எனும் இந்த நாட்டில் இந்து மதம், இந்து கலாச்சாரம், இந்து மொழி என்பவற்றைக் கொண்ட இந்து இனம் உள்ளது. அது தேசம் எனும் கருத்தியலை முழுமையாக்குகிறது. இதற்கு வெளியே இருக்கும் அனைவரும் மெய்யான தேசிய வாழ்விற்கு வெளியே இருப்பவர்கள். அவர்கள் எல்லாம் தேசிய லட்சியத்திற்கு துரோகிகள் மற்றும் எதிரிகள் அல்லது பதமான நோக்கில் சொன்னால் முட்டாள்கள்” என்கிறார் கோல்வால்கர்.இந்து மதத்தை ஏற்காதவர்கள் எல்லாம் தேசியம் என்பதற்குள் வரவே மாட்டார்கள். காரணம் இவரின் தேசியம் அந்த ஒற்றை

மதத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே இதர மதத்தவர் எல்லாம் எதிரிகள்.

அவர்கள் இந்த தேசத்தில் இருக்க வேண்டும் என்றால் இரண்டே வழிகள்தான் உண்டு என்கிறார். அவை: “இந்துஸ்தானத்தில் உள்ள அந்நிய இனங்கள் இந்து கலாச்சாரம் மற்றும் மொழியை ஏற்க வேண்டும், இந்து மதத்தை மதிக்கவும் போற்றவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது தங்களின் தனி இருப்பைக் கைவிட்டு இந்து இனத்தில் இணைந்திட வேண்டும். அல்லது இந்து தேசத்திற்கு முழுமையாக அடங்கியவர்களாக, குடியுரிமைகள்கூட இல்லாதவர்களாக, எந்த உரிமையும் கோராதவர்களாக இந்த நாட்டில் இருக்கலாம். இதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை”.

இந்தியாவின் சிறுபான்மை மதத்தவருக்கு இவர் காட்டும் வழியைப் பார்த்தீர்களா! சுயமரியாதை இல்லாதவர்களாக, சொந்த குடியுரிமை இல்லாதவர்களாக, நடைப்பிணங்களாக அலைய வேண்டும் என்கிறார். இந்தக் காலத்தில் சிஏஏ எனும் குடியுரிமை திருத்தச் சட்டம் வந்தது என்றால், என்பிஆர்- என்ஆர்சி எனப் பேசினார்கள் என்றால் அதன் சித்தாந்த ஊற்றுக்கண் இதில் உள்ளது.

பிற மதத்தவருக்குத்தானே பிரச்சனை என்று எண்ணி விடக் கூடாது. இந்து தேசியம் என்பது இந்துக்கள் அனைவருக்குமான தேசியம் அல்ல. அது அந்தப் பெயரில் கட்டமைக்கப்படும் உயர்வருணத்தவரின் தேசியம்.
அதனால்தான் இந்த மண்ணின் புராதன இலக்கியங்கள் தேசம் பற்றி இப்படி சொல்லியிருப்பதாகக் கூறுகிறார் கோல்வால்கர்: “தேசத்திற்கான ஒரு நல்ல நாடு என்பதில் இந்து மதம்

வகுத்துள்ள சமுதாயத்தின் நான்கு வகுப்பார் இருக்க வேண்டும். அங்கே இந்து மதம் மற்றும் கலாச்சாரம் உத்தரவிட்டுள்ள சமூகச் சட்டங்களை ஏற்காத மிலேச்சர்கள் இருக்கக் கூடாது. வர்ணங்கள் மற்றும் ஆசிரமங்களைக் கொண்ட மக்கள் செழிப்பாக இருக்கும் பூமியே அந்த தேசம்".அதாவது வருணாசிரமத்தை, பிறப்பின் அடிப்படையிலான பேதத்தை வாழ்வு முறையாகக் கொண்டதே அந்த தேசியம்!

அப்படியெனில் பிற மதத்தவர் மட்டுமல்ல சூத்திரர்கள் மற்றும் பஞ்சம இந்துக்களும் சாதியச் சட்டகத்திற்குள் அடங்கி வாழ வேண்டியவர்களே. இந்து தேசியம் என்றபெயரில் அவர் முன்வைத்திருப்பது மனுவாத தேசியமே. இதுதான் சங் பரிவாரத்திற்கு கிடைத்துள்ள அந்த வேதப் புத்தகத்தின் சாரம்.
இன்னும் சந்தேகம் இருந்தால் கோல்வால்கரின் இந்த அழைப்பை செவிமடுங்கள்: "உலகின் முதலாமான, மகத்தான சட்டம் தந்தவரான மனு தனது சட்டத்தை வகுத்தபோது கூறினார்: அனைவருக்கும் முந்திப் பிறந்த பிராமணர்களின் புனித காலடியில் தங்களது கடமைகளை அறிந்து கொள்ள உலகமாந்தர் அனைவரும் வரட்டும்".

# 6.கோட்சே யார்? காந்தியைக் கொன்றது ஏன்?

நூரானியின் நூலில் "ஆர்எஸ்எஸ்சும் காந்தி படுகொலையும்", "ஆர்எஸ்எஸ் மீது தடை" என்று அடுத்தடுத்து இரு அத்தியாயங்கள் உள்ளன. நாடு சுதந்திரம் பெற்ற ஐந்தே மாதங்களில் தேசப்பிதா காந்தியைப் பறிகொடுத்தோம். "எங்களது ஆட்சியில் உயிர் வாழ்ந்த காந்தி உங்களது ஆட்சி வந்ததுமே மாண்டு போனாரே" என்று ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளின் கேலிக்கு ஆளானோம். அன்றைய சூழல் பற்றியும், கொலைகாரன் கோட்சே பற்றியும்  அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

மத அடிப்படையில் இந்தியா, பாகிஸ்தான் எனப் பிரித்து சுதந்திரம் கொடுத்தார்கள் ஏகாதிபத்தியவாதிகள். இதனால் இரு பக்கமும் மதவெறித் தீ கொளுந்துவிட்டு எரிந்தது. வகுப்புவாதிகளின் ருத்ர தாண்டவத்திற்கு இந்து, முஸ்லிம் இரு தரப்பும் பாதிக்கப்பட்டது. இரு மதங்களைச் சேர்ந்த அப்பாவி உயிர்கள் பலியாயின, லட்சக்கணக்கான மக்கள் அங்கும் இங்குமாய் இடம் பெயர்ந்தார்கள்.கிடைத்தது நல்வாய்ப்பு என ஆர்எஸ்எஸ் மதப் பகைமையையும், வன்மத்தையும் தூண்டி விட்டது.

1947-48 காலத்தில் அதன் செயல்பாடுகள் பற்றி மிகுந்த பதற்றத்தோடு பிரதமர் நேரு உள்துறை அமைச்சர் படேலுக்கு எழுதிய கடிதங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார் நூரானி. அவற்றைப் படித்தால் நமது நெஞ்சம் பதறுகிறது. 1947 செப். 30ல் எழுதிய கடிதம் கூறியது: “தில்லியில் மட்டுமல்லாது இதர இடங்களிலும் இப்போது நடக்கும் விவகாரங்களில் ஆர்எஸ்எஸ்சின் கைவரிசை உள்ளது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அமிர்தசரஸில் அவர்களது நடவடிக்கைகள் மிக வெளிப்படையானவை.

ஆனாலும் ஆர்எஸ்எஸ்சின் பிரபலமான உறுப்பினர்கள் சிறப்பு மேஜிஸ்டிரேட்டுகளாகவும் சிறப்பு போலீஸ் அதிகாரிகளாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்”. கொடுமையைப் பார்த்தீர்களா? சங் எப்படி சிவில் வாழ்வில் அன்றே ஊடுருவியிருந்தது என்பது புரிகிறதா?அதே ஆண்டு டிசம்பர் 30ல் படேலுக்கு நேரு எழுதிய இரு கடிதங்களில் இந்த திடுக்கிடும் தகவல்கள் உள்ளன: “அவர்களுக்கு (ராஜா ஹரிசிங்கின் ஜம்மு-காஷ்மீர் அரசுக்கு) நாம் அனுப்பிய ஆயுதங்களை அவர்கள் ஆர்எஸ்எஸ்காரரர்களுக்கு விநியோகித்திருக்கிறார்கள். ஜம்முவில் முஸ்லிம்களை திட்டமிட்டுக் கொலைசெய்தது ஆர்எஸ்எஸ் எனும் நியாயமான குற்றச்சாட்டு எழுந்துள்ளது”. காஷ்மீர் பற்றி கொந்தளித்து பேசும் சங் பரிவாரத்தினர் இது பற்றி வாய் திறப்பதில்லை.
1948 ஜனவரி 5ல் மாகாண முதல்வர்களுக்கு எழுதிய கடிதத்தில் நேரு இப்படி எச்சரித்தார்: “சமீபத்திய விவகாரங்களில் ஆர்எஸ்எஸ் ஒரு முக்கிய பங்காற்றியிருக்கிறது. சில பயங்கரமான சம்பவங்களில் அதற்குள்ள தொடர்பு பற்றிய ஆதாரம் கிடைத்துள் ளது. அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களது மேன்மையான போதனைகள் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. அவர்களது

கொள்கையானது இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது”.

இத்தகைய பின்புலத்தில்தான் நாதுராம் கோட்சே புறப்பட்டான். மகாராஷ்டிராவின் புனேவில் பிறந்தவனின் தந்தையார் ஒரு தபால்காரர், சாதாரண குடும்பம். படிப்பு ஏறாமல் பாதியில் விலகியவன் பிழைப்புக்காகத் தையல் வேலை கற்றுக் கொண்டான் அமெரிக்க பாதிரியார்களிடம். அரசியலில் ஆர்வம் ஏற்பட்டு 1937ல் சாவர்க்கரின் சீடனானான். அதேநேரத்தில் ஆர்எஸ்எஸ் மீதும் பிரியம் கொண்டான்.1938ல் சாவர்க்கருக்கு அவன் எழுதிய கடிதங்களை “இந்து” ஏடு (21-9-2004) வெளியிட்டது. ஒன்றில் கூறினான்: “ஐயா, தங்களது லட்சியம் இந்துராஷ்டிரம் அமைப்பது. இதே ஆசையை நெஞ்சில் ஏந்திய ஆர்எஸ்எஸ்சின் ஐம்பதாயிரம் கட்டுப்பாடான தொண்டர்கள் இருக்கிறார்கள். பஞ்சாபிலிருந்து கர்நாடகம் வரை பரவியிருக்கும் அவர்களுக்கு இன்னும் கிடைக்காதிருப்பது உங்களது தலைமையும் வழிகாட்டுதலுமே. அவர்கள் அதற்காகக் காத்திருக்கிறார்கள்”. சாவர்க்கரும் ஆர்எஸ்எஸ்சும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதே கோட்சேயின் ஆவலாதியாக இருந்தது. “இந்துக்களைத் திரட்டும் சக்தி படைத்த ஒரே அமைப்பு மகாராஷ்டிராவிலும் இந்துஸ்தானத்திலும் ஆர்எஸ்எஸ்சே. உங்களுக்கு சமதையான தலைவர் டாக்டர் ஹெட்கேவாரே” என்று இன்னொரு கடிதத்தில் குறிப்பிட்டான்.

இந்தக் கடிதங்கள் சாவர்க்கரைத் தலைவராக வரித்துக் கொண்டே ஆர்எஸ்எஸ்சை நோக்கி அவன் சென்றதைத் தெளிவாகக் காட்டுகின்றன. நாதுராம் கோட்சேயின் தம்பி கோபால் கோட்சே. இவனும் அந்தக் கொலை பாதகத்தில் சம்பந்தப்பட்டு தண்டனை பெற்றவன்.

சிறையிலிருந்து வெளியே வந்தவன் “நாங்கள் சகோதரர்கள் அனைவரும் ஆர்எஸ்எஸ்சில் இருந்தோம். நாதுராம், தத்தாத்ரேயா, நான், கோவிந்த் ஆகிய நாங்கள் எங்கள் வீட்டில் வளர்ந்தோம் என்பதைவிட ஆர்எஸ்எஸ்சில் வளர்ந்தோம் என்றே சொல்ல வேண்டும். அது எங்களுக்கு ஒரு குடும்பம் போல” எனத் தெரிவித்தான் “ஃபிரெண்ட்லைன்” ஏட்டிற்கு (1994 ஜனவரி 15-30) தந்த பேட்டியில்.நாதுராம் கோட்சேக்கும் ஆர்எஸ்எஸ்சிற்கும் சம்பந்தமில்லை என்று பாஜகவின் எல்.கே. அத்வானி கூறியது பற்றி கேட்டதற்கு அவன் கூறினான்: “அப்படிச்சொல்வது கோழைத் தனம் என்று நான் பதிலடி தந்தேன். ‘காந்தியை கொல்லுங்கள்’ என்று ஆர்எஸ்எஸ் தீர்மானம் போடவில்லை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் நாதுராமை எங்களவர் அல்ல என்று சொல்லக் கூடாது. இந்து மகாசபை அப்படிச் சொல்லவில்லை. ஆர்எஸ்எஸ்சில் பவுதிக் கார்யவா (அறிவார்ந்த பணியாள்) ஆக இருந்தபோது நாதுராம் 1944ல் இந்து மகாசபைக்கு வேலை செய்ய ஆரம்பித்தார்”.

இதற்கு மேலே நாம் என்ன சொல்வது?ஆனாலும் ஒரு கேள்வி இருக்கிறது. 1948 நவம்பரில் நாதுராம் கோட்சே தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தந்தான். அதில் “ஆர்எஸ்எஸ்சில் ஒரு தொண்டனாகச் சேர்ந்தேன். அரசியல் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியம் என்று பட்டதால் சங்கத்தை விடுத்து இந்து மகாசபையில் சேர்ந்தேன்” என்று சொல்லியிருந்தான். இது பற்றி கோபால் கோட்சேயிடம் கேட்டபோது அவன் கூறினான்: “காந்தி கொலைக்குப் பிறகு கோல்வால்கரும் ஆர்எஸ்எஸ்சும் பெரும் சிரமத்தில் இருந்த காரணத்தால் அப்படிக் கூறியிருந்தார். ஆனால் ஆர்எஸ்எஸ்சை விட்டு அவர் விலகவில்லை”. கொலைகாரன் பொய்யனாகவும்

இருந்ததில் ஆச்சரியம் என்ன? உண்மை அவன் உடன்பிறப்பின் வாயிலாகவே வெளிப்பட்டது.

கோபால் கோட்சே மட்டுமல்ல, அவரது பேரன் சத்யகியும்கூட இதை உறுதிப்படுத்தினார் இப்படியாக: “1932ல் சங்லியில் நாதுராம் இருந்த போது ஆர்எஸ்எஸ்சில் சேர்ந்தார். தனது மரணம் வரை அவர் ஒரு பவுதிக் கார்யவா ஆக இருந்தார். அந்த அமைப்பிலிருந்து அவர் வெளியேற்றப்படவும் இல்லை அல்லது அவர் வெளியேறவும் இல்லை”. (எக்னாமிக் டைம்ஸ் 8-9-2016) 1948 ஜனவரி 30ல் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டார். பிப்ரவரி 4ல் ஆர்எஸ்எஸ் தடை செய்யப்பட்டது. அதற்கானை அரசின் அறிவிப்பு கூறியது: “நாட்டின் பல பகுதிகளில் ஆர்எஸ்எஸ் உறுப்பினர்கள் தீ வைப்பு, கொள்ளை, வழிப்பறி, கொலை போன்ற வன்முறைச் செயல்களிலும் கள்ளத்தனமாக ஆயுதங்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளது. சங்கின் செயல்பாடுகளால் கிளப்பிவிடப்பட்ட, உத்வேகப்படுத்தப்பட்ட வன்முறை துதிக்கு பலரும் பலியானார்கள். அதில் கடைசியாக பலியான மிக அருமையான உயிர் காந்திஜியினுடையது”. அதற்கான வன்முறை துதியை கிளப்பிவிட்டது, சூழலை உருவாக்கியது சங்கின் செயல்பாடுகளே என்பது அரசின் முடிவு. அப்போது மத்திய உள்துறை அமைச்சராக இருந்தவர் சாட்சாத் படேல் என்பது நினைவுகூறத் தக்கது.

கொலை நடந்த இரண்டே நாளில், பிப்.1 அன்றே ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர் கைது செய்யப்பட்டிருந்தார். எனினும் ஆகஸ்டில் விடுவிக்கப்பட்டிருந்ததால் தனது அமைப்பின் மீதான தடையை நீக்குமாறு படேலுக்கு நிரப்பந்தம் கொடுக்க ஆரம்பித்தார். அவருக்கு செப். 11ல் எழுதிய கடிதத்தில்

படேல் கூறினார்: “காந்திஜியின் மரணத்திற்குப் பிறகு ஆர்எஸ்எஸ்காரர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்ததாலும், இனிப்புகள் வழங்கியதாலும் மக்கள் மத்தியில் ஆர்எஸ்எஸ் மீதான எதிர்ப்பு மேலும் தீவிரமானது”.நீதியரசர் ச. மோகன் “தியாக தீபம்” என்றொரு நூல் எழுதியிருக்கிறார். அவர் தியாக தீபம் என்று சொல்வது காந்தியையா அல்லது கோட்சேயையா என்று மயக்கம் வருகிறது. அந்த அளவுக்கு கோட்சே தரப்பு வாதங்களை அடுக்கியிருக்கிறார். அதில் தங்களுக்கான தூக்குத் தண்டனையை கோட்சேயும், ஆப்டேயும் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது உள்ளது.
அது: “(15-11-1949 அன்று) உடலாலும் மனத்தாலும் சுத்தமான நிலையில் அவர்கள் கீழே அமர்ந்து ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் அலுவலகப் பிரார்த்தனையில் உள்ள நான்கு வரிகளைப் படித்தனர். பிறகு பகவத் கீதையில் இரண்டு அத்தியாயங்களைப் படித்தனர். அவர்களில் வாழ்வில் எஞ்சியிருக்கும் குறுகிய நேரத்தில் தாய்நாட்டிற்கான சங்கக் கோட்பாடுகளையும், கீதையில் காணப்பட்ட வகையிலான தங்கள் கடமைகளையும் எண்ணிப் பார்த்தனர். கீதையைக் கையில் வைத்தவாறு தூக்குமேடை ஏறினார்கள்”. நாதுராம் கோட்சே தனது வாழ்வின் கடைசிக் கணம் வரை ஆர்எஸ்எஸ் நினைப்பாகவே இருந்திருக்கிறான். அப்படியெனில் கோபால் கோட்சே சொன்னது சரிதான்! நிற்க, கீதையைக் கொண்டாடுவோர் அது ஏன் இந்தக் கொலைகாரர்களுக்கு பிடித்திருந்தது என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

இந்த விபரங்கள் எல்லாம் ஒருபுறமிருக்க, காந்தியைப் படுபாவி கோட்சே கொன்றதற்கு சொந்தப் பகையோ, வாய்க்கால் வரப்பு தகராறோ காரணமில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கொலைக்கு

ஒரே காரணம் கொள்கைப் பகை. அன்று நிலவிய வகுப்பு வாதத் தீயை அணைக்க ஒற்றை மனிதராய் காந்தி பாடுபட்டுக் கொண்டிருந்தார். உண்ணாவிரதம் என்று தன்னைத்தானே வருத்திக்கொண்டு மக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார். அது பிடிக்கவில்லை கோட்சேக்கு. அவர் இருக்கும்வரை வகுப்புவாத விஷம் பரவாது என நினைத்தே அவரைத் தீர்த்துக் கட்டினான்.

காந்தி மத நல்லிணக்கத்திற்காக நின்றார். கோட்சே மத வெறிக்காக நின்றான். காந்தி என்றால் இந்து மதம். கோட்சே என்றால் இந்துத்துவா வன்மம். இந்தத் தீராத முரண்தான் காந்தியைப் பலி வாங்கியது. இந்துத்துவா எனும் மனுவாத மதவெறி இருக்கும்வரை கோட்சேக்கள் அவதரித்துக் கொண்டேயிருப்பார்கள்.

# 7.‘அரசியலற்றது’ துவக்கிய அரசியல் கட்சி!

இந்து மகாசபையின் தலைவர்களில் ஒருவராகிய சாவர்க்கர், காந்தி படுகொலையில் ஒரு குற்றவாளியாக நிறுத்தப்பட்டவர். போதிய ஆதாரங்கள் இல்லை என்று அவர் விடுதலை செய்யப்பட்டாலும் அன்று படேலின் உள்துறையால் அந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தவர் என்பது வரலாற்று உண்மை. அதேநேரத்தில் அதே இந்து மகாசபையைச் சேர்ந்த ஷியாமபிரசாத் முகர்ஜி மத்திய அரசில் தொழில்துறை அமைச்சராக நீடித்தார்! சுதந்திரம் கிடைத்தவுடன் அமைக்கப்பட்ட இடைக்கால அரசு என்பதால் இத்தகைய விசித்திரங்கள் நடந்தன.

இந்த மனிதர் முதலில் சாவர்க்கருக்காகவும் பின்னர் ஆர்எஸ்எஸ்சுக்காகவும் உள்ளே இருந்தபடியே வேலை பார்த்து வந்தார். காங்கிரசுக்குள்ளேயே சிலரும் சங்கிற்கு வக்காலத்து வாங்கினார்கள். இந்தச் சூழலில்தான் ஆர்எஸ்எஸ் மீதான தடையை அரசு நீக்கியது 1949 ஜூலையில். அப்போதும் உள்துறை அமைச்சர் படேல்தான். இதற்காக ஆர்எஸ்எஸ் செய்ய வேண்டியிருந்த ஒரே காரியம் எழுத்துபூர்வ அமைப்புச் சட்டம் ஒன்றை தயாரித்துக் கொள்வது. இப்படி தங்களுக்கு மறுவாழ்வு கொடுத்தவர் என்பதாலும், குஜராத் என்றால் காந்தி என்றிருந்ததை படேல் என மாற்றுவதற்காகவும்தான் அங்கே அவருக்கு 597 அடி உயரத்தில் சிலை வைத்தார்கள்.

அவர்கள் எழுதிக்கொண்ட அமைப்புச் சட்டத்தை பிற்சேர்க்கையாகத் தந்திருக்கிறார் நூரானி. அதன் சரத்து 3 தனது லட்சியமாகக் கூறுகிறது: "இந்து சமாஜத்தில் உள்ள பல்வேறு குழுக்களை ஒன்றிணைப்பது, தர்மம் மற்றும் சான்ஸ்கிருதி அடிப்படையில் அதற்கு புத்துயிர்ப்பு அளிப்பது". இந்தியா என்று பேசவில்லை, இந்து சமாஜம் என்று பேசுகிறது. அதை தர்மம் மற்றும் சான்ஸ்கிருதி அடிப்படையில் மாற்றப் போகிறது என்கிறதே அதன் பொருள் என்ன? சந்தேகமே வேண்டாம், மனு அதர்மத்தை இந்த நவீன காலத்திலும் நிலைநிறுத்துவதையே தனது லட்சியம் என்கிறது வெட்கமில்லாமல்.

சரத்து 4 (பி) சொல்லுகிறது: "அனைத்து மதங்களின்பால் சகிப்புத் தன்மை எனும் அடிப்படைக் கோட்பாட்டை பற்றி நிற்கும். சங்கிற்கு அரசியல் கிடையாது, அது கலாச்சாரப் பணியில் மட்டும் ஈடுபடும். தனிமனித சுயம்சேவக்குகள் வன்முறை மற்றும் ரகசிய முறைகளில் நம்பிக்கை மற்றும் ஈடுபாடுள்ள கட்சிகள் தவிர வேறு எந்தவொரு அரசியல் கட்சியிலும் சேரலாம்". இதர மதங்களின்பால் சகிப்புத் தன்மை இருக்குமாம்! இதைப் படிக்கும்போது நம்மை அறியாமலேயே சிரிப்பு வருகிறது. பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த இயக்கம்தான் ஆர்எஸ்எஸ். இவர்களது இந்துத்துவா என்பதே பிற மத வெறுப்பில் பிறந்தது என்பதைக் கண்டோம். அரசை ஏமாற்ற இப்படி எழுதி வைத்திருக்கிறார்கள். சங்கிற்கு அரசியல் கிடையாது என்கிறார்களே அதை குறித்துக் கொள்ளுங்கள். அடுத்த இரண்டே ஆண்டுகளில் சொந்தமாக ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார்கள்!

சரத்து 5 கூறுகிறது: “அரசு கொடிக்கு விசுவாசம், மரியாதை காட்டுவது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்பதை அங்கீகரிக்கும் அதேவேளையில் சங் தனக்கென ஒரு கொடியை, இந்து கலாச்சாரத்தின் பழைய சின்னமாகிய பக்வா- த்வாஜ் என்பதைக் கொண்டிருக்கும்”. இந்தியாவின் மூவர்ணக் கொடியை தேசியக்கொடி எனச் சொல்லாமல் அரசு கொடி எனச் சொல்லுவதை கவனியுங்கள். காரணம் அசோக சக்கரம் பொறிக்கப்பட்ட மூவர்ணக் கொடியை ஆர்எஸ்எஸ் தேசியக்கொடியாக அங்கீகரிக்கவில்லை.

1947 ஆகஸ்டு 14ல் அதன் பத்திரிகை “ஆர்கனைசர்” எழுதியிருந்தது: “விதிவசத்தால் அதிகாரத்திற்கு வந்தவர்கள் நமது கைகளில் மூவர்ணக் கொடியைத் தரலாம். ஆனால் இந்துக்கள் அதை மதிக்க மாட்டார்கள், ஏற்க மாட்டார்கள். மூன்று என்பது கெட்ட எண். மூன்று நிறங்களைக் கொண்டிருக்கும் கொடி மிக மோசமான உளவியல் தாக்கத்தை தரும், அது நாட்டுக்கு நல்லதல்ல”. அதன் எண்ணம் எல்லாம் மூன்று வண்ணங்களுக்குப் பதிலாக காவி எனும் ஒரே வண்ணக்கொடியை தேசியக் கொடியாக ஏற்றுவதுதான். அவர்களின் பன்மை விரோதப் போக்கு கொடியிலும் வெளிப்பட்டது. இந்த அமைப்புத்தான் திரையரங்குகளில் தேசியக்கொடியை அவமதிப்பதா என்று பொங்கியது என்றால் எத்தகைய பம்மாத்து என்று புரிந்து கொள்ளுங்கள்.

சரத்து 6 (1ஏ) பேசுகிறது: “18 வயது அல்லது அதற்கு மேலான எந்தவொரு ஆண் இந்துவும் ஒரு சுயம்சேவாக்காக பதிந்து கொள்ளலாம்”. ஆண் இந்துவாம்! இந்தியர்கள் எவரும் ஆர்எஸ்எஸ்சில் உறுப்பினராக முடியாது, இந்துக்கள் மட்டுமே ஆக முடியும். இதிலிருந்தே இது பக்கா வகுப்புவாத அமைப்பு என்பதை உணரலாம். பெண் இந்துக்களும்

உறுப்பினராக முடியாது. அன்று முதல் இன்றுவரை இதுதான் நிலைமை. பின்னாளில் ஒரு துணை அமைப்பில் இந்துப் பெண்கள் சேரலாம் என்றார்களே தவிர தாய் அமைப்பில் அவர்கள் சேர முடியாது. மனுஅதர்ம சாஸ்திரம் பெண்களை தரம் தாழ்த்திச் சொன்னதை அப்படியே தன்னில் அமல்படுத்தியுள்ளது ஆர்எஸ்எஸ். இது தெரியாமல் சில பெண்கள் ஆர்எஸ்எஸ்சுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். அது தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்வது என்பதை அறியாமல் உள்ளனர்.

ஆர்எஸ்எஸ்சின் அமைப்புச்சட்டத்தில் இந்தியா எனும் சொல்லே இல்லை, “பாரத்வர்ஷா” என்பதே உள்ளது. இதற்குள் நமது அரசியல்சாசனத்திலிருந்து மாறுபட்ட ஒரு சித்தாந்த, பூகோளக் கண்ணோட்டம் உள்ளது நிச்சயம். சங் பரிவாரத்தினர் தங்களது எதிரிகளை “ஆன்டி இண்டியன்ஸ்” என்பார்கள். உண்மையில் அவர்கள்தாம் அந்தச் சொல்லுக்கு உரியவர்கள். அவர்களது அமைப்புச் சட்டத்தில் இந்தியா இல்லையே! நாட்டின் பெயரை “பாரதம்” என மாற்ற வேண்டும் எனும் சங் பரிவாரத்தின் இன்றைய முனைப்பின் ஊற்றுக்கண் இதில் உள்ளது.

1950 ஜனவரி 26 முதல் அரசியல் சாசனம் நடப்புக்கு வந்து நாடு குடியரசானது. வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான தயாரிப்புகள் ஆரம்பமாயின. காந்திஜியின் படுகொலையைத் தொடர்ந்து அமைச்சர் ஷியாமபிரசாத் முகர்ஜிக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்து மகாசபைத் தலைவர்களில் ஒருவரான அவர் தனது முகபடாமைக் காப்பாற்றிக் கொள்ள 1949 நவம்பரில் அந்த அமைப்பிலிருந்து ராஜினாமா செய்தார். ஆனாலும் அவர் மீதான

சந்தேகப் பார்வை நீடித்தது. முடிவில் 1950 ஏப்ரலில் அமைச்சரவையிலிருந்தும் ராஜினாமா செய்தார்.

இவரை வளைத்துப் போட்டது ஆர்எஸ்எஸ். அந்த ஆண்டு இறுதியில் அவரோடு ஆர்எஸ்எஸ் தலைவர்கள் வி. ஆர். ஓக், பால்ராஜ் மதோக், பாய் மகாவீர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதுபற்றிய மதோக்கின் ஒப்புதல் வாக்குமூலம்: “அரசியல் வெளியில் ஆர்எஸ்எஸ்சின் சித்தாந்தம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஓர் அரசியல் அமைப்பின் உடனடித் தேவையை ஆர்எஸ்எஸ்காரரர்கள் உணர ஆரம்பித்தார்கள். நாட்டில் வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை அறிமுகமானதும் இதன் தேவை மேலும் உணரப்பட்டது. ஆர்எஸ்எஸ் வட்டாரத்தில் எழுந்த இந்த சிந்தனைப் போக்கை டாக்டர் முகர்ஜி அறிவார்”.
அவருக்கும் ஆர்எஸ்எஸ்சுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின் பேரில்தான் “பாரதிய ஜனசங்கம்” எனும் கட்சி 1951 அக்டோபரில் துவங்கப்பட்டது. டில்லியில் நடந்த அதன் மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய முகர்ஜி முழங்கினார்: “முஸ்லிம் வகுப்புவாதத்தின் பலிபீடத்தில் பாரதிய தேசியத்தை நேரு பலி கொடுத்து விட்டார். பாரதத்தில் இப்போது வகுப்புவாதம் இல்லை. இருப்பது எல்லாம் முஸ்லிம்களை தாஜா செய்யும் புது கொள்கை- வருகிற தேர்தலில் ஓட்டு வாங்க. இந்தியாவின் மோசமான ஃபாசிஸ்டாகிய நேரு பிறரைப் பார்த்து ஃபாசிசம் என்கிறார்”.
ஆர்எஸ்எஸ்சின் வகுப்புவாதக் கொள்கையை அப்படியே எதிரொலித்தார் மனிதர்!

ஜனசங்கத்தின் தலைவராக முகர்ஜி இருந்தார் என்றாலும் அதன் இதர முக்கிய பொறுப்புகளில் ஆர்எஸ்எஸ்காரரர்கள் இருத்தப்பட்டார்கள். அதன் பொதுச்செயலாளர் தீன்தயாள் உபாத்யாயா,

செயலாளர் அடல் பிகாரி வாஜ்பாய், செயற்குழு உறுப்பினர்கள் பாய் மகாவீர் மற்றும் பால்ராஜ் மதோக் எல்லாம் பக்கா ஆர்எஸ்எஸ்காரர்கள். 1953 ஜூனில் முகர்ஜி காலமானதும் கட்சியை மேலும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது ஆர்எஸ்எஸ். தாற்காலிகத் தலைவராக இருந்த மவுலி சந்திர சர்மா எனும் ஆர்எஸ்எஸ் அல்லாதவர் 1954 நவம்பரில் கட்சியிலிருந்தே வெளியேற வேண்டிவந்தது. அப்போது அவர் விடுத்த அறிக்கையில் கூறினார்: “ஆர்எஸ்எஸ் சின் கைக்கருவியாக ஜனசங்கத்தை மாற்ற ஒரு தீவிரமான, திட்டமிட்ட முயற்சி நடந்தது. அவர்களது தலைமையகத்திலிருந்து அவர்களது ஆட்கள் மூலமாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அவற்றை ஜனசங்கம் நிறைவேற்ற வேண்டும் எனப்பட்டது”.

“ரிமோட் கன்ட்ரோல் மூலம்  கட்சி நடத்துவதா?” என்று பிற கட்சிகளைப் பார்த்துச் சொல்லுவார்கள், உண்மையில் அவர்களது கட்சிதான் அப்படி ஆர்எஸ்எஸ்சால் அந்தக் காலத்திலேயே இயக்குவிக்கப்பட்டது. இப்போது மிகவும் துணிவு பெற்றவர்களாக வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள். rss.org கூறுகிறது: “ஒரு சில மூத்த சங் நிர்வாகிகள் இந்து தேசியத்தின் மீது மாறாத பற்று கொண்டு 1951ல் பாரதிய ஜனசங்கத்தை துவக்க முடிவு செய்தனர்-டாக்டர் ஷியாமபிரசாத் முகர்ஜி தலைமையில்”.

ஆர்எஸ்எஸ்சுக்கு அரசியல் இல்லை என்ற சொன்னவர்கள்தாம் இப்போது தங்களுக்கான அரசியல் கட்சியை உருவாக்கிக் கொண்டார்கள். அரசியலற்றது துவக்கிய அரசியல் கட்சி!

“உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்” என்றார் வள்ளலார். இத்தகை

யவர்களை நினைத்துத்தான் சொல்லியிருக்கிறார்.

# 8. 'சிந்தனைக் கொத்து' என்பது மனுவாதப் பித்து!

1950களும் 60களும் ஆர்எஸ்எஸ்சுக்கு முக்கியமான ஆண்டுகள். அந்தக் காலத்தில்தான் அதன் தலைவர் கோல்வால்கர் வகுப்புவாத விஷத்தை ஒரு பகுதி இந்துக்கள் மத்தியில் வெற்றிகரமாகப் பரப்பினார். அவரின் இந்தி மொழி உரைகள் பலவும் ஆங்கிலப்படுத்தப்பட்டு Ôசிந்தனைக் கொத்துÕ என்ற பெயரில் 1966ல் வெளியிடப்பட்டன. 1980களின் துவக்கத்தில் “ஞான கங்கை” என்ற பெயரில் தமிழில் வந்தது.ஆர்எஸ்எஸ்சின் தமிழ் ஏடாகிய “விஜய பாரதம்” பதிப்பகம் வைத்துள்ளது. அதன் சார்பாக இதன் நான்காம் பதிப்பு வெளியிடப்பட்டது. அதனுடைய இணையதளத்தில் 2017ல்கூட இதற்கான விளம்பரம் வந்தது. “கிறிஸ்தவ மதமாற்றம்- முஸ்லிம் பயங்கரவாதம்- கம்யூனிஸ்டுகளின் அராஜகம் பற்றி” இந்த நூல் பேசுகிறது என அதில் சொல்லப்பட்டதிலிருந்தே இதன் உள்ளுறையை உணர்ந்து கொள்ளலாம்.

நான்கு பகுதிகளைக் கொண்ட இந்தப் பெரு நூலின் முதல் பகுதி அவர்களது லட்சியத்தை விண்டுரைக்கிறது. அவர்கள் கட்டமைக்க விரும்பும் சமுதாயத்தில் மெய்யான அதிகாரம் அரசியல்வாதிகளிடம் அல்ல, “ஞானிகளிடம்” இருக்கும். ஆதிகாலத்தில் அப்படித்தான் இருந்தது

என்பதை கோல்வால்கர் நினைவுகூர்ந்தார். அந்த ஞானிகள் யாரென்றால் “தர்ம சாஸ்திரக் காவலர்கள்” “அந்த உயர்ந்த அதிகார பீடத்தின் சொல்படி நடப்பவனே ராஜா” என்றார். இதற்கு உதாரணமாக ராமாயணத்தை சுட்டினார். “ராவணன் ஒரு புத்திசாலி ஆக்கிரமிப்பாளன். அவனுக்கு நமது சமூக ஒருங்கிணைப்பின் ரகசியம் தெரியும். வனக் குடில்களில் வசிக்கும் ஞானிகள் மற்றும் முனிவர்களிடமே நமது சமுதாய வாழ்வின் உயிர்-மையம் உள்ளது என்பதை அவன் அறிவான். ஆகவே அவன் அந்தக் கானகக் குடில்கள் மீதும், அங்கே நடந்த யாகங்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுத்தான்” என்றார். அறிந்தோ அறியாமலோ ராமாயண மோதல் நடந்ததற்கான உண்மைக் காரணத்தை சொல்லி விட்டார் கோல்வால்கர். ஆனால் ராவணனை ஆக்கிரமிப்பாளன் என்றார் பாருங்கள் அது திரிபுவேலை. வான்மீகியைப் படித்தால் அவனது ஆளுகைக்குள் இருந்த பகுதிகளில் வந்து முகாமிட்டது முனிவர்களே என்று படுகிறது.

யாக கலாச்சாரத்தை எதிர்த்த ராவணனை ஒழிப்பதற்காக ராமனை தயார் செய்தது அந்த முனிவர்களே என்பதை அடுத்துச் சொன்னார். “விஸ்வாமித்திரர், வசிஷ்டர், அகஸ்தியர் போன்ற முனிவர்களால் அந்த மாவீரன் தயார் செய்யப்பட்டான்...முடிவில் ராவணனின் உயிரை எடுத்த அஸ்திரத்தை ஸ்ரீராமனுக்கு தந்தது முனிவர் அகஸ்தியரே. அதர்ம சக்திகளின் கோட்டையாக இருந்த லங்காவின் சாம்பலிலிருந்து மீண்டும் சமுதாயம் இன்னும் அதிக உத்வேகத்தோடு எழுந்தது” என்றார். ஆக ராமாயண யுத்தம் தர்ம சக்திகளுக்கும் அதர்ம சக்திகளுக்கும் இடையில் நடந்தது. இங்கே தர்மம் என்பது வர்ண, யாக தர்மம்.

அதை போதிக்கும் முனிவர்கள் சொல்படி கேட்கும் ராஜாவைக் கொண்ட கட்டமைப்பு. அதர்மம் என்பது அவற்றை ஏற்காத போக்கு. அதனால்தான் லங்கா தகனம் நடந்தது. அப்படித்தான், தவமிருந்ததற்காக சூத்திரன் சம்புகனின் தலையை வாங்கினான் ராமன். ராமாயண காலத்தில் மட்டுமல்ல, அதற்கு அடுத்த காலத்திலும் சமுதாயத்தின் மெய்யான அதிகாரம் துறவிகளிடமே இருந்தது, அதற்கு உதாரணம் ஆதி சங்கரர் என்றார். “பௌத்த மார்க்கமானது தாய்ச் சமுதாயத்திற்கும், தாய் மதத்திற்கும் துரோகியாக மாறியது. அந்த இக்கட்டான கட்டத்தில் நமது தர்மத்தையும், நமது சமுதாயத்தையும் காக்கப் புறப்பட்டவர் யார்? ஞானிகள் மற்றும் முனிவர்கள் எனும் அதே பாரம்பரியம்தான் ஸ்ரீசங்கராச்சாரியார் எனும் வடிவத்தில் தனது சக்தியையும் ஆற்றலையும் காண்பித்தது. புத்தர் ஓர் அவதாரமாக நீடித்தாலும், ஒரு தனித்த மார்க்கம் என்றிருந்த பௌத்தம் தாய்மண்ணிலிருந்து அகற்றப்பட்டது” என்று குதூகலமாகக் கூறினார்.

ஆக பௌத்தத்தை வீழ்த்தியது அரசர்கள் அல்ல, சங்கரர் போன்ற முனிவர்களின் வழி காட்டுதல்படி நடந்துகொண்ட அரசர்கள். இந்தப் பாரம்பரியம் இப்போதும் தொடர வேண்டும் என்றார். அதாவது அகஸ்தியர், சங்கரர் மரபில் வந்துள்ள ஆர்எஸ்எஸ்சின் சொல்படி நடக்கிற ஆட்சியாளர்கள் வேண்டும் என்றார். ஆஹா, இன்று அதை சாதித்து விட்டார்களே.பழைய காலம் போல அதிகாரம் தங்களிடம்தான் இருக்க வேண்டும் என்று சொன்னது மட்டுமல்லாது அதன் மூலம் தாங்கள் கட்டமைக்க விரும்புகிற சமுதாயமும் பழைய காலத்தியதே என்றார் கோல்வால்கர். “கடவுள் தனக்குத்தானே வெளிப்படுத்திக் கொண்ட விராட் புருஷா இந்து மக்களே என்றார்கள் நமது முன்னோர்கள். ‘இந்து’ எனும் வார்த்தையை அவர்கள்

பயன்படுத்தா விட்டாலும் புருஷ சூக்தத்தின் கீழ் வரும் விவரிப்பில் அது தெளிவாகிறது: ‘பிராமணர் தலை, ராஜா கைகள், வைஸ்யர் தொடைகள், சூத்ரர் பாதம்’. இதன் அர்த்தம் இந்த நான்கு வித ஏற்பாடுகளைக் கொண்ட மக்களே, அதாவது இந்து மக்களே நமது கடவுள்” என்றார்.

பிறப்பின் அடிப்படையில் பேதம் பார்த்து, அதற்கேற்ப வடிவமைக்கப்பட்ட படிநிலை வர்ண சமுதாயமே கடவுளாம். வர்ணாசிரமத்தை கடவுளாக துதிக்கிறவர்கள் நிலைநாட்ட விரும்புகிற சமுதாயம் சாதிமயமானதே என்பதில் சந்தேகம் வேண்டாம்.இன்னும் சந்தேகம் இருந்தால் கோல்வால்கர் கூறிய இந்த மகா வார்த்தைகளைக் கேளுங்கள்: “வர்ண-வியாவஸ்த என்பது நமது சமுதாயத்தின் மற்றொரு முக்கிய அம்சம். இன்று அதை ‘சாதியம்’ என்று கேவலமாகக் கூறுகிறார்கள். அதில் உள்ள சமூக ஒழுங்கை சமூக பாகுபாடு என்று தவறாக எடுத்துக் கொள்கிறார்கள். தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை ஒரு தனிநபர் நிறைவேற்றுவதன் மூலமே அவர் கடவுளை துதிக்கிறார் என்கிறது கீதை.

கடவுளின் நான்குவித வெளிப்பாடாகக் கட்டமைக்கப்பட்டுள்ள சமுதாயத்தில் அவரவர் வழியில், அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப கடவுளை வணங்க வேண்டும்”. வர்ணாசிரமம்தான் சமூக ஒழுங்கு, அதை சமூக பாகுபாடு எனக் கருதக் கூடாது. அதாவது பிறப்பின் அடிப்படையில் சில பகுதியினரை தாழ்நிலையில் இருத்துவதுதான் இவர்களின் சமூக ஒழுங்கு. அதைப் போய் பாகுபாடு எனலாமோ? உங்கள் மீது குதிரை ஏறுவதுதான் நாங்கள் வகுத்துள்ள நியதி, அதை நீங்கள் நல்லபடியாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.“ஆனால் இன்று சாதி முறைமை

அடையாளம் தெரியாதபடி சீரழிந்து விட்டது" என்று மிகவும் வருத்தப்பட்டிருக்கிறார் கோல்வால்கர்.

அதுமட்டுமா? "ஹரிஜனங்கள், பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் என்று பெயரிட்டு அவர்களைப் பணத்திற்கு அடிமையாக்க அவர்களுக்கு சிறப்புச் சலுகை கொடுத்து பிரிவினை உணர்வை அரசு இயந்திரம் ஊட்டுகிறது" என்றும் சொல்லியிருக்கிறார்.காலங்காலமாக இங்கிருக்கும் சாதியத்தால் இடஒதுக்கீடு போன்ற சிறப்புச் சலுகை வர வில்லை, அந்த இடஒதுக்கீட்டால்தான் சாதியச் சிந்தனை, பிரிவினை உணர்வு எழுகிறது. விஷயத்தை அப்படியே தலைகீழாகத் திருப்பி விட்டார் பாருங்கள்! இங்கு ஏற்கெனவே சாதி வேறுபாடு இல்லா திருமணங்கள் நடப்பது போலவும், அதைக் கெடுப்பது இடஒதுக்கீடே என்பது போலவும் கூறியதை நோக்குங்கள். இதன் நீட்சி அந்த இடஒதுக்கீட்டை ஒழிப்பதே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மத்திய தொகுப்பில் மருத்துவக் கல்வி இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒபிசியினருக்கு இடஒதுக்கீடு தரவில்லை என்றால் அதற்கான சித்தாந்தக் காரணி இங்கே இருக்கிறது. இப்படிப்பட்டவர் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை ஒப்புக் கொள்வாரோ? "இப்போது 'பெண்களுக்கு சமத்துவம்', 'ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை' என்பதற்கு மவுசு ஏற்பட்டுள்ளது. அதிகாரத்தின் பல அடுக்குகளிலும் பாலின அடிப்படையில் இடஒதுக்கீடு வேண்டும் எனப்படுகிறது. அப்படியாக சாதியம், வகுப்புவாதம், மொழிவாதம் இத்யாதி வரிசையில் பெண்ணியம் என்பதும் சேர்ந்துள்ளது" என்றார். பெண் உரிமை பற்றி எவ்வளவு கேலியும், கிண்டலும். இவர்கள் ஏன் ஆர்எஸ்எஸ்சில் பெண்களைச் சேர்ப்பதில்லை என்பது புரிந்ததா? அதிகாரத்தின் உயர்மட்டத்தில் அவர்களுக்கு இடம் தரக்கூடாது என்பதே இவர்களின்

நிலைபாடு. சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 1/3 இடஒதுக்கீடு பற்றி மத்திய ஆட்சியாளர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பேசாததன் மர்மம் விளங்கியதா?

இந்து ராஷ்டிரம் என்ற பெயரில் தாங்கள் அமைக்க விரும்புகிற இந்த மனுராஷ்டிரத்தின் எதிரிகள் யார் என்றும் சொல்லியிருக்கிறார். “உள்நாட்டு அபாயங்கள்” என்று மூவரைச் சொல்லுகிறார். அவர்கள்: “முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ்டுகள்”. இதில் முதல் இருவர் பற்றி என்ன சொல்லியிருப் பார் என்பதை எளிதில் எவரும் ஊகிக்கலாம். இன்றைக்கு சங் பரிவாரத்தினர் அவர்கள் மீது சொல்லும் அவதூறுகளை எல்லாம் அன்றைக்கே சொல்லி விட்டார். கம்யூனிஸ்டுகளை ஏன் வெறுத்தார்?அவர்கள் இந்தியாவிலும் சோசலிசத்தை கொண்டுவர முனைகிறார்கள் என்பதால் வெறுத்தார். “சோசலிசம் நமது மண்ணில் விளைந்தது அல்ல, அது நமது ரத்தத்திலும் பாரம்பரியத்திலும் இல்லை” என்று ரத்த பரிசோதகராக அறிவித்தார்!

“எல்லாரும் எல்லாப் பெரும்செல்வமும் எய்தலாலே/ இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ” என்று சமதர்மத்தை முன்மொழிந்தவன் கம்பன். பாவம், இந்த பாரம்பரியத்தை அறியாதவர் அல்லது விரும்பாதவர் கோல்வால்கர். இவர்கள்தாம் “வசுதெய்வ குடும்பகம்” என்றும் அவ்வப்போது சொல்லிக் கொள்வார்கள். அதாவது இந்த உலகம் ஒரு குடும்பம் என்பார்கள். அப்படியெனில் நல்ல சிந்தனை உலகின் எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும் ஏற்க வேண்டியதுதானே?அது முடியாது. இவர்களது மனுதர்மம்தான் உலகம் முழுக்கப் பரவ வேண்டுமே தவிர சம தர்மம் அல்ல. இரண்டும் கறாரான முரண் கொள்கைகள் என்பதை கோல்வால்கர் அறிவார்.

அதனால்தான் கம்யூனிஸ்டுகளை மனமார வெறுத்தார்.

இன்று சங் பரிவாரத்தினர் தனியார் மயத்தை ஆதரிப்பதன் சூட்சமத்தை அறிய அன்று அவர்களின் குருஜி நிலச்சீர்திருத்தம்,வங்கிகள்-தொழில்கள் நாட்டுமையாக்கம் போன்ற கோரிக்கைகளை எப்படிக் கடுமையாக எதிர்த்தார் என்பதை வாசிக்க வேண்டும். வர்ணரீதியாக மட்டுமல்ல வர்க்கரீதியாகவும் ஆர்எஸ்எஸ் அடித்தட்டு இந்துக்களின் எதிரி என்பதை தெளிவாக உணர்த்துகிறது. அவர் கம்யூனிஸ்டுகள் பற்றி எழுதியிருக்கும் பகுதி.
மொத்தத்தில், 'சிந்தனைக் கொத்து' என்பது மனுவாதப் பித்து!

# 9. நூலிழையில் உயிர் தப்பினார் காமராஜர்!

1950 -60 களில் பேச்சுவீரராக மட்டுமல்லாது செயல்வீரராகவும் இருந்தார் கோல்வால்கர்.

ஜனசங்கம் எனும் அரசியல் கட்சியைக் களத்தில் இறக்கியது மட்டுமல்லாது வேறுசில துணை அமைப்புகளையும் உருவாக்கினார். rss.org கூறுகிறது: தேசம் கட்டும் செயல்களில் ஈடுபடுத்த அகில் பாரதிய வித்யார்த்தி பரிஷத், கிறிஸ்தவ மதமாற்றத்தை தடுக்க பாரதிய வனவாசி கல்யாண் ஆஸ்ரமம், சோசலிச-மார்க்சிய சித்தாந்தத்திலிருந்து தொழிலாளர்களை விடுவிக்க பாரதிய மஸ்தூர் சங், சாதுக்களை ஒரு பொதுமேடையில் இணைக்க விஸ்வ இந்து பரிஷத் ஆகியவை இந்தக் காலத்தில் அமைக்கப்பட்டன. இவை அனைத்தையும் சேர்த்து “சங் பரிவாரம்” என அழைக்கும் வழக்கம் உருவானது.

ஆக இப்படி அழைக்கும் பழக்கத்தை இவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள்! இந்தப் பரிவாரத்தின் இந்தக்காலத்திய செயல்பாடுகள் முக்கியமானவை. அரசியல்சாசனத்தின் வரைவுக்குழுத் தலைவராக இருந்துஅந்தப் பணியை முடித்த கையோடு மனுசாஸ்திரமாக இருந்த இந்து சட்டத்தை மனித சாஸ்திரமாக மாற்றியமைக்கும் முயற்சியில் இறங்கினார் அண்ணல் அம்பேத்கர். அவரது மசோதாவில் முன்வைக்கப்பட்டிருந்த திருத்தங்கள்: 1. ஒரு மகனைப் போல விதவை அம்மா மற்றும்

மகள்களுக்கும் முன்னோர் சொத்தில் சமமான பங்கு 2. பெண்ணுக்கு விவாகரத்து உரிமை 3. பலதார மணத்திற்கு தடை 4. சாதி மறுப்பு திருமணத்திற்கு அனுமதி 5. வேறு சாதி குழந்தையைத் தத்தெடுக்க அனுமதி. இந்து பெண்களுக்கு நியாயம் வழங்குவதும், இந்து மதத்தில் உள்ள சாதியத் தடைகள் சிலவற்றை நீக்குவதுமே இவற்றின் நோக்கங்கள் என்பது வெள்ளிடைமலை.

இந்து சமுதாயத்தை ஒன்றிணைக்கவும் வலுப்படுத்தவுமே தான் எழுந்து வந்திருப்பதாகச் சொல்லும் ஆர்எஸ்எஸ் இந்த திருத்தங்களை ஆதரித்திருக்க வேண்டுமல்லவா? இல்லை என்பது மட்டுமல்ல, எதிர்த்து தில்லி நகர வீதிகளில் இறங்கியது. வரலாற்றாளர் ராமச்சந்திர குஹா தனது 'காந்திக்குப் பிந்திய இந்தியா' நூலில் அதை விவரித்திருக்கிறார்: “1949 டிச. 11ல் தில்லி ராம்லீலா மைதானத்தில் ஆர்எஸ்எஸ் ஒரு பொதுக்கூட்டம் நடத்தியது. அதில் மசோதாவைத் தாக்கி தலைவர்கள் பேசினார்கள். ‘இந்து சமுதாயத்தின் மீது வீசப்பட்ட அணுகுண்டு’ என்றார் ஒருவர். மறுநாள் ஆர்எஸ்எஸ்காரர்கள் அரசியல் நிர்ணயசபை கட்டடத்தை நோக்கிச் சென்றார்கள். ‘இந்து சட்ட மசோதா ஒழிக’, ‘பண்டிட் நேரு ஒழிக’ என்று முழங்கினார்கள். பிரதமர், டாக்டர் அம்பேத்கர் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தார்கள். ஷேக் அப்துல்லாவின் காரைத் தாக்கினார்கள். ஆர்எஸ்எஸ் நடத்திய கூட்டங்களில் பிரதான பேச்சாளராக இருந்தவர் சுவாமி கர்பாத்ரிஜி மகாராஜ். இவர் சட்ட அமைச்சர் அம்பேத்கரின் சாதி பற்றிப் பேசினார். ஒரு முன்னாள் ‘தீண்டப்படாதவருக்கு’ பிராமண பண்டிதர்கள் வகுத்த சாஸ்திரங்களில் தலையிட உரிமை இல்லை என்றார்”.

ஆர்எஸ்எஸ்சின் இந்த மூர்க்கத்தனமான எதிர்ப்பு காங்கிரசுக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முதல் பொதுத்தேர்தல் வேறு வந்து கொண்டிருந்தது. நேரு தயங்கி நின்றார். வெறுத்துப்போன அம்பேத்கர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அதுபற்றி 1951 அக். 10ல் அவர் வெளியிட்ட அறிக்கையில் தனது ராஜினாமாவிற்கான காரணங்களில் ஒன்று இந்து சட்ட மசோதாவை நிறைவேற்றாதது என்றார். பட்டியல் சாதி மக்களின் வாக்குகளைக் குறிவைத்து இன்று அம்பேத்கரைப் புகழும் இதே சங் பரிவாரம்தான் அன்று அவரின் கொடும்பாவியைக் கொளுத்தியது, அவரது ராஜினாமாவிற்கு காரணமாக இருந்தது.

1952 முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்று நேரு தலைமையில் அதன் அரசு அமைந்தது. பிரதான எதிர்க்கட்சியாக வந்தது கம்யூனிஸ்டு கட்சி. இப்போது தைரியம் வரப்பெற்றவராய் 1955-56ல் அந்த மசோதாவை சில மசோதாக்களாகப் பிரித்து நிறைவேற்றினார் நேரு. அதற்கு கம்யூனிஸ்டுகளின் ஆதரவும் இருந்தது. இன்றைக்கு இந்துப் பெண்களுக்கு சில உரிமைகள் கிடைத்திருக்கின்றன என்றால் அதற்கு அம்பேத்கர், நேரு, கம்யூனிஸ்டுகள்தாம் காரணம்.
இந்துக்களுக்காக இருப்பதாகச் சொல்லும் ஆர்எஸ்எஸ்சோ அதற்கு மிகப் பெரிய தடைக்கல்லாக இருந்தது. அப்படி அன்று இந்து பெண்களுக்கு எதிராக நின்றவர்கள்தாம் இன்று முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவாக முத்தலாக் தடை சட்டம் போட்டிருக்கிறார்களாம்! ஆடு நனைகிறதே என்று ஓநாய் ரொம்பவும் கவலைப்பட்டதாம்!பல மொழிவழி தேசிய இனங்களைக் கொண்ட நாடு இந்தியா என்பதை ஆர்எஸ்எஸ் ஒப்புக் கொள்வதில்லை. ஒப்புக் கொண்டால் அது அதனது மதவழி தேசியத்திற்கு ஆபத்தாகிப்போகும். ஆனால் யதார்த்தம் என்னவோ

முன்னதாகத்தான் இருந்தது.தேசிய இனத்தை தீர்மானிப்பதில் மொழியே ஒரு தீவிரப் பங்காற்றியது. சுதந்திரப் போராட்டத்திற்கு மக்களைத் திரட்டவும் மொழிவழி மாகாணக் கமிட்டிகளையே காங்கிரஸ் அமைக்க வேண்டியிருந்தது. அதன் நீட்சியாக மொழிவாரி மாகாணக் கோரிக்கை வலுவாக எழுந்தது. தெலுங்கர்களுக்கு ஆந்திரா கேட்டு பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிரை விட்டதும் அந்தப் பிரச்சனை தீயாய்க் கிளம்பியது. முடிவில் ஆந்திரா மட்டுமல்ல தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா என்று மொழிவாரி மாநிலங்களை அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது காங்கிரஸ் ஆட்சி. அதற்காக அமைக்கப்பட்ட மாநிலங்களின் மறுசீரமைப்பு குழுவும் அப்படியாகவே பரிந்துரை தந்தது.அது, தனது அடிமடியில் கைவைப்பதாக நினைத்தது ஆர்எஸ்எஸ். இந்து தேசியம் என்றால் நாடு முழுவதும் உள்ள இந்துக்களுக்கு ஒரே நாடு, ஒரே நிர்வாகம்; எதற்கு மாநிலங்கள், மாநில அரசுகள், மாநிலத் தேர்தல்கள்? 1956 ஜூலையில் அது போட்ட தீர்மானம் கூறியது: "பாரதத்தின் ஒற்றுமையைப் பராமரிக்கும் ஒரே வழி ஒற்றை ஆட்சி முறையே. நாட்டைச் சீர்குலைக்கும் கொள்கைகளைக் கைவிட்டு ஒற்றை ஆட்சிமுறையைக் கொண்டுவரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசை வற்புறுத்துகிறது".(ஆர்எஸ்எஸ் தீர்மானிக்கிறது: 1950-1983)

இதே ஆண்டில் தான் எழுதிய "தேவை ஒற்றை ஆட்சிமுறை" எனும் கட்டுரையில் அதை இன்னும் தெளிவாக விவரித்தார் கோல்வால்கர்:"நமது அரசியலமைப்புச் சட்டத்தின் சமஷ்டி கட்டமைப்பு பற்றிய பேச்சையெல்லாம் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். பாரதம் எனப்பட்ட ஒரே அரசுக்குள் இருக்கும் 'சுயாட்சி பெற்ற' அல்லது அரைகுறை சுயாட்சி பெற்ற 'மாநிலங்கள்' எல்லாம் ஒழித்துக்

கட்டப்பட வேண்டும். துண்டுதுண்டான, பிராந்தியவாரியான, தனித்த போக்குடைய, மொழிவாரியான அல்லது இதரவகைப் பெருமிதத்திற்கு வகை செய்பவை எல்லாம் நமது ஒன்றுபட்ட தன்மைக்கு கேடு விளைவிப்பவை. இவற்றின் அடையாளமே இல்லாத ‘ஒரு நாடு, ஒரு அரசு, ஒரு நாடாளுமன்றம், ஒரு நிர்வாகம்’ என்பதைப் பிரகடனப்படுத்த வேண்டும்”. (சிந்தனைக் கொத்து) இந்து தேசியம் என்பதன் அரசமைப்பு வெளிப்பாடு இப்படியாகத்தான் இருக்கும். மொழிவாரி தேசிய இனங்களது இருப்பை மறுப்பதன் இயல்பான நீட்சி இப்படியாகத்தான் இருக்கும். சங் பரிவாரத்தின் ஆட்சி ஜிஎஸ்டியை படு உற்சாகமாக அமல்படுத்தி மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தை அனேகமாக பறித்திருப்பதும், அவற்றை மத்திய அரசிடம் கையேந்தும் நிலைக்கு கொண்டு வந்திருப்பதும், இன்னும் பல வகைகளில் அவற்றின் தலைகளில் குட்டிக் கொண்டே இருப்பதும் அவர்களது குருஜியின் இந்த ஆசையை நிறைவேற்றத்தான்.ஆர்எஸ்எஸ்சுக்கு மனிதர்களைவிட மாடுகளை ரொம்பப் பிடிக்கும். வடநாட்டில் பசு மீது வளர்க்கப் பட்டிருந்த முரட்டுபக்தி இதன் வகுப்புவாத வன்ம அரசியலுக்கு மிகவும் வசதியாக இருந்தது.

அதை வைத்து பிற மதத்தவரையும் பட்டியல் சாதி மக்களையும் ஒருங்கே வெறுக்கக் கற்றுக் கொடுத்தார்கள் இந்துக்களுக்கு. தன்னை வைத்து பாலை மட்டுமல்லாது மதவெறி விஷத்தையும் கறக்கிறார்கள் என்பதை அந்தக் கோமாதா அறியாள். 1952லேயே “பசு வதை தடுப்பு தினம்” கடைப்பிடித்தார்கள் என்றாலும் அதன் ஓர் உச்சம் பின்னர் வந்தது.அது நடந்து 50 ஆண்டுகள் கழித்து தி இந்து ஏட்டில் (9-11-2016) ஜெயராம் ரமேஷ் எழுதினார்: “1966 நவம்பர் 7ல் ஆயிரக்கணக்கான சாதுக்கள் கூடி

நாடு முழுமைக்கும் உடன் பசுவதை சட்டம் வேண்டும் என்றார்கள். ஜனசங்கம் எம். பி. சுவாமி ராமேஷ்வரானந்தின் வெறித்தனமான பேச்சால் தூண்டடப்பட்டு நாடாளுமன்றத்திற்குள் நுழைய முயன்றார்கள். கதவுகள் மூடியிருக்கவும் நாடாளுமன்ற வீதியிலிருந்த அரசு கட்டடங்களைத் தாக்கினார்கள். அங்கே தனது வீட்டிலிருந்த காங்கிரஸ் தலைவர் காமராஜர் மயிரிழையில் உயிர் தப்பினார்".

ஜெயராம் ரமேஷ் காங்கிரஸ்காரர் என்று நினைத்தால் தி கேரவான் (7-11-2016) எழுதியிருப்பதை நோக்குங்கள்: "அந்தக்காலத்து தி டிரிபியூன் பத்திரிகையின்படி 1,25,000 பேர் திரண்டிருந்தார்கள். முன்னணியில் இருந்தவர்கள் காவியுடை அணிந்திருந்த சாதுக்கள். அவர்களது கைகளில் வாள்கள், ஈட்டிகள், சூலாயுதங்கள் இருந்தன. ஜனசங்கம் எம். பி. சுவாமி ராமேஷ்வரானந்தின் வெறித்தனமான பேச்சைத் தொடர்ந்து போலீஸ் காவலை மீறிக் கொண்டு நாடாளுமன்றத்திற்குள் புகப் பார்த்தார்கள். போலீஸ் மீது கற்களையும் ஆயுதங்களையும் வீசினார்கள். அவர்களைத் தடுக்க கண்ணீர் புகை குண்டுகளையும் லத்திகளையும் பயன்படுத்திய போலீஸ் முடிவில் துப்பாக்கிச் சூடு நடத்தியது. கூட்டம் அரசு கட்டடங்களைத் தாக்கியது. நாடாளுமன்ற வீதியில் அல்லது கன்னோட் சர்கசில் தாக்கப்படாத ஒரு கட்டடம் இல்லை. மேலும் காங்கிரஸ் தலைவர் குமாரசாமி காமராஜ் மற்றும் மத்திய அமைச்சர் கோட்டா ரகுராமையாவின் வீடுகளும் தாக்கப்பட்டன. உள்துறை அமைச்சர் நந்தா நவம்பர் 9 அன்று ராஜினாமா செய்தார். துப்பாக்கிச் சூட்டில் ஒரு கான்ஸ்டேபிள் உட்பட 8 பேர் மாண்டதாக உள்துறை இணையமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி கூறினார்". இவர்கள் சாதுக்களாம்! சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முதலாக நாடாளுமன்ற கட்டடத்திற்குள் புகுந்து

அதைக் கைப்பற்ற முயன்றவர்கள் இவர்களே. இவர்கள் எப்படி சாதுக்கள் ஆவார்கள்? இவர்கள் அராஜகவாதிகள், பலாத்காரவாதிகள். தலைவர்களது உயிர்களுக்கு இவர்களால் பேராபத்து நேரவிருந்தது. இதை துவக்கத்திலேயே தடுக்கத் தவறினார் என்பதால்தான் நந்தா பதவி விலக வேண்டி வந்தது.

அப்போது பிரதமராக இருந்தவர் இந்திரா. நாடு முழுவதும் பசுவதையை தடை செய்ய முடியுமா என்று ஆராய ஒரு குழுவை அமைத்தார். ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர், பூரி சங்கராச்சாரியார், பொருளாதார அறிஞர் அசோக் மித்ரா, பால்வளத்துறை வல்லுநர் வி. குரியன் போன்றோர் அதில் உறுப்பினர்கள். “1966 நவம்பரில் நடந்த அந்த இயக்கம் ஆர்எஸ்எஸ்சால் நடத்தப்பட்டதே என்று கோல்வால்கர் என்னிடம் கூறினார்” என்று பின்னாளில் எழுதினார் வி.குரியன். (News18.com, 3-12-2018)

பசுவதை தடுப்பு என்ற பெயரில் மனிதவதையில் இறங்கிய ஒரு கூட்டத்தை அன்று கிளப்பிவிட்டது ஆர்எஸ்எஸ்சே எனும் வலுவான குற்றச்சாட்டு வரலாற்று பக்கங்களில் பதிவாகியுள்ளது. அதில் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் உயிரும் சிக்கியிருந்தது, நல்லவேளையாக அவர் தப்பினார்.

# 10.பழைய ஜனசங்கமே பாரதிய ஜனதா கட்சி!

1969ல் காங்கிரசில் சிண்டிகேட், இண்டிகேட் என்று பெரும் பிளவு வெடித்தது. பின்னதன் தலைவராகிய இந்திரா தனது ஆட்சிக்கு மக்கள் ஆதரவைத் திரட்ட அந்த ஆண்டு ஜூலையில் 14 பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார். வங்கித்துறை மீதான மக்களின் நம்பிக்கை என்பது பொருளாதாரத்தின் அஸ்திவாரம் ஆகும். அது சேமிப்பை ஊக்குவித்து ஒரு நிலைத் தன்மையை தரும். அன்றும் அதற்குப் பிறகும் இந்தியப் பொருளாதாரம் உலகளாவிய சில பேரிடர்களுக்கு ஓரளவு தாக்குப் பிடித்தது என்றால் அதற்கு காரணம் வங்கிகள் தேசியமயம். அதனால்தான் 1964ல் உதயமாகியிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி,காங்கிரசுடன் ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும் இந்த நடவடிக்கையை உற்சாகமாக ஆதரித்தது.

எதிர்த்த கட்சி எது தெரியுமோ? அது ஆர்எஸ்எஸ்சின் அரசியல் பிரிவாகிய ஜனசங்கம். அதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதே அதை எதிர்த்து முழங்கினார் அதன் தலைவர் வாஜ்பாய். அதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கலான சமயத்திலும் தனது கண்டனத்தை வெளிப்படுத்தினார். இண்டியன் எக்ஸ்பிரஸ் ஏடு (5-8-1969) தரும் தகவல் இது:
“மூன்றாவது வாசிப்பில் விவாதத்தை துவக்கி வைத்த ஜனசங்கத் தலைவர் ஏ.பி. வாஜ்பாய் ஆழ்ந்த

பரிசீலனை தேவைப்படும் இந்த மசோதாவை அவசரஅவசரமாக அரசு நிறைவேற்றப் பார்ப்பதாகக் கடுமையாக விமர்சித்தார். வெறும் நாட்டுடமையாக்கல் மூலம் சோசலிசத்தைக் கொண்டுவந்து விடலாம் என்று உறுப்பினர்கள் ஆசைப்படுவதாக அவர் எச்சரித்தார். இதுவரை கிடைத்த அனுபவமே திருப்தியானது அல்ல என்றார். தனது எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு அவர் வெளிநடப்புச் செய்தார். அவரோடு அவரது கட்சியைச் சார்ந்த ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள். வங்கிகள் நாட்டுடைமை மசோதாவை மக்களவை நிறைவேற்றியது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் சுதந்திரா மற்றும் ஜனசங்க இருக்கைகள் காலியாகக் கிடந்தன”.ஜனசங்கத்தின் குருஜி கோல்வால்கர் எப்படி கம்யூனிஸ்டுகளை ஒரு எதிரியாக பாவித்தார், சமதர்மச் சிந்தனையை அந்நிய கருத்தியலாகச் சித்தரித்தார் என்பதைக் கண்டோம். அதை அப்படியே உள்வாங்கி நடப்பில் காட்டியது ஜனசங்கம். இன்றைக்கு தனிப்பெரும்பான்மையோடு ஆட்சியிலிருக்கும் சங் பரிவாரத்தினர் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளை மீண்டும் தனியுடைமையாக்கப் பார்க்கிறார்கள் என்றால் அதற்கான படுபிற்போக்கான சித்தாந்தம் அவர்கள் பாரம்பரியமாகப் பெற்றது.

பிரிட்டீஷ் ஆட்சி காலத்தில் சிறிதும் பெரிதுமாக பல சமஸ்தானங்கள் இந்தியாவில் இருந்தன. இவற்றை இந்தியாவோடு இணைப்பதற்காக அவர்களுக்கு மன்னர் மானியம் தர ஒப்புக் கொண்டது சுதந்திர இந்தியா! அதன்படி 279 ராஜாக்கள் கொழுத்த தொகை பெற்றார்கள். கூடவே பட்டங்கள், வரிச்சலுகைகள், தனிக் கொடிகள், விழாக்களில் துப்பாக்கி மரியாதை என்று சிறப்பு மரியாதைகளும் பெற்றார்கள். இது

வேண்டாத வேலை. ஏற்கெனவே அந்த மன்னர்கள் மக்களைச் சுரண்டி சொந்தமாக ஏகப்பட்ட செல்வம் சேர்த்துக் கொண்டு சுகமாக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு மக்களின் வரிப்பணத்திலிருந்து மேலும் மானியம் தரும் அநியாயம் இது. அதுபோல அவர்களுக்கான தனி மரியாதைகள் அந்தந்தப் பகுதி வெகுமக்களை தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாக்கியது. ஒரு குடியரசு நாட்டில் இது கிஞ்சித்தும் பொருத்தம் இல்லாதது. ஆனாலும் அப்படித்தான் அந்த சமஸ்தானங்களை இந்தியாவோடு இணைத்தார் அன்றைய உள்துறை அமைச்சர் படேல்.

இந்திரா காலத்தில் இந்த மானியத்தை ரத்து செய்ய வேண்டும் எனும் கோரிக்கை வலுவாக எழுந் தது. இயல்பாக இதற்கும் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட இடதுசாரிகளின் ஆதரவு இருந்தது. இதையும் எதிர்த்தது ஜனசங்கம். அந்தக் கட்சியின் மத்தியப்பிரதேசத் தலைவரே ஒரு முன்னாள் ராணிதான். குவாலியர் ராஜ்மாதா விஜயராஜே சிந்தியா “மன்னர்கள் தங்களின் உரிமைக்காகப் போராடுவார்கள்” என்று ஆத்திரத்தோடு அறிவித்தார். (டிஒஜ ஏடு31-8-1970) 1970 ஆகஸ்டில் மன்னர் மானிய ஒழிப்பிற்கான அரசியல் சாசன திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தது. மக்களவையில் பேசிய ஜனசங்கத்தின் பால்ராஜ் மதோக் “இது மக்களின் அடிப்படை உரிமையில் கைவைப்பது” என்று கொதித்தார்.
அவருக்கு மகாராஜாக்கள்தான் மக்கள்! மாநிலங்களவையில் பேசிய அக்கட்சியின் பீதாம்பர்தாஸ் “இது பக்கா துரோகம்” என்று கொந்தளித்தார். மக்களின் வரிப்பணத்தை தூக்கி மன்னர்களின் ஆடம்பர வாழ்வுக்கு தராவிட்டால் அது துரோகம்! உண்மையில் இவர்கள்தாம் மக்களின் ஆகப்பெரும் துரோகிகள். மக்களவையில்

வெற்றிபெற்ற மசோதா இத்தகையவர்களால் மாநிலங்களவையில் தோற்றுப் போனது. இரு அவைகளிலும் எதிர்த்து வாக்களித்தது ஜனசங்கம்.சித்தாந்தரீதியாக நிலப்பிரபுத்துவத்தின் சமூக சாரமாகிய மனுவாதத்தை தழுவியிருந்த ஆர்எஸ்எஸ் நடைமுறைரீதியாக நிலப்பிரபுக்களின் ஆதரவைத் தனது அரசியலுக்குப் பெற்றிருந்தது. 1952 தேர்தலில் ராஜஸ்தானில் வெற்றி பெற்றிருந்த ஜனசங்கத்தின் 8 எம்எல்ஏக்களும் ஜாகீர்தார்கள், அதாவது ஜமீன்தார்கள் என்று குறித்திருக்கிறார் அத்வானி தனது சுயசரிதையில். 1971 மக்களவைத் தேர்தலில் ஜனசங்கத்தின் வேட்பாளர்களாக சில ராஜாக்கள் நிறுத்தப் பட்டார்கள். நிற்காத ராஜாக்கள் ஜனசங்கத்தின் வேட்பாளர்களுக்காக ஆதரித்து பிரச்சாரம் செய்தார்கள். அந்தத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் பெரு வெற்றி பெற்றது.

1973ல் கோல்வால்கர் காலமானதைத் தொடர்ந்து ஆர்எஸ்எஸ்சின் தலைவராக பாலாசாகேப் தேவரஸ் வந்தார். இவர் காலத்தில்தான் அவசரநிலை ஆட்சியைக் கொண்டுவந்தார் இந்திரா. அந்த அமைப்பு இரண்டாம் முறையாகத் தடை செய்யப்பட்டது. தேவரஸும் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் தள்ளியவர்களிடமே இறைஞ்சுவது சாவர்க்கர் காலத்திலிருந்து வந்த பாரம்பரியம் இவர்களுக்கு. இந்திராவிற்கு இவர் எழுதிய கடிதங்களை வெளியிட்டிருக்கிறார் நூரானி. 1975 நவம்பர் 10ல் அவர் எழுதிய கடிதம் இப்படி ஆரம்பித்தது: “உங்களது தேர்தலை உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அங்கீகரித்திருப்பதற்கு நான் உங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறேன்”. அப்படியொரு தீர்ப்பை பெறுவதற்காக சட்டத்தையே திருத்தியிருந்தார் இந்திரா.அதையெல்லாம் அறியாதவர் போல வாழ்த்துச் சொன்னார்!

எல்லாம் எதற்காக என்றால் இதற்காக:
“ஆர்எஸ்எஸ்சின் ஆயிரக்கணக்கான ஊழியர்களை விடுதலை செய்யுங்கள், சங் மீதான கட்டுப்பாடுகளை நீக்குங்கள். அப்படிச் செய்தால் ஆர்எஸ்எஸ் ஊழியர்களின் சுயநலமில்லா பணியை தேசிய வளர்ச்சிக்கு (அரசு மற்றும் அரசு அல்லாததற்கு) பயன்படுத்திக் கொள்ள முடியும்”. சாவர்க்கரின் மன்னிப்பு கடித பாணியே தான்! விடுதலை செய்யுங்கள், உங்களுக்கு சேவை செய்கிறோம்! இந்திரா அரசுக்கு எதிராக ஜெயப்பிரகாஷ் நாராயண் நடத்திய இயக்கத்தில் தீவிரமாக இறங்கியிருந்தது ஆர்எஸ்எஸ் சின் மாணவர் பிரிவாம் ஏபிவிபி. அந்த இயக்கத்தை பாராட்டி 1974 மார்ச்சில் ஆர்எஸ்எஸ் தீர்மானமும் போட்டிருந்தது. ஆனால் இந்தக் கடிதத்தில் ஜே.பி. இயக்கத்திற்கும் சங்கிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று ஒரே போடாகப் போட்டார்! காரியத்தை சாதிக்க எந்த அளவுக்கும் போவார்கள் என்பது உறுதியானது.

இந்த விவகாரத்தில் ஆச்சார்யா வினோபா பாவேயையும் இழுத்து விட்டார் தேவரஸ். 1976 ஜனவரியில் அவருக்கு எழுதிய கடிதத்தில் இப்படியாக கெஞ்சினார்: “24ந்தேதி மதிப்பிற்குரிய பிரதமர் தங்களை பவ்னர் ஆசிரமத்தில் சந்திக்கவிருப்பதாக செய்தி பார்த்தேன். அப்போது சங் பற்றி பிரதமருக்கு உள்ள தவறான பார்வையைப் போக்குமாறு நான் உங்களை இறைஞ்சுகிறேன். அதன் மூலமாக ஆர்எஸ்எஸ் ஊழியர்கள் விடுதலையானால், சங் மீதான தடை நீக்கப்பட்டால் பிரதமர் தலைமையிலான வளர்ச்சி மற்றும் வளத்திற்கான திட்ட நடவடிக்கையில் சங் ஊழியர்கள் பங்கு கொள்வார்கள்”. விடுதலை செய்தால் போதும், அடைத்தவர்களுக்கு ஊழியம் செய்யத் தயார்!ஏதோ ஒரு குருட்டு தைரியத்தில்

இந்திரா மக்களவைத் தேர்தலை நடத்த, அவ்வமயம் “ஜனதா கட்சி” என்பது அவசரஅவசரமாக உருவாக்கப் பட்டது. அதில் ஜனசங்கமும் சேர்ந்து கொண்டது. அன்று எழுந்திருந்த சர்வாதிகார எதிர்ப்பு மனோநிலையில் ஜனசங்கத்திற்கும் ஒரு ஜனநாயகக் காவலன் பிம்பம் கிடைத்தது. 1977ல் நடந்த அந்தத் தேர்தலில் வட மாநிலங்களில் ஜனதா கட்சி பெருவெற்றி பெற்று மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. ஜனதாவிற்கு கிடைத்த 295 எம்பிக்களில் ஜனசங்கத்தவர் 93 பேர். இதனால் வாஜ்பாய், அத்வானி, பிரிஜ்லால் வர்மா எனும் மூன்று ஜனசங்கத் தலைவர்கள் மத்திய மந்திரிகளாயினர். சங் பரிவாரத்தினர் முதன் முதலாக மத்திய அரசுஅதிகாரக் கட்டமைப்பிற்குள் நுழைந்தனர். அவசரநிலை சர்வாதிகார ஆட்சி வகுப்புவாத சக்திகளுக்கு இப்படியொரு வாய்ப்பைத் தந்து போனது.ஜனதா கட்சியில் சேர்ந்திருந்த இதர கட்சிகள் எல்லாம் தம் சொந்த இருப்பைக் கலைத்துவிட்டு புதிய அமைப்பில் தங்களைக் கரைத்துக் கொண்டனர். ஆனால் ஜனசங்கத்தவரோ தங்களின் ஆர்எஸ்எஸ் தொடர்பை துண்டித்துக் கொள்ளவில்லை. கேட்டால் அது அரசியல் கட்சி அல்ல, கலாச்சார அமைப்பு என்று சால்ஜாப்பு சொன்னார்கள். இதை நம்ப இதரர்கள் தயாராக இல்லை. ஆர்எஸ்எஸ்சுடனான உறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்றனர். ஜனசங்கத்தவரோ அதை ஏற்கவில்லை. அவர்களது நோக்கம் முழு ஜனதா கட்சியையும் ஆர்எஸ்எஸ்சின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது என்பது உறுதியானது. இப்படியாக எழுந்த இரட்டை உறுப்பினர் பிரச்சனையின் காரணமாக அங்கிருந்து கூண்டோடு விலகினார்கள் ஜனசங்கத்தவர். அதிலிருந்தும் அவர்கள் ஆர்எஸ்எஸ் கட்டுப்பாட்டில் இருப்பது நிச்சயமானது. விலகியவர்கள் உருவாக்கிக் கொண்ட கட்சிதான் “பாரதிய ஜனதா கட்சி”. பழைய ஜனசங்கம்

இப்படியாக புது நாமகரணத்துடன் மீண்டும் அவதாரம் எடுத்தது.

இது பற்றி rss.org கூறுகிறது: “25 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் அரங்கில் அழுத்தமான தடத்தை பதித்திருந்த பாரதிய ஜனசங்கமானது ஜனதா கட்சியின் மிகப் பலமான உறுப்பாக மாறியது. அந்த கட்சி 1977ல் மத்தியில் ஆட்சிக்கு வந்தது. ஜனசங்கத்தின் அரசியல் வளர்ச்சி கண்டு மிரண்டுபோன ஜனதா கட்சியின் இதர உறுப்புகள், ஜனசங்கத்தினர் சங்கில் உறுப்பினராக இருப்பதை மையப் பிரச்சனையாக்கினர். அப்போது அந்தக் கட்சியிலிருந்து சுயம் சேவக்குகள் வெளியே வந்து 1980ல் பாரதிய ஜனதா கட்சியை அமைத்தனர். இந்தப் புதிய கட்சி பாரதிய ஜனசங்கத்தின் பாரம்பரியத்தை தொடர்ந்தது”.ஆக பாஜக என்பது சுயம்சேவக்குகள் உருவாக்கிய கட்சியே! இதை ஆர்எஸ்எஸ்சே ஒப்புக் கொள்கிறது. ஆனாலும் என்ன நம்புங்கள் அதற்கு அரசியல் கிடையாது, வெறும் கலாச்சார அமைப்பே! கேப்பையிலே நெய் வடிகிறது என்றால் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்!

# 11.'இந்து எழுச்சிக்காக' விநாயகர் ஊர்வலம்!

ஒரே மதம், ஒரே நாடு என்று ஆர்எஸ்எஸ் சொல்லிக் கொண்டாலும் மாநிலங்களில் நிலவிய தனித்தன்மைகளைக் கவனத்தில் கொண்டே அது தன்னை வளர்த்துக் கொண்டது. தமிழகமும் அதற்கான உதாரணமே. அகில இந்திய துணை அமைப்புகளை உருவாக்கிய அந்த அமைப்பு தமிழகத்திற்கு என்றே “இந்து முன்னணி” என்பதை துவக்கியது.

முன்னணியின் அதிகாரப்பூர்வ இணையதளம் கூறுகிறது: “இந்து முன்னணி 1980ல் துவக்கப்பட்டது. நாத்திகப் பிரச்சாரத்தை முறியடிப்பதற்காகவும், மத மாற்றத்தைத் தடுப்பதற்காகவும், இந்து மதத்தின் பெருமைகளை இந்துக்களிடம் புரிய வைப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. இந்து முன்னணியின் கடும் உழைப்பால் நாத்திகப் பிரச்சாரம் முறியடிக்கப் பட்டுள்ளது. மதமாற்றம் தடுக்கப்பட்டு வருகிறது. கோவை, திருச்சி போன்ற இடங்களில் எல்லாம் கம்யூனிஸ்டுகள் கொடிகட்டிப் பறந்த நிலைமை மாறி இன்று தேசிய இயக்கங்கள் கால் பதிக்கத் துவங்கி விட்டன. எந்தத் தமிழகத்தில் விநாயகர் சிலை உடைப்பு நடந்ததோ அந்த தமிழகத்தில் இன்று விநாயகர் சதுர்த்தி விழா ஊர்வலங்கள் களைகட்டத் துவங்கிவிட்டன”.

இந்து முன்னணி என்பது அடித்தட்டு, ஏழை இந்துக்களின் உயர்வுக்காக உதயமானது அல்ல. மாறாக, பகுத்தறிவுப் பிரச்சாரத்தை தடுக்கவும், அரசியல்சாசனம் வழங்கியுள்ள மதமாற்ற உரிமையைப் பறிக்கவும், கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை ஒடுக்கவும் கிளப்பிவிடப்பட்டது. இதுவும் சங் பரிவாரத்தின் ஓர் அங்கமே என்பது “இந்து முன்னணி:1980 முதல் 2010 வரை” எனும் அதன் ஆவணத்தின் மூலமே வெளிப்படுகிறது. அது கூறுகிறது: “17 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இராமர் கட்டிய பாலத்தை இடிக்கக் கூடாது என இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அவர்கள் 2005 டிசம்பரில் திருவல்லிக்கேணியில் தனிஆளாக கையெழுத்து இயக்கத்தை துவக்கினார். 2006 மார்ச்சில் நடந்த ஆர்எஸ்எஸ் பிரதிநிதி சபாவில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டு ஆர்எஸ்எஸ் தலைவர் பூஜனிய சுதர்சன்ஜி நாடு முழுவதும் ஒருநாள் கையெழுத்து இயக்கம் நடத்த அறைகூவல் விடுத்து ஒரே நாளில் 35 லட்சம் கையெழுத்து வாங்கி ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டது”.

17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இராமர் பாலம் கட்டினாராம்! பரிணாம வளர்ச்சியில் நவீன மனிதனே அப்போதுதான் தோன்றிக் கொண்டிருந்தான். இவர்களோ அப்போதே ராமன், ராவணன், சீதை என்றும், சீதையை மீட்க பாலம் என்றும் கதைக்கிறார்கள்! இந்த அபத்தமான வாதத்தை முன்வைத்து தென்னிந்தியாவிற்கே பெரும் பயன் தரும் ஒரு வளர்ச்சி திட்டத்தை தடுத்துவிட்டார்கள். இதிலே கம்யூனிஸ்டுகளைப் பார்த்து “வளர்ச்சியின் எதிரிகள்” என்கிறார்கள். உண்மையில் அது யார் என்பது இதில் வெளிப்பட்டது. மறுபுறம் இந்த விஷயத்தை இவர்கள் ஆர்எஸ்எஸ்சிடம் எடுத்துப் போனதிலிருந்து அதன் துணைஅமைப்புகளில் ஒன்றே இது என்பதும் உறுதியானது.

தனது சாதனைகளில் ஒன்றாக விநாயகர் ஊர்வலத்தைச் சொல்கிறது இந்து முன்னணி. தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி என்பது வெகுகாலமாகக் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையே. ஆனால் அதை வீட்டுப் பண்டிகையாக நடத்தினார்களே தவிர வீதிக்கு கொண்டுவந்தது இல்லை. மண்ணாலான சிறு பிள்ளையாரை வீட்டில் வைத்து வணங்கி, மூன்றாம் நாள் அருகிலுள்ள நீர்நிலையில் கரைத்து விடுவார்கள். இந்து முன்னணிதான் தெருக்களில் பெரும்பெரும் விநாயகர் சிலைகளை நிறுவி, அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று நதியில், கடலில் போடும் வேலையை ஆரம்பித்தார்கள். எதற்கு?

அதே ஆவணம் சொல்கிறது: “தமிழகத்தில் இந்துஎழுச்சியை உருவாக்குவதற்காக 1983ல் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை திருவல்லிக்கேணியில் இந்து முன்னணி துவக்கியது. தற்போது 50,000 க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்று வருகிறது”. ஆக விநாயகர் சக்தி வாய்ந்த கடவுள், அவரை வணங்கினால் நினைத்தது நடக்கும், கேட்டது கிடைக்கும் எனும் பக்தி நோக்கில் இந்த ஊர்வலங்கள் நடத்தப்படவில்லை, மாறாக “இந்து எழுச்சியை உருவாக்குவதற்காக” இந்த ஏற்பாடு! அது மட்டுமா? அடுத்து அது சொல்வதைக் கேளுங்கள்:
“மசூதி உள்ள நெடுஞ்சாலைகளில் சுவாமி ஊர்வலங்கள் மேளதாளத்துடன் செல்ல முடியாத நிலை இருந்தது. விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் மூலமாக இன்று தமிழக வீதிகளில் திருவல்லிக்கேணி போன்ற 4 இடங்களைத் தவிர மற்ற இடங்களில் மேளதாளத்துடன் மசூதி வழியாகச் செல்லும் சூழ்நிலை உருவாகிஉள்ளது”. ஆக இந்து எழுச்சி என்பது இந்த சங் பரிவாரத்திற்கு மசூதி முன்பு மேளதாளத்துடன் சென்று

தகராறு செய்வது! அதற்காகத்தான் இவர்கள் விநாயகரை எடுத்துச் சென்றார்களே தவிர அவர் மீது கொண்ட பக்தியால் அல்ல. இதிலிருந்து சாதாரண இந்து பக்தர்கள் வணங்கும் அரசமரத்து பிள்ளையார் வேறு, ஆர்எஸ்எஸ் பிள்ளையார் வேறு என்பது துல்லியமாகத் தெரிகிறது.இன்னும் சந்தேகம் இருந்தால் அந்த ஆவணம் முத்தாய்ப்பாய்ச் சொல்லுவதைக் கவனியுங்கள்: “பெரியார் பிறந்த தமிழகத்தில் இந்து எழுச்சி ஏற்படாது என்று பேசிவந்த சூழ்நிலை மாறி தமிழகம் என்றுமே ஆழ்வார்கள், நாயன்மார்கள் பூமிதான் என்றும், தேசிய தெய்வீக தமிழகம்தான் என்றும் நிலைநாட்டப்பட்டுள்ளது விநாயகர் சதுர்த்தி எழுச்சி ஊர்வலத்தால்”. எப்படிக் குறிவைத்து வேலை பார்க்கிறார்கள் என்பது புரிகிறதா? விநாயகர் பெயரைச் சொல்லி நிலப்பிரபுத்துவ சாம்ராஜிய காலத்து தமிழகத்தை மீண்டும் கொண்டுவரப் பார்க்கிறார்கள். பெரியாருக்கு மாற்றாக ஆழ்வார்கள்-நாயன்மார்களை முன்னிறுத்துவது சமூகசீர்திருத்தத்திற்கு மாற்றாக வர்ணாசிரமத்தை புகுத்த துடிக்கும் இவர்களது ஆசையின் வெளிப்பாடு. நாயன்மார்களில் ஒருவராகிய நந்தனாருக்கு ஏற்பட்ட கதியை, சமண-புத்த மதங்கள் வன்மத்தோடு ஒடுக்கப்பட்டதை நினைத்துக் கொண்டால் இது புரியும்.

நெல்லை மாவட்டம் தென்காசிக்கு அருகே உள்ள மீனாட்சிபுரத்தின் பட்டியல் சாதி மக்கள் இஸ்லாமிற்கு மாறினார்கள் 1981ல். இதையொரு அகில இந்தியப் பிரச்சனையாக்கி அல்லோல கல்லோலப்படுத்தியது ஆர்எஸ்எஸ். அந்த அமைப்பிற்குப் பின்னாளில் பொதுச்செயலாளரான எச். வி. சேஷாத்திரி அப்போதே “மீனாட்சிபுரத்தின் எச்சரிக்கை” என்றொரு பிரசுரம் எழுதினார். அதில் கூறினார்: “தமிழ்நாட்டின் அந்த நான்கு மாவட்டங்களில் பாதிப்புக்கு ஆளான கிராமங்கள் அனைத்திற்கும் ஆர்எஸ்எஸ் ஆய்வுக்குழு

சென்றது. அவர்களால் திரட்டப்பட்ட விபரங்களைக் கொண்டு மேலும் மதமாற்றம் நடக்காதபடித் தடுக்கவும், மதம் மாறியவர்களை மீண்டும் மாற்றவும் ஒரு செயல்திட்டம் வகுக்கப்பட்டது. ஒரு பிரம்மாண்டமான இந்து ஒற்றுமை மாநாட்டை மீனாட்சிபுரத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது".

ஜூலையில் அப்படியொரு மாநாடு நடக்கவும் செய்தது. ஆனால் "இந்து ஒற்றுமை" என்றார்களே அதற்கு என்ன செய்தார்கள்? மாறியவர்கள் அனைவரும் பட்டியல் சாதி மக்கள் என்பதால் மாற்றத்திற்கான காரணம் தீண்டாமைக் கொடுமையே என்பது சொல்லாமலே தெரிந்தது. எனவே இனி இந்து மதத்தில் தீண்டாமை இருக்காது, தீண்டாமையைக் கடைப் பிடிப்போர் இந்து மதத்திலிருந்து நீக்கப்படுவார்கள், இந்துக்கள் அனைவரும் சமமானவர்களே, அவர்களது ஒற்றுமையை நிலைநிறுத்த சாதி வித்தியாசமின்றி திருமணம் நடக்க வேண்டும் என்று சொன்னார்களா? அதெல்லாம் இல்லை."சுத்தி" எனும் சடங்கின் மூலம் அவர்களில் சிலரை மீண்டும் இந்து மதத்தில் சேர்த்து, பட்டியல் சாதிக்கான சான்றிதழ் வாங்கிக் கொடுத்தார்கள்! பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்த ஊருக்குச் சென்ற இந்தியா டுடே (30-4-1991) செய்தியாளர் தந்துள்ள விபரம் இது! ஆக இந்து மதத்தில் படிநிலைச் சாதிமுறைமை இருக்கத்தான் செய்யும், ஆனாலும் மதம் மாறக்கூடாது! அது அரசியல் சாசனத்தின் பிரிவு 25(1) அனைவருக்கும் தந்துள்ள உரிமை என்றாலும் மதம் மாறக் கூடாது! இதுதான் ஆர்எஸ்எஸ்சின் அடாவடித்தனம். இதைத் தமிழகத்திலும் நடத்தினார்கள்.1982ல் குமரி மாவட்டத்தின் மண்டைக்காட்டில் மதக் கலவரம் வெடித்தது. பேராசிரியர் சி.காட்வின் சாம் எழுதிய ஆய்வுக்கட்டுரை தந்துள்ள விபரங்கள்:

“கோயில் திருவிழாவையொட்டி கிறிஸ்தவ மீனவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே மோதல் நடந்தது. மார்ச் 1ல் நடந்த துப்பாக்கி சூட்டில் 6 மீனவர்கள் உயிரிழந்தனர். மார்ச் 15ல் மேலமணக்குடி எனும் கடற்கரை கிராமத்திலும் போலிஸ் துப்பாக்கி சூடு நடந்தது. அதில் 2 மீனவர்கள் உயிரிழந்தனர். மார்ச்சுக்கும் டிசம்பருக்கும் இடையே சுமார் 50 மோதல்கள் நடந்தன”. அண்மைக்காலத் தமிழக வரலாற்றில் இவ்வளவு பெரிய இந்து-கிறிஸ்தவ மோதல் நடந்ததில்லை. “அமைதிப் பூங்கா” எனப்பட்ட தமிழகத்தையும் மதக் கலவர பூமியாக மாற்ற முடியும் என்பதை அந்த மாவட்டத்தில் காண்பித்தார்கள் வகுப்புவாதிகள்.

அப்போது இருந்த எம்ஜிஆர் ஆட்சி இது பற்றி விசாரிக்க நீதிபதி வேணுகோபால் கமிஷனை நியமித்தது. 1986ல் அது தந்த அறிக்கையில் இந்த இரு பரிந்துரைகள் இருந்தன: “1. மோசடியான மற்றும் தவறான வழிகளில் நடைபெறும் மத மாற்றங்களைத் தடை செய்ய வேண்டும். 2. ஆர்எஸ்எஸ்சின் பயிற்சிகள் மற்றும் அணிவகுப்புகள் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் அச்சத்தையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்குவதால் அவற்றை தடை செய்ய வேண்டும்”. “மோசடியான மற்றும் தவறான வழிகள்” என்று எவற்றை சொல்வது? ஒரு ரசிகன்கூட தனது ஹீரோவை சட்டென்று மாற்றிக் கொள்வதில்லை. இவ்வளவு காலமாக வணங்கிவரும் கடவுளை ஒருவர் அவ்வளவு எளிதில் மாற்றிக் கொள்வாரா? மாற்றுகிறார் என்றால் அதற்கு அக, புற காரணங்கள் நிச்சயம் இருக்கும். இதில் நியாயமான காரணங்கள், மோசடியான காரணங்கள் எனத் தரம் பிரிப்பது எளிதல்ல. அப்படி பிரித்து சட்டம் போட்டால் அது நடைமுறையில் மத மாற்றத்தையே தடுப்பதாகத்தான் முடியும். 2002ல் ஜெயலலிதா ஆட்சி இப்படித்தான் கட்டாய மத மாற்ற

தடைச் சட்டம் என்பதைக் கொண்டுவந்தது; அதை உற்சாகமாக ஆதரித்தது பாஜக. ஆனால் மக்களின் அதிருப்திக்கு ஆளானது ஆட்சி. 2004 மக்களவைத் தேர்தலில் அதிமுக அடைந்த தோல்விக்கு அதுவும் ஒரு காரணம் எனப்பட்டது. பின்னர் அந்த சட்டத்தை கலைஞர் ஆட்சி ரத்து செய்தது.

ஆர்எஸ்எஸ்சின் பயிற்சிகளும், அணிவகுப்புகளும் எத்தகையவை என்பதை அரசு நியமித்த ஒரு கமிஷனே சொல்லியது கவனிக்கத் தக்கது. ஆனாலும் அவை நடந்தன. தமிழகத்தின் மத நல்லிணக்க மரபைக் கெடுத்து வட மாநிலங்கள் போல இதையும் ஆக்க அது அன்றே முயற்சி செய்தது என்பதற்கான ஆதாரமே மண்டைக்காடு சம்பவங்கள். நல்லவேளையாக மக்கள் ஒற்றுமை நேசர்கள் விழிப்போடு இருந்ததால் அன்று கலவரத் தீ மேற்கொண்டு பரவவில்லை.

# 12.சம்பூகன் மண்டலை வீழ்த்த மீண்டும் ராமர்!

நூரானியின் நூலில் “ராமரின் பெயரால் அதிகாரம்” என்றொரு அத்தியாயம் உள்ளது. அயோத்தியில் பாபர் மசூதி உள்ள இடமே ராமர் பிறந்த இடம், அங்குதான் அவருக்கு கோயில் கட்ட வேண்டும் என்பதை தனது வகுப்புவாத அரசியலுக்கான நிகழ்ச்சிநிரலின் மிக முக்கியமான கூறாகக் கொண்டது ஆர்எஸ்எஸ். அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இந்து வாக்கு வங்கியை உருவாக்கவும், அதற்கு ராமரைப் பயன்படுத்தவும் அது தீர்மானித்தது. ராமர் மீதான பக்தியினால் அந்த இயக்கத்தை அது துவக்கவில்லை. பக்திதான் காரணம் என்றால் மசூதியை அவர்கள் குறி வைத்திருக்க மாட்டார்கள் அல்லவா? வேறுவொரு இடம் பார்த்து எப்போதோ கட்டியிருப்பார்கள். பாபரா? ராமரா? என்று கேள்வி எழுப்பினால்தான் அவர்கள் விரும்பும் மதவெறி அரசியல் வேர்விடும் என்று கணக்குப் போட்டு களத்தில் இறங்கினார்கள்.

விஸ்வ இந்து பரிஷத்திற்கு இந்த வேலை ஒதுக்கப்பட, அது பஜ்ரங் தள் எனும் ஓர் இளைஞர் பிரிவை உருவாக்கியது. அதாவது ஆர்எஸ்எஸ்சுக்கு ஒரு பேரன் பிறந்தது. அந்த பஜ்ரங் தள்ளின் அதிகாரப்பூர்வ இணையதளம் கூறுகிறது: “ராம்-ஜானகி ரத யாத்திரையை நடத்த 1984ல் விஎச்பி முடிவு செய்தது. அந்த யாத்திரைக்கு பாதுகாப்பு தர பஜ்ரங் தள்

அமைக்கப்பட்டது. அதுவும் ராம ஜென்ம பூமி இயக்கத்தில் இணைந்து கொண்டது. இந்து சமுதாயத்தை அவமதிக்கும் எந்தவொரு சின்னத்தையும் சிறிதும் பொறுத்துக் கொள்ள அது தயாராயில்லை. நாட்டையும் தர்மத்தையும் காக்க எந்தவகை தியாகத்தையும் செய்ய அது தயாரானது". தர்மத்தை காப்பது என்ற பெயரிலும், அதற்காக தியாகம் செய்வது என்ற பெயரிலும் எத்தகையதொரு பட்டாளத்தை ஆர்எஸ்எஸ் உருவாக்கியது என்பதை எளிதில் உணரலாம். பஜ்ரங் தள் என்பதன் நேரடி அர்த்தம் அனுமன் படை. அது எப்படி லங்கா தகனம் நடத்தியது என்பதை நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

இத்தகைய தயாரிப்போடு இருந்த நிலையில்தான் மத்தியில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து வி.பி.சிங் பிரதமரானார் 1989ல். அவருக்கு ஒருபுறம் கம்யூனிஸ்டுகளும் மறுபுறம் பாஜகவும் வெளியிலிருந்து ஆதரவு தந்தார்கள். அந்த அரசுதான் பி.பி. மண்டல் தலைமையிலான கமிஷனின் பரிந்துரையாம் பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒதுக்கீட்டை மத்திய அரசு பணிகளில் அமலாக்குவதாக அறிவித்தது. அவ்வளவுதான், ஆர்எஸ்எஸ் வட்டாரம் கொதித்தெழுந்தது.

அதனது ஏடான ஆர்கனைசர் (26-8-1990) ஆத்திரத்தோடு எழுதியது: "தனது 150 ஆண்டு கால அந்நிய ஆட்சியில் பிரிட்டீஷாரால் சாதிக்க முடியாததை வி.பி.சிங் ஓராண்டுக்குள் சாதிக்கப் போவதாக மிரட்டுகிறார். விவேகானந்தர், மகாத்மா காந்தி, ஹெட்கேவார் காலத்திலிருந்து செய்யப்பட்ட இந்து சமூகத்தை ஒன்றுபடுத்தும் மகத்தான பணியை இவர் சிதைக்கப் பார்க்கிறார். சமுதாயத்தை மண்டல்மயமாக்குவதன் மூலம் இந்துக்களை முற்பட்டோர், பிற்பட்டோர்,

ஹரிஜனங்கள் என்று பிளக்கப் பார்க்கிறார்”.எப்படி? இந்து சமூகத்தில் சாதிரீதியிலான பிளவுகளே இல்லையாம், எல்லாம் இப்பத்தான், மண்டல்குழு பரிந்துரையை அமலாக்குவதன் மூலம்தான் வருகிறதாம்! சாதியம் இருப்பதால்தான் இடஒதுக்கீடு தேவைப்படுகிறது எனும் யதார்த்தத்தை அவர்களின் மனுவாத மனோ நிலை ஏற்க மறுத்தது. அவர்களின் ஏடு தொடர்ந்துகூறியது: “இடஒதுக்கீடு அரசியலானது சமூகக் கட்டமைப்புக்குச் செய்யும் பேரழிவு கற்பனைக்கும் அடங்காதது. அது திறமையற்றவர்களுக்கு சகாயம் காட்டுகிறது, திறமையானவர்கள் வெளியேறுவதை ஊக்குவிக்கிறது, சாதிப்பிளவை கூர்மையாக்குகிறது”.

அனைவருக்கும் சமமான வாய்ப்பு கொடுக்கப்பட்டு அதற்குப் பிறகு வெளிப்படுவதுதான் மெய்யான திறமை அல்லது திறமையின்மை. வருண அடிப்படையில் சூத்திரர்கள் பஞ்சமர்களுக்கு கல்வி கற்கும் உரிமை இல்லை என்று பல நூறு ஆண்டுகளாகஅடக்கி வைத்துவிட்டு திறமையை அளக்க முற்படுவது காலை ஒடித்துவிட்டு ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெறச் சொல்லும் கயமைத்தனம். அப்படியும், அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதி உள்ளவர்களில்தான் பிற்படுத்தப்பட்டோர் அந்த ஒதுக்கீட்டிற்கு தேர்வு செய்யப்படுவர். இதெல்லாம் தெரிந்தும் தெரியாதது போல இந்த இடஒதுக்கீட்டை வன்மையாக எதிர்த்தது ஆர்எஸ்எஸ். அதன் மூலம் அது அனைத்து இந்துக்களுக்கான அமைப்பு அல்ல, மனுவாதிகளுக்கானது என்பது புரிபட்டது.

எழுத்தோடு நிற்கவில்லை. தில்லியில் தனது மாணவர் பிரிவாகிய ஏபிவிபியைத் தூண்டிவிட்டு மாணவர்களைக் கலகத்தில் இறக்கி விட்டது. அதில்

பெரும் கொடுமை அவர்களை தீக்குளிக்க வைத்து தியாகிகளாக்கியது. இவர்கள்தாம் போராட்டங்களே கூடாது என்று பிறருக்கு புத்தி சொல்வார்கள். ஆனால் தங்களது சுயநலனுக்கு ஆபத்து என்றதும் பெரும் போராளிகளை உருவாக்கினார்கள். தலைநகரம் பற்றி எரிந்தது. அன்றைய நிலைபற்றி ஆய்வாளர் கிறிஸ்டோபர் ஜாப்ரிலாட்டுக்கு அத்வானி கொடுத்த பேட்டி:

“மண்டல் விவகாரம் எனக்குப் பெரும் அழுத்தத்தை கொடுத்தது-குறிப்பாக எனது தொகுதியாகிய புதுதில்லியில். அங்கே தீக்குளிப்புகள் நடந்தன. எனது வீட்டுக்கு தினசரி பெற்றோர்கள் வந்தார்கள் ‘ஏன் இந்த அரசை ஆதரிக்கிறீர்கள்? ஆதரவை வாபஸ் பெறுங்கள்’ என்றார்கள். மண்டல் விவகாரத்தில் வாபஸ் பெறுவது அரசிற்கு பெரும் பலனைத் தந்துவிடும் என்று நான் உணர்ந்தேன். நான் சொன்னேன்: ‘இந்த அரசாங்கம் மோசமாக நடக்கிறது. என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் உரிய நேரத்தில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்”. (இந்து தேசிய இயக்கமும் இந்திய அரசியலும்:1925-1990) சங் பரிவாரத்தினரின் நயவஞ்சகத்தைப் பாருங்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு கூடாது என்பதே அவர்களின் கொள்கை, ஆனால் அதற்காக அரசைக் கவிழ்த்தால் பிற்படுத்தப்பட்டோரின் வாக்கு போய்விடும்; எனவே “உரிய நேரத்தில் நடவடிக்கை”! அந்த உரிய நேரம்தான் அயோத்தி ராமர் கோயிலுக்காக அத்வானியின் ரத யாத்திரை. மண்டல் அமலாக்க அறிவிப்பை 1990 ஆகஸ்டு 7ல் வெளியிட்டார் வி.பி.சிங். செப்டம்பர் 25ல் அயோத்தி நோக்கி ரதத்தில் கிளம்பினார் அத்வானி! இது பற்றி வி.பி. சிங் கேட்டதற்கு “நீங்கள் மண்டலைத் தூக்கினீர்கள், நாங்கள் கமண்டலைத் தூக்கினோம்” என்றார் வாஜ்பாய்! இவ்வளவுதான் இவர்களின் ராம பக்தி. மண்டல் எனும் சம்பூகனை வீழ்த்தவே மீண்டும் ராமரின் தயவை நாடினார்கள்!

எதிர்பார்த்தபடி யாத்திரை சென்ற பாதை எங்கும் மதக்கலவர அபாயம் எழுந்ததால் அத்வானியைக் கைது செய்தார் பீகார் முதல்வர் லாலு பிரசாத் அக்.23 அன்று. இதற்காகக் காத்திருந்தது போல அன்றே அரசுக்கு தந்துவந்த ஆதரவை வாபஸ் பெறும் கடிதத்தை ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் கொடுத்தார் வாஜ்பாய். இப்படியாக சூத்திரர்களுக்காக வரலாற்றில் ஒரு ஷத்திரியர் தனது பதவியை இழந்தார்! ஆம், வி.பி.சிங் ராஜ வம்சத்தில் பிறந்தவர்.சமூக நீதிக்கு எதிராக ராமர் கோயில் பிரச்சனையைத் தீவிரமாக்கியவர்கள் புலி வாலைப் பிடித்தவர்களானார்கள். பாபரா, ராமரா என்று கேள்வியை எழுப்பிய பிரச்சாரம் முடிவில் பாபர் மசூதி இடிப்பில் முடிக்கப்பட்டது. அதை திட்டமிட்டே செய்தார்கள் என்பதற்கு ஆதாரம் அன்றைய பிரதமர் நரசிம்மராவிடம் அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி தனது சுயசரிதையில் அத்வானி எழுதியிருப்பது: "ராஜு பையா(ஆர்எஸ்எஸ் தலைவர்)ராவிடம்கூறினார்: 'அயோத்தியில் லட்சக்கணக்கான மக்கள் கூடப் போகிறார்கள். நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டு கரசேவை நடக்கும்படிச் செய்ய நாங்கள் விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு அதற்குள் வராவிட்டால் என்னாகும்? ஏதேனும் மோசமானது நடந்தால் என்னாகும்? அப்படி நடக்காது என்று நம்புகிறேன். அதனால்தான் டிசம்பர் 6க்குள் ஒரு தீர்ப்பை வாங்குவதன் அவசியத்தை அரசுக்கு வலியுறுத்துகிறேன்".

மோசமானது நடக்கும் என்று பிரதமரிடம் கோடி காட்டியதை நோக்குங்கள். அப்போதும் அதைத் தடுக்காத பிரதமரின் லட்சணம் தனிக் கதை. ஆனால் ஏதோ கரசேவகர்களால் அந்த இடிப்பு வேலை யதேச்சையாக நடந்தது அல்ல என்பது நிச்சயம்.

அவ்வளவு பெரிய மசூதியை அப்படியெல்லாம் சாதாரணமாக இடித்துவிட முடியாது என்பது எளிய பொது அறிவு. அதற்கான திட்டமிட்ட ஏற்பாடு, ஒத்திகை எல்லாம் நடந்திருக்கும் எனப் பலரும் ஊகித்ததையும், கண்ணாரக் கண்ட சில காட்சிகளை சிலர் விவரித்ததையும் சட்டென்று ஒதுக்கிவிட முடியாது. சங் பரிவாரம் கச்சிதமாகத் தனது வேலையை முடித்தது. மசூதியின் அந்த மூன்று டூம்கள் ஒவ்வொன்றாகச் சரிந்தன. மதநல்லிணக்க மரபு, சட்டத்தின் ஆட்சி, சிறுபான்மையோரின் நம்பிக்கை எனும் மூன்றும் மடமடவென சரிந்தன.

டிசம்பர் 7 அன்று ஆர்எஸ்எஸ் தடைசெய்யப் பட்டது. அதாவது மூன்றாவது முறையாக. கூடவே விஎச்பி, பஜ்ரங் தளமும் தடைசெய்யப்பட்டன. அரசின் அறிவிக்கைகள் கூறின: “சில மத வகுப்பார் அந்நிய மதங்களைக் கொண்டிருப்பதால் அவர்களை இந்திய குடிமக்களாகக் கருத முடியாது எனும் கோட்பாட்டைக் கொண்டது ஆர்எஸ்எஸ். பஜ்ரங் தளத்தின் பயிற்சி முறையானது இவற்றில் பங்கு பெறுவோர் இதர மதத்தவர் மீது வன்முறை கிரிமினல் பலத்தைப் பிரயோகிக்கும் ஆபத்தைக் கொண்டது”. இவைதாம் ராவ் அரசே இவர்களுக்கு கொடுத்த சான்றிதழ்கள்! பயங்கரவாதம் பற்றி மிக அதிகமாகப் பேசுவார்கள் சங் பரிவாரத்தினர். ஆனால் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை மீறி, அதற்கு தந்த வாக்குறுதியை மீறி, நாட்டின் சட்டங்களை மீறி இவர்கள் பாபர் மசூதியை இடித்தது பயங்கரவாதச் செயல் இல்லையா? அதைத் தொடர்ந்து நடந்த பல பயங்கரவாதச் செயல்களுக்கு அதுவே பிறப்பிடம். இதில் கொடுமையிலும் கொடுமை அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த 1992ன் டிசம்பர் 6. அது அண்ணல் அம்பேத்கர் நினைவு தினம். அந்த நாளை தங்களின் வெற்றிநாளாகக் கொண்டாட முடிவு செய்தே

இந்த வேலை பார்த்திருக்கிறார்கள். இதற்காகவும் வரலாறு இவர்களை மன்னிக்காது.

மசூதி இடிப்பைத் தொடர்ந்து நடந்த மதக் கலவரங்களில் 2000த்திற்கும் மேற்பட்டோர் மாண்டு போனார்கள். பம்பாய் கலவரத்தில் மட்டும் 900 பேர் சாவு, 2000த்திற்கு மேற்பட்டோர் படுகாயம். நாட்டில் இந்து, முஸ்லிம் பிளவை ஏற்படுத்தி தங்களுக்கான இந்து வாக்கு வங்கியை வெற்றிகரமாக உருவாக்கியது ஆர்எஸ்எஸ். அதன் பலனை 1998, 1999 மக்களவைத் தேர்தல்களில் அனுபவித்தது. வாஜ்பாய் தலைமையில் பாஜக கூட்டணி அரசு மத்தியில் அமர்ந்து ஆறு ஆண்டுகள் ஆட்சி நடத்தியது. "தர்ம சாஸ்திரக் காவலர்களின்" வழிகாட்டுதலின்படியான ஆட்சியை அமைப்பது எனும் ஆர்எஸ்எஸ்சின் கனவு நனவானது!

# 13.கொலைத்தாண்டவம்-2002 எனும் ‘குஜராத் மாடல்’!

மத்தியில் வாஜ்பாய் அரசு நடந்த காலத்தில்தான் குஜராத்திலும் ஒரிசாவிலும் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்கள் நடந்தன. அன்று 1998ன் கிறிஸ்துமஸ் தினம். குஜராத்தின் டேங் மாவட்டத்தில் “இந்து ஜாக்ரன் மஞ்ச்” எனும் சங் பரிவார அமைப்பு பேரணி நடத்தியது. அதற்கான தயாரிப்பாக அது வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களில் “கிறிஸ்தவர்களை விரட்டியடிக்குமாறு” அறைகூவல் விடுக்கப்பட்டிருந்தது. கொடுமை என்னவென்றால் இந்தப் பேரணியில் அந்த மாவட்ட கலெக்டர் கலந்து கொண்டு மாலை மரியாதையை ஏற்றுக் கொண்டார், அங்கே கிறிஸ்தவர்களுக்கு எதிராப் பேசப்பட்டதை காது குளிரக் கேட்டுக் கொண்டார்!பேரணி முடிந்ததும் அதில் பங்கேற்ற 2000த்திற்கும் மேற்பட்டோர் கும்பல் கும்பலாகப் பிரிந்து சென்று கிறிஸ்தவ தேவாலயங்களையும் பள்ளிகளையும் தாக்கினார்கள், தீ வைத்தார்கள். அன்று மட்டுமல்ல அந்த வாரம் முழுக்க இந்தத் தாக்குதல்கள் நடந்தன. மொத்தம் 28 தாக்குதல் வழக்குகள் பதிவாயின. அவற்றால் 32 தேவாலயங்கள் பாதிக்கப்பட்டன. ஆனால் ஒரேயொரு தாக்குதல் மீதுதான் போலீஸ் நடவடிக்கை எடுத்தது. சங் பரிவாரத்திற்கும் போலீஸ் நிர்வாகத்திற்கும் அவ்வளவு நல்லுறவு! அப்போது அங்கே பாஜகவின் ஆட்சிதான். சொல்ல வேண்டுமா? நேரில் சென்று

விசாரணை நடத்தி அறிக்கை வெளியிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளின் நான்கு எம்பிக்கள். அதைப் படித்தேன். கிறிஸ்தவர்களை எதிரிகளாகப் பாவிக்கச் சொன்ன குருஜியின் கருத்தை ஆர்எஸ்எஸ் நடப்புக்குக் கொண்டு வந்ததை அறிய முடிந்தது.

இதையெல்லாம் ஒன்றுமில்லையென்று ஆக்கியது ஒரிசாவில் நடந்த பயங்கரம். அங்கே மனோகர்பூர் மாவட்டத்தின் கியோஞ்ஹரின் பழங்குடியினருக்கு சேவை செய்து வந்தார் ஆஸ்திரேலியப் பாதிரியார் கிரஹாம் ஸ்டூவர்ட் ஸ்டேன்ஸ். 1965லிருந்து அவர்களோடு வாழ்ந்திருந்து தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். அவரின் தொண்டுள் ளத்தைக் கண்ட மக்கள் அவரை “சாகிபோ” என்று பிரியமாக அழைத்து வந்தார்கள். அப்படி அவர்களுக்கு ஊழியம் செய்துவிட்டு 1999 ஜனவரி 22 நள்ளிரவில் தனது 9 வயது பிலிப், 7 வயது டிமோதியுடன் வேனில் தூங்கிக் கொண்டிருந்தார். அந்த வேனோடு சேர்த்து அவர்களை எரித்துக் கொன்றது தாராசிங் எனும் கொடியவன் தலைமையிலான ஒரு கும்பல். இன வேறுபாடு பார்க்காமல் ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கு வந்து சேவை செய்த ஒரே பாவத்திற்காக இந்த கொடூரத் தண்டனை. அந்தப் பாலகர்கள் எப்படி துடிதுடித்துக் கதறியிருப்பார்கள்! நெஞ்சில் கருணையைத் துடைத்தெறிந்தவன்தான் மனுவாதியாகிறான்.

கொலைகாரன் தாராசிங் பஜ்ரங் தளத்தைச் சேர்ந்தவன் என்று பத்திரிகைகள் கூறின. ஆனால் உள்துறை அமைச்சர் அத்வானி உடன் தீர்ப்புச் சொன்னார்: “எனக்கு பஜ்ரங் தள் போன்ற அமைப்புகளைத் தெரியும். அவர்களுக்கு எவ்விதக் கிரிமினல் பின்புலமும் இல்லை”.(அவுட்லுக் 15-2-1999) எந்த அமைப்புக்கு? பாபர் மசூதி இடிப்பில் பங்கேற்ற

பஜ்ரங் தள்ளிற்கு! அது சரி, அந்த இடிப்பிற்கு தலைமை தாங்கியவர் உள்துறை அமைச்சராக இருக்கும்போது அந்த அமைப்பிற்கு எப்படி கிரிமினல் பின்புலம் இருக்கும்? பஜ்ரங் தள் உள்ளிட்ட எந்த அமைப்போடும் தனக்கு தொடர்பு இல்லை என்று தாராசிங்கும் சொன்னான். பழைய பாணிதான். பழி தனிமனிதனைச் சார்ந்ததாக மாறியது. அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. பாதிரியார் ஸ்டேன்சுக்கும் தாராசிங்கிற்கும் என்ன பகை? வாய்க்கால் வரப்புத் தகராறா? தனிப்பட்ட மோதலா? ஏதுமில்லை. இருந்தது எல்லாம் கொள்கைப் பகையே. கிறிஸ்தவர்கள் இங்கே சேவை செய்யக் கூடாது. காரணம் அவர்கள் மத மாற்றம் செய்கிறார்கள். மத மாற்றம் என்பது அரசியல்சாசனம் தந்துள்ள அடிப்படை உரிமை. அது கொடுத்ததை இவர்கள் பறித்தார்கள் தங்கள் பயங்கரவாதச் செயல்களின் மூலம்.அதே ஆண்டு ஆர்எஸ்எஸ் போட்ட தீர்மானம் கூறியது: “கிறிஸ்தவர்கள் போன்றவர்களுக்கு தங்கள் மதங்களைப் பின்பற்றுவதற்கு உள்ள உரிமையை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் தங்களது சகிப்புத் தன்மையற்ற மதங்களைப் பரப்ப அவர்களுக்கு அடிப்படை உரிமை உண்டா? தேசத்தின் ஒருமைப் பாட்டைத் தங்கள் நெஞ்சில் ஏந்தியுள்ள சங்கின் அனைத்துக் கிளைகளையும், இதர அர்ப்பணிப்புள்ள அமைப்புகளையும் அது அறைகூவி அழைக்கிறது- சர்ச்சின் நெறியற்ற மதமாற்றத் தந்திரம் எவ்வளவு ஆபத்தானது, சந்தேகத்திற்குரியது என்பதை அம்பலப்படுத்துங்கள்”. ஆக தனது பரிவாரத்தை இது விஷயத்தில் அது தூண்டிவிட்டது.

மதம் மாறும் உரிமை மனிதர்களின் அடிப்படை உரிமையா என்று ஆர்எஸ்எஸ்சுக்கு சந்தேகமாம்! அதிலென்ன சந்தேகம்? வயது வந்த ஒருவர், பெற்றோரின் மதத்தைத்தான் கடைசிவரை பின்பற்ற

வேண்டும் என எப்படி கட்டாயப்படுத்த முடியும்? அது மனித விரோதம் அல்லவா? ஒரு மதத்தை ஆய்வு செய்து நிராகரிக்க உரிமை இல்லையெனில் அது சிந்திக்கும் உரிமையையே பறிக்கும் அடாவடி. அதனால்தான் மதச்சார்பற்ற ஜனநாயக நாடுகளில் அந்த உரிமை குடிமக்களுக்கு தரப்பட்டுள்ளது. இந்தியாவின் அரசியல் சாசனமும் தந்துள்ளது. அதை மிரட்டல்கள் மூலம் நடைமுறையில் ஒழித்துக் கட்டுவதுதான் ஆர்எஸ்எஸ் நோக்கம். இவர்களது இந்து ராஷ்டிரத்தில் மத உரிமை இருக்காது என்று சொல்லாமல் சொன்னார்கள்.1992ல் பாபர் மசூதியை இடித்தார்கள். பத்தாண்டு கழிந்தும் அந்த இடிப்புச் சத்தத்தின் எதிரொலி குஜராத்தில் கேட்டது. அயோத்தி சென்று திரும்பிய பக்தர்கள் மற்றும் கரசேவகர்களின் ரயில் கோத்ரா நிலையத்தில் தீப்பிடித்து எரிந்தது. 2002 பிப்ரவரி 27ல் நடந்த அந்தக் கோரச் சம்பவத்தில் 59 பேர் மாண்டு போனார்கள். அதைத் தொடர்ந்து குஜராத்தில் பிரளயம் வெடித்தது. அரசின் அதிகாரபூர்வக் கணக்குப்படியே அதில் மாண்டவர்கள் 1000 பேருக்கும் மேலே, காணாமல் போனவர்கள் 200 பேருக்கும் மேலே, காயம்பட்டவர்கள் 2500 பேருக்கும் மேலே.
மரித்தவர்களில் முஸ்லிம், இந்து இரு தரப்பும் உண்டு என்றாலும் ஆகப் பெரும்பாலோர் முஸ்லிம்களே.
2002-04 காலத்தில் இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருந்தவர் வி. என். காரே. அவர் எழுதிய கட்டுரையை (இண்டியன் எக்ஸ்பிரஸ் 14-10-2008)பிற்சேர்க்கையாகக் கொடுத்திருக்கிறார் நூரானி. அதில் கூறினார்: “பெஸ்ட் பேக்கரி மற்றும் பில்கீஸ் பானு வழக்குகளை உச்சநீதிமன்றம் மகாராஷ்டிராவிற்கு மாற்றியது. பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதைக் கண்ட நான் அவர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும், சாட்சிகளுக்கும் பாதுகாப்பு தருமாறு உத்தரவிட்டேன். அது மீறப்பட்டால் உச்ச நீதிமன்றத்திற்குச் சொல்லுமாறு கூறினேன். நான் அந்த

(விசாரணை) கமிஷனில் இருந்தால் கலவரங்களைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்காததால் மக்களின் உயிர் வாழும் உரிமையைக் காக்கத் தவறிவிட்டது போலீஸ் என்பேன்".யாருடைய ஆட்சியில் குஜராத் போலீஸ் இந்தச் சான்றிதழைப் பெற்றது தெரியுமா? நரேந்திர மோடி ஆட்சியில்! அவர்தான் அன்று முதல்வர். அவர் நியமித்த நானாவதி கமிஷனின் ஒரு பகுதி அறிக்கை 2008 செப்டம்பரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சூழலில் தலைமை நீதிபதி இப்படிச் சொல்லியிருந்தார். இதிலிருந்து அந்த கமிஷன் பற்றிய அவரின் அபிப்பிராயத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம். முதல்வர் மோடி மட்டுமல்ல, பிரதமர் வாஜ்பாயும் குஜராத் கொடூரத்தை ஒடுக்க உருப்படியாய் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அப்போது ஜனாதிபதியாக இருந்த கே. ஆர். நாராயணன் பின்னாளில் அளித்த ஒரு பேட்டியில் இப்படிக் குறிப்பிட்டார்: "வாஜ்பாய் வலுவான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. அவருக்கு நான் கடிதங்கள் அனுப்பினேன், நேரிலும் பேசினேன். வன்முறையாளர்களைச் சுட ராணுவத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் குஜராத் கொலைத்தாண்டவத்தை பெருமளவு தடுத்திருக்க முடியும். ஆனால் மாநில அரசும், மத்திய அரசும் அப்படிச் செய்யவில்லை". (அவுட்லுக் 2-3-2005)மோடி நியமித்த நானாவதி கமிஷன் அவரைக் குற்றவாளியாக்கவில்லைதான். ஆனால், படுகொலைகள் நடந்த சில மாதங்களில், ஜூலையில் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குத் தயாரானது அவர்தான், மீண்டும் முதல்வரானது அவர்தான் எனும் உண்மையை எந்தக் கமிஷனாலும் மறைக்க முடியாது. இந்து, முஸ்லிம் என மக்களை மதத்தால் பிளப்பது பாஜகவிற்கே எப்போதும் ஆதாயமாக இருந்தது. அரசியல் லாபத்திற்காக

மக்களின் உயிரோடு விளையாட அவர்கள் தயங்குவதில்லை என்பதையே இதை காட்டியது. அவர்களுக்கு மனசாட்சி கிடையாது, இருந்தது எல்லாம் மனுசாட்சியே! வர்ணாசிரம ஆட்சியை நிலைநிறுத்த எதையும் செய்யலாம் என்றது மனுவின் சமூக சாஸ்திரம் என்றால், அதையே சொன்னது சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம். இந்த இரண்டையும் கக்கத்தில் வைத்தபடியே அவர்கள் நடந்தார்கள்.அப்போதைய குஜராத் தேர்தல் முடிவுகள் பற்றி ஆய்வு செய்த ரகீல் தத்திவாலா மற்றும் மைக்கேல் பிக்ஸ் வந்த முடிவு: “பாஜக நிச்சயம் வெற்றி பெறும் அல்லது நிச்சயம் தோல்வி அடையும் தொகுதிகளில் வன்முறை இல்லை. ஆனால் இதர மாவட்டங்களில் வன்முறை பயங்கரமாக நடந்தது, அங்கெல்லாம் பாஜகவின் வாக்கு கணிசமாக உயர்ந்தது”. (தி வயர் 15-12-2019) எப்படி திட்டமிட்டு வேலை செய்திருக்கிறார்கள் பார்த்தீர்களா!நரோடா பாட்டியா படுகொலைகள் என்பவை குஜராத் கொடூரத்தின் ஒரு பகுதி. நரோடாவின் பாஜக எம்எல்ஏவாக அப்போது இருந்தவர் மாயா கோட்னானி. அந்தப் படுகொலைகளைத் தூண்டிவிட்டவர் அவர் எனும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது, வழக்கு நடந்து வந்தது. அவரைத் தனது அமைச்சரவையில் 2007ல் சேர்த்துக் கொண்டார் முதல்வர் மோடி. அந்த வழக்கின் முடிவு வெளியான செய்தியை தி வயர் ஏடு (20-4-2018) கூறியது:

“முன்னாள் பாஜக அமைச்சர் மாயா கோட்னானியை நரோடா பாட்டிய படுகொலைகள் வழக்கிலிருந்து குஜராத் உயர்நீதிமன்றம் விடுவித்தது. குஜராத் கலவரங்களின் போது நடந்த அந்தக் கொடூரத்தில் 97 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட வழக்கில் விசாரணை நீதிமன்றமானது அவர் சதி செய்ததாகக் கூறியிருந்தது. எனினும் பஜ்ரங் தள் தலைவர் பாபு பஜ்ரங்கியை

உயர்நீதிமன்றம் குற்றவாளி என்று கூறியது. ஆனால் அவரின் தண்டனை காலத்தை ஆயுள் முழுக்க சிறை என்பதிலிருந்து 21 ஆண்டு சிறை என்று குறைத்தது. உச்சநீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வு குழு உள்ளிட்டவர்கள் தொடுத்த மேல்முறையீட்டு மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரித்தது. முன்னதாக சிறப்பு புலனாய்வு குழு கூறியிருந்தது-படுகொலைகள் நடந்த 2002 பிப். 28 காலை 9.30 மணி அளவில் அந்தப் பகுதியின் எம்எல்ஏ வாகிய டாக்டர் மாயா கோட்னானி விதான் சபாவில் இரங்கல் கூட்டத்தை முடித்துக் கொண்டு நூரான் மசூதி அருகே வந்தார். பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் படி ஓர் உரையை ஆற்றினார், பிறகு ‘முஸ்லிம்களைக் கொல்லுங்கள், அவர்களது சொத்துக்களை அழியுங்கள்’ என்றார்”.வழக்கிலிருந்து பின்னாளில் அவர் விடுதலையாகியிருக்கலாம். ஆனால் வழக்கு நடந்துவந்தபோதே அந்தக் கொடூரக் கொலைகளில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு மந்திரி பதவி கொடுத்தார் மோடி. அதுவும் என்ன துறை? பெண்கள் மற்றும் குந்தைகள் வளர்ச்சி துறை. அந்தக் கொடூரத்தில் மாண்டுபோன 97 பேரில் 36 பேர் பெண்கள், 35 பேர் குழந்தைகள்! இதுதான் மோடிக்கு வளர்ச்சி! இதுதான் “குஜராத் மாடல்”! இந்த மாடலை முன்வைத்தவர் 2014ல் இந்தியாவுக்கே பிரதமரானார் பாருங்கள், அதுதான் இந்திய வரலாற்றின் கருப்பு அத்தியாயம்.

# 14. மனு(அ)தர்மத்தை வீழ்த்தாமல் சமதர்மம் இல்லை...

2004 மக்களவைத் தேர்தலில் பாஜக அணி தோல்வியுற்று காங்கிரஸ் அணி வெற்றி பெற்றது. மன்மோகன்சிங் தலைமையில் நடந்த ஆட்சி அடுத்த பத்து ஆண்டுகள் தொடர்ந்தது. 1998 லிருந்துஆறு ஆண்டுகள் அரசியல் அதிகாரத்தை அனுபவித்துவந்த ஆர்எஸ்எஸ்சுக்கு மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் வெறி வந்தது. அதிலும் தனிப் பெரும் பான்மையுடனான ஆட்சியை அடைய விரும்பியது. அதற்காக அரசியல் காய்களை மிகச் சாதுரியமாக நகர்த்தியது.

2011-13 காலத்தில் அன்னா ஹசாரேயும் பாபா ராம்தேவும் ஊழல் ஒழிப்பு வீரர்களாகக் களத்தில் இறங்கினார்கள். இவர்களது போராட்டங்களை ஆர்எஸ்எஸ் மிகக் கச்சிதமாகப் பயன்படுத்தியது. இதுபற்றி நூரானி தந்திருக்கும் தகவல்கள்: “2011 ஏப்ரலில் பகவத்தும் இணைப் பொதுச்செயலாளர் பையா ஜோசியும் பாபா ராம்தேவின் ஊழல் ஒழிப்பு சத்யாகிரகத்திற்கானை ஆதரவுத் தளத்தை உறுதிப்படுத்தினார்கள்.அவர் பாஜக வேட்பாளர்களை ஆதரிப்பார் எனும் புரிதலின் அடிப்படையில் ஆதரவு தரப்படுவதாக ஆர்எஸ்எஸ் வட்டாரங்கள் கூறின. அத்தகைய புரிதல் அன்னா ஹசாரேயோடு

இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் அவர் தலைமை தாங்கிய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில் ஆர்எஸ்எஸ் தீவிரமாகப் பங்கேற்றதாக அதன் தலைவர் மோகன் பகவத் கூறினார்".

அன்று அன்னா ஹசாரே "புதிய மகாத்மா காந்தி"என்று புகழப்பட்டதும், மத்தியில் பாஜக ஆட்சியைப் பிடித்ததும் அந்த மகாத்மாவை ஆர்எஸ்எஸ் மறந்து போனதும் ஊழல் ஒழிப்பில் எல்லாம் அதற்கு உண்மையில் ஆர்வம் இல்லை, எல்லாம் ஆட்சியைப் பிடிக்கும் தந்திரமே என்பது தெளிவானது. பாபா ராம்தேவ் பற்றி சொல்லவேண்டியதேயில்லை. அவர் மீதே இன்று புகார்கள் எழுந்துள்ளன. அன்று அன்னாவின் உண்ணாவிரத மேடையில் தேசியக் கொடியை அசைத்த கிரண்பேடி இன்று ஆட்சியாளர்களின் தயவில் புதுச்சேரி துணைநிலை ஆளுநராகிப் போனார். இவர்களின் ஊழல் ஒழிப்பு இயக்கம் எங்கே? பாஜக ஆட்சிக்கு வந்ததும் ஊழல் ஓடிப்போனது என்பார்களோ?

இப்படி 2011-13 காலத்தில் ஊழல் ஒழிப்பு என்பதை மட்டும் முன்னிறுத்தி மக்கள் மத்தியில் இருந்த அதிருப்தியை தங்களுக்கு ஆதரவாகத் திருப்ப முனைந்தவர்கள் ஒரு புதிய பிரதமர் வேட்பாளரையும் முன்மொழிந்தார் கள். அத்வானி ஓரங்கட்டப்பட்டு மோடி முன்னிறுத்தப் பட்டார். இதில் ஆர்எஸ்எஸ்சின் கைவரிசை உண்டு என்பதை அதன் தலைவர் பகவத்தின் இந்தக் கூற்று மெய்ப்பித்தது: "பிரதமர் வேட்பாளர் யார் என்று சங் பரிவாரம் இன்னும் முடிவு செய்யவில்லை".(இண்டியன் எக்ஸ்பிரஸ் 20-10-2013) இதன் பொருள் ஆர்எஸ்எஸ் முடிவுசெய்கிறது என்பதாகும்.

ஏன் அதனால் மோடி தேர்வு செய்யப்பட்டார்? அதற்கான காரணங்களாக இவை இருக்கலாம்: 1.குஜராத்தில் பாஜக தொடர்ந்து வெற்றி பெற்று வந்தது. மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி இந்து வாக்கு வங்கியை உருவாக்கும் வித்தகர் இவரே. 2. அத்வானியைவிட இவர் கைக்கு அடக்கமானவராக இருப்பார். 3. இவரது ஆட்சியில் கொழுத்த குஜராத்தின் பெருமுதலாளிகள் சிலர் இவரை படு உற்சாகமாக ஆதரித்தனர். முதல்வராக இருந்து குஜராத்தின் வளத்தை கொள்ளையடிக்க அனுமதித்தவர் பிரதமராகி இந்தியாவின் வளத்தை விழுங்க ஏற்பாடு செய்வார் என்று அவர்கள் கணக்கு போட்டனர்.பின்னர் நடந்த பிரச்சாரத்தில் குஜராத்தை மாடல் அரசாகக் காட்டியதிலும், மோடியை “வளர்ச்சி நாயகன்” எனத் தூக்கி நிறுத்தியதிலும் அது புலப்பட்டது.

மத்தியில் வாஜ்பாய் தலைமையில் கூட்டணி அரசை நிறுவிய ஆர்எஸ்எஸ் 2014ல் மோடி தலைமையில் தனிப்பெரும்பான்மை ஆட்சியை நிறுவியது. 2019ல் மீண்டும் அதை சாதித்துக் காட்டியது. அதன் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கும்? “இந்து ராஷ்டிரம்” என்ற பெயரில் மனுவாத ராஷ்டிரத்தை அமைப்பதாக இருக்கலாம்.

அதற்கு அச்சாரமாகத்தான் இறைச்சிக்காக மாடுகளை வாங்க-விற்க தடை, அதை மீறியதாகச் சொல்லி முஸ்லிம்கள் மற்றும் பட்டியல் சாதியினர் மீது தாக்குதல்கள், முஸ்லிம் ஆண்களுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை எனும் முத்தலாக் தடைச் சட்டம், ஜம்மு-காஷ்மீரின் 370வது பிரிவு நீக்கம், அதன் மாநில அந்தஸ்து பறிப்பு, முஸ்லிம்களின் குடியுரிமையைக் கேள்விக்குறியாக்கும் குடியுரிமை திருத்தச்சட்டம், என்பிஆர்-என்ஆர்சி பற்றிய பேச்சுக்கள், சூத்திர-பஞ்சம இந்துக்களின் கல்வியைத் தடுக்க நீட் எனும்

நுழைவுத் தேர்வு, மருத்துவக் கல்விக்கான மத்திய அரசு தொகுப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு கடந்த சில ஆண்டுகளாக இடஒதுக்கீடு மறுப்பு, பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவது இத்யாதிகள். இவையெல்லாம் ஆர்எஸ்எஸ்சின் மனுவாத நிகழ்ச்சி நிரலே.இவற்றை அமல்படுத்திக் கொண்டே சென்று முடிவில் “இந்து ராஷ்டிரத்தை” அமைப்பதே அவர்களது லட்சியம்.
இதற்கு இந்த நாட்டுப் பெரு முதலாளிகளின் ஆதரவைப் பெற அவர்கள் கேட்பதையெல்லாம் செய்கிறார்கள். கொரோனா கொள்ளை நோயால் நாடே பற்றி எரியும்போதும் பொதுத்துறைகளை எல்லாம் தனியார்மயமாக்குவோம் என்கிறார்கள்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளையும் விட்டுவைக்கப் போவதில்லை என்கிறார்கள். வெளிநாட்டுப் பெருமுதலாளிகளின் தயவை நாடி பாதுகாப்பு துறையில் அவர்களது முதலீட்டின் அளவு அதிகரிப்பு என்கிறார்கள். அணுசக்தி, விண்வெளித் துறைகளும் தனியாருக்கு திறந்துவிடல் என்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வசதியாக வேளாண் துறையையும், தொழிலாளர் உரிமைகளையும் காவு கொடுக்கிறார்கள். தானியங்களை அத்தியாவசியப்பொருட்கள் பட்டியலிலிருந்து எடுத்து விட்டார்கள். (அவற்றுக்குப் பதிலாக கோமியம், சாணத்தை சேர்ப்பார்களோ?) தொழிலாளர் நலச் சட்டங்களை முடக்கி வைக்கிறார்கள். இவையெல்லாம் வெகு மக்களின் கடும் எதிர்ப்பைச் சந்திக்கும் என்பதால் அதை ஒடுக்க ஒவ்வொரு அடக்குமுறை ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதன் உச்சம் மனுவாத பாசிச ஆட்சியாக இருக்கலாம்.

அதையும் சந்திக்க இப்போதே மக்களைத் தயார்படுத்துவதுதான் ஒரே வழி. அரசியல்தளம்,

சமூகத்தளம் என்று ஆர்எஸ்எஸ் ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளில் சவாரி செய்கிறது. சமூகத் தளம் என்று நிர்வாகத்துறை, நீதித்துறை, கல்வி-கலை-இலக்கியம் உள்ளிட்ட பண்பாட்டுத் துறை போன்ற சிவில் வாழ்வில் ஊடுருவுகிறது. அதை எதிர்க்கும் சக்திகளும் அதேபோல இரு தளங்களில் பயணித்தாக வேண்டும். சித்தாந்தரீதியாகவும், செயல்பாட்டுரீதியாகவும் இந்துக்களை அது அணுகுகிறது. அதை எதிர்க்கும் சக்திகளும் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கவேண்டும். ஆர்எஸ்எஸ் இந்துக்களுக்கானஅமைப்பே அல்ல, மாறாக ஆகப்பெரும்பாலான இந்துகளுக்கு எதிரானது எனும் உண்மையைச் சொல்லியாகவேண்டும். இதுவரை நாம் புரட்டிப் பார்த்த ஆர்எஸ்எஸ் சரித்திரத்தின் சாரம் என்ன?

1. பழைய நிலப்பிரபுத்துவத்தின் சமூக கட்டமைப்பாம் வர்ணாசிரமத்தை மீட்டெடுக்கப் பார்க்கிறது ஆர்எஸ்எஸ். மத மாற்றத்தின் மூலம் அதிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறார்களே என்றுதான் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மீது அதற்கு கடுங்கோபம். ஆனால், அந்த வர்ணாசிரமத்தால் ஒடுக்குமுறைக்கு ஆளாகப்போவது மதச்சிறுபான்மையோர் மட்டுமல்ல, அடித்தட்டு சாதியினரும் பெண்களும்தான். காரணம் வர்ணாசிரமத்தை வாழ்வியல் சட்டமாக எழுதி வைத்துள்ள மனு தர்மம் போன்ற சாஸ்திரங்கள் சாதிய முறையிலும் பாலின வகையிலும் பேதம் பார்ப்பவை. அந்த மனு(அ)தர்ம சாஸ்திரத்தை எதிர்த்து சங் பரிவாரம் பேசுவதில்லையே கவனித்தீர்களா? சாதி ஒழிய வேண்டும் என்றுகூட அவர்கள் பேசுவதில்லை. “ஆணாதிக்கம் ஒழியட்டும், பெண் விடுதலை வரட்டும்” என்று அவர்கள் சொல்லி நாம் கேட்டதில்லை! இதிலிருந்தே அவர்கள் மனுவாதிகள்தானே தவிர சாதாரண இந்துக்கள் அல்ல என்பதை உணரலாம்.

2. “இந்து ராஷ்டிரம்” என்று மத வழி தேசியம் பேசும் ஆர்எஸ்எஸ் இந்தியாவின் யதார்த்தமாகிய மொழிவழி தேசிய இனங்களை மறுக்கிறது. இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு மெய்யான கூட்டாட்சியை நடைமுறைப்படுத்தும்போது நாட்டின் ஒற்றுமை பலப்படும் என்பதை அது ஏற்பதில்லை. மாறாக ஒற்றை ஆட்சிமுறையைத் திணித்து, அந்த தேசிய இனங்களின் தனித்தன்மைகளை அழிப்பதன் மூலமே அதைச் சாதிக்க முடியும் என்கிறது. இது இந்தியா எனும் தேன்கூட்டைக் கலைக்கிற வேலை. இவர்கள் உண்மையான தேசபக்தர்கள் அல்ல, போலிகள் என்பதை மாநில உரிமைகளைப் பறிக்கச் சொல்வதிலிருந்தும், தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகளைத் தாழ்வாக நோக்குவதிலிருந்தும் சட்டென்று உணரலாம்.
3. பிறப்பின் அடிப்படையிலான சமூக ஏற்றத்தாழ்வை அங்கீகரிப்பதால் ஆர்எஸ்எஸ்சானது பொருளாதார ஏற்றத்தாழ்வையும் இயல்பானதாகக் கொள்கிறது.ஏழை-பணக்காரன் வித்தியாசத்தை முன்ஜென்ம வினையாக பாவிக்கும் மனுதர்மத்தால் சமதர்மத்தை சிறிதும் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் கம்யூனிஸ்டுகளை தனது எதிரிகளின் பட்டியலில் வைத்துள்ளது அது. இதன் காரணமாக வர்ணரீதியாக மட்டுமல்லாது வர்க்கரீதியாகவும் அது அடித்தட்டு இந்துக்களின் பக்கா எதிரியாகும்.
4. இந்திய அளவிலான இந்தப் பொதுக் குணங்களோடு தமிழகத்தைப் பொறுத்தவரை இங்கு எழுந்த சமூக நீதி இயக்கத்தை படு வெறுப்போடு பார்க்கிற குணத்தையும் கொண்டிருக்கிறது ஆர்எஸ்எஸ். அதற்காகவே இந்து முன்னணி என்கிற துணை அமைப்பை உருவாக்கியது. அதுவும் இதர சங் பரிவாரமும் பெரியாரைக் கடுமையாகத் தாக்குகின்றன.

தமிழகத்தின், தமிழின் தனித்தன்மையை மறுக்க திருக்குறளுக்கே திரிபுவாத விளக்கம் கொடுத்தார் கோல்வால்கர்.அது: “திருக்குறள் முன்வைத்துள்ள கருத்து என்ன? அதே பழைய இந்து கருத்தியலாகிய சதுர்வித -புருஷார்த்தம் என்பதைத்தான் லட்சியமாக முன்வைத்துள்ளது.”(சிந்தனைக் கொத்து)
“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று சதுர் வர்ண சாதியக் கோட்பாட்டை மறுத்த திருக்குறளை எப்படி தமது மனுவாதச் சிந்தனையாகச் சித்தரிக்கிறார் பாருங்கள்! இதே நோக்கோடு தான் மொழிப்பிரச்னையையும் அணுகினார். “இணைப்பு மொழி பிரச்னைக்குத் தீர்வாக சமஸ்கிருதம் அந்த நிலையை எட்டும் வரை இந்திக்கு நாம் முன்னுரிமை தர வேண்டும்” (சிந்தனைக்கொத்து) என்றார். ஆக ஆர்எஸ்எஸ்சின் லட்சியம் தமிழர்கள் உள்ளிட்ட சகலர் மீதும் சமஸ்கிருதத்தை திணிப்பதுதான். அதற்கான முன்னோட்டம்தான் இந்தி திணிப்பு.
5. ஆர்எஸ்எஸ்சை துவக்கியவர்களில் ஒருவராகிய மூஞ்சே பாசிஸத்தின் மீது கொண்டிருந்த நேசத்தையும், முசோலினியை அவர் சந்தித்ததையும் கண்டோம்.அதே பிரியத்தை “குருஜி” நாஜி ஹிட்லர் மீது கொண்டிருந்தார். எதற்கு என்று கேளுங்கள்: “இன மற்றும் கலாச்சாரத் தூய்மையைப் பேணுவதற்காக யூதர்கள் எனப்பட்ட செமிடிக் இனத்தாரை நாட்டை விட்டு வெளியேற்றி ஜெர்மனி உலகை அதிர வைத்தது. இனப் பெருமையானது அதன் உச்சத்தை தொட்டது. ஆழமான வேறுபாடுகளைக் கொண்ட இனங்களும் கலாச்சாரங்களும் ஒன்றாக மாற முடியாது என்பதை ஜெர்மனி காட்டியது. இந்துஸ்தானத்திற்கு இதிலே நல்லதொரு பாடம் உள்ளது.” (நாம் அல்லது நமது தேசியத்தின் வரையறை எனும் புத்தகம்)
இவருக்கு இனம் என்பது மதவழி இந்து இனம் என்பதை அறிவோம். ஆக அந்த இனத் தூய்மையைக் காப்பாற்ற

பிற மத இனங்களை வெளியேற்ற வேண்டும் என்பதே ஹிட்லரிடம் இவர் கற்றுக் கொண்ட பாடம்.
இந்த இனத் தூய்மைவாதம் மனுவாதத்தை ஏற்காதவர்கள் எல்லாம் இந்துக்கள் அல்ல என்று வந்து முடிந்தால் ஆச்சரியப்படாதீர்கள். இத்தகையவர்கள் அரசு அதிகாரத்துவத்திலும் ஹிட்லரைப் பின்பற்றி ஜனநாயக உரிமைகளை முழுமையாகப் பறிக்க முனைவார்கள் என்பதையும் எதிர்பார்க்க வேண்டியதுதான்.
நூரானி தனது நூலுக்கு தந்துள்ள முழுப் பெயர்: “ஆர்எஸ்எஸ்-இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தல்”. இந்த அபாயத்தை நாம் லேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தும்பை விட்டு வாலைப் பிடிக்கக் கூடாது. அதனுடைய மிரட்டல் மத நல்லிணக்கத்திற்கு, மனிதநேயத்திற்கு, மதச்சார்பற்ற அரசுக்கு, சட்டத்தின் ஆட்சிக்கு, சமதர்மச் சிந்தனைக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்.
ஏடறிந்த வரலாறு எல்லாம் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே. இந்தியாவின் வர்க்கப் போராட்ட வரலாற்றில் ஆர்எஸ்எஸ் எதிர்ப்பு ஒரு முக்கியமான அத்தியாயமாக இருக்கும். அதனது மனுவாத மதவெறியை முறியடிப்பது சோசலிச லட்சியத்திற்கான வர்க்கப் போராட்டப் பாதையை செப்பனிடுவதாகும்.மனு(அ)தர்மத்தை வீழ்த்தாமல் சமதர்மத்தை நோக்கி நகர முடியாது. அப்படியாக வர்க்கப் போராட்டத்தின் பிரிக்கவொண்ணா பகுதியாக இந்தப் போராட்டம் உள்ளது. இதை உணர்ந்து நமது உழைப்பாளி வர்க்கம் தனது கடமைகளில் ஒன்றாக இதையும் வரிக்கும். மனித குலமே உழைப்பால் பிறந்தது, உழைப்பால் சுழல்வது. அது மனது வைத்துவிட்டால் இந்த சங் பரிவாரம் எம்மட்டு?

அதன் வீழ்ச்சி உறுதி, நாட்டின் எழுச்சி நிச்சயம்.

# ஆசிரியர் அறிமுகம்

## அருணன்



மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் பேராசிரியராக பணியாற்றிய அருணன் ஏராளமான புத்தகங்களை எழுதிக் குவித்து வருபவர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் - கலைஞர்களின் சங்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். தமிழக மக்கள் ஒற்றுமை மேடையின்
ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராகவும் உள்ளார்.